
# கனிச்சாறு



## பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்

3

நாட்டுரிமை
தமிழீழம்

# பாவலரேறு
# பெருஞ்சித்திரனார்
# பாடல்கள்

(கனிச்சாறு)

**படையல்**

- எதிர்காலத் தமிழின மீட்பர்களுக்கும்
- தமிழீழ விடுதலைத் தலைவர்களுக்கும் மறவர்களுக்கும்
- அயல்நாடுகளில் வாழும் தமிழின மக்களின் முன்னேற்றத்திற்காக ஆங்காங்கு பாடுபடும் தமிழினத் தலைவர்களுக்கும்

**இந் நூற்றொகுதிகள் படையலாக்கப்படுகின்றன.**

– மூன்றாம் தொகுதி

முழுமையான
முதற்பதிப்பு : தி.பி. 2043. துலை ( அத்தோபர் 2012 )

நூல் தலைப்பு : **பாவலரேறு**
**பெருஞ்சித்திரனார் பாடல்கள்**
(கனிச்சாறு - மூன்றாம் தொகுதி)

ஆசிரியர் *பாவலரேறு பெருஞ்சித்திரனார்*

வெளியீடு *தென்மொழி பதிப்பகம்*
செந்தமிழ் அடுக்ககம்
(சி.கே. அடுக்ககம்)
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை - 600 100
94444 40449

அச்சாக்கம் : *தென்மொழி அச்சகம்,*
சென்னை - 600 100

உரிமை *தாமரை பெருஞ்சித்திரனார்*

பக்கங்கள் : 28+120

தாள் : படத்தாள் (மேப் லித்தோ 18.6)

அளவு : தெம்மி (1/8)

படிகள் : 1000

விலை : உரு. 120.00

# முன்னுரை

இயற்கை ஓர் ஒழுங்குடையது. நிலம் நெறியான ஓர் இயல்போட்டத்தை உடையது.கதிரவனும் விண்மீனும் ஓர் ஒழுங்கான அசைவை உடையன. புடவியும் பேரண்டமும் அவற்றுள் இயங்கும் பல்லாயிரங்கோடி இயற்கைக் கோளங்களும் சுடர்த் தொகுதிகளும் சிறிதே ஒழுங்கின்றி இயங்கத் தொடங்கினும் உடனே பேரழிவு நேரும்.

இவ்வியற்கை நிலையினைப்போல், இயற்கையுட்பட்ட அனைத்து நிலைகளிலும் அதனதற்குப் பொருந்திய ஓர் ஒழுங்கு கடைப்பிடிக்கப் பெறுதல் வேண்டும். இயற்கை அறிவிக்கும் இவ்வொழுங்கு சிதைவுறின், அச் சிதைவுக்கேற்ப, படிப்படியான அழிவுநிலைகளே நேரும் என்பதில் துளியும் ஐயமின்று.

உயிர்கள் அனைத்தினும் மேம்பட்டு விளங்கும் மாந்த இயக்கமும் அதன் பரும, நுண்ம நிலைகளுக்கு ஏற்ப, ஒழுங்குற இயங்குதல் வேண்டும் என்பதே இயற்கையின் உட்கோளாதல் வேண்டும். ஒழுங்கற்ற பரும இயக்கத்தால் உடல் சிதைவுறுதல்போல் ஒழுங்கற்ற உணர்வியக்கத்தால் உள்ளமும் சிதைவுறும். உள்ளச் சிதைவு மாந்தப் பேரழிவையே தோற்றுவிக்கும்.

உணர்வியக்கத்தின் தலைமைக்கூறு மொழி. மொழியின் படிநிலையுற்ற ஒழுங்கியக்கம் இலக்கணம். எனவே, இலக்கணச் சிதைவு மொழியைச் சிதைப்பதும், மொழிச் சிதைவு கருத்தைச் சிதைப்பதும், கருத்துச் சிதைவு உணர்வைச் சிதைப்பதும், உணர்வுச் சிதைவு உளத்தைச் சிதைப்பதும், உளச்சிதைவு உலகியலைச் சிதைப்பதும் ஒன்றினின்று ஒன்றெழும் தொடர் விளைவுகளாகும்.

மொழியின் மலர்ச்சியே பாட்டு. பாட்டுணர்வால்தான் மாந்தன் மீமிசை உயிருணர்வை எட்டுகின்றான். மற்ற உணர்வுகள் மாந்த உணர்வுகளிலேயே அவனைத் தேக்கி வைத்திருக்கையில், பாடல் உணர்வே புறவுணர்வுத் தளைகளைக் கட்டறுத்து, உலகியல் கூறுகளினின்றும் விடுவித்து, அவனை மீமிசை மாந்த நிலைக்கு உயர்த்து கிறது. பாட்டுணர்வு தாழ்ச்சியுறுதலால் அவன் உணர்வுயர்ச்சிக்குச் சறுக்கல் ஏற்படுகின்றது; உயிர்மைக்கு அயர்வு ஏற்படுகின்றது. இதனால் இயற்கைத் துய்ப்பு கெடுகிறது. உயிர்மை குன்றுகிறது; உலகியல் உணர்விருள் அவனைப் பற்றி

அலைக்கழிக்கின்றது. இவ் வியற்கைப் பொது நிலைகளை யொட்டி, ஒவ்வொருவரும் சில இன்றியமையாக் கலை, இலக்கியக் கூறுகளை உணர்ந்திருத்தல் வேண்டும். இவற்றுள் கலை புறமும் இலக்கியம் அகமும் ஆகும். இலக்கியத்தின் கொடுமுடி பாடல்! பிற அவற்றினின்று விரிந்து படரும் கொடிகளையும் கிளைகளையும் போன்றவை.

ஒழுங்கற்ற ஓசையைவிட ஒழுங்கான ஒலி உயிர்க்கவர்ச்சி உடையது. ஒலியொழுங்கோடு உணர்வும் சேருமாயின் உயிர்க் கவர்ச்சியுடன் உளக்கவர்ச்சியையும் அஃது உண்டாக்கி, அறிவுணர்வு உயர்ச்சியுடைய மாந்தனை அது தன்வயப்படுகிறது. இனி, உணர்வு சேர்ந்த ஒலியொழுங்குடன் ஏற்ற இறக்க அலைவொலிகள் அளவொத்து இணைதலும், பின் அவற்றுடன் ஏதாமொரு மொழி சேர்தலும், அவற்றைப் **பண்** என்றும் பாவென்றும் உயர்நிலைப்படுத்துவிக்கும். இப் பண்ணொடு தாளம் சேர்ந்து **இசை**யென்றும், பாவொடு கருத்துச் சேர்ந்து **பாடல்** என்றும் தமிழில் வழங்கும். இனி, பண்ணும் பாடலும் சேர்ந்து நடக்கும் இசைத்தமிழ் என்னும் ஒரு மொழியியல் மரபையே பண்டைத் தமிழ்மொழி முனைவோர் உலகோர் உணர்ந்துய்ய உண்டாக்கித் தந்துள்ளனர். வேற்றுமொழிகளில் இம் மொழியியல் கூறு தோன்றியிருப்பினும் தமிழ்மொழியில் உள்ளதுபோல், அஃது அத்துணையளவு தனித்தோ, சிறந்தோ இயங்கவில்லை யென்பதை அறிவினார் உணர்வர்.

இனி, பாடல் என்பது **பா தழுவிய கருத்துமொழி** என்று பொதுவில் பொருள் தரினும், அதற்கெனப் பல தனிக்கூறுகள் உண்டு. பாடல் இயற்கையாக வெளிப்படுதல் வேண்டும். மனமும் அறிவும் வயப்பட, உணர்வும் எழுச்சியும் மேம்பட்டுப் புறநிலையழுத்தத்தால் பீறிக் கொண்டு வெளியேறும் பாடலிலேயே இயற்கைச் சாயல் படிந்திருக்கும். **மொத்தத்தில் அஃது ஒரு வெளிப்பாடாக இருத்தல் வேண்டுமேயன்றி, வெளிப்படுத்துதலாக இருத்தல் கூடாது.** அவ்வாறு உள்ள நிலையில் அது சிறவாது; நிலைத்து நிற்காது; அதுவன்றிக் காலத்தில் கரைந்து போகும் தன்மையுடையதாக அஃது இருக்கும்.

ஓர் உணர்வு சான்ற இயற்கைப்பாடல் உணர்வுள்ள உள்ளங்களை மட்டுமேயல்லாது, உணர்வற்ற உள்ளங்களையும் அவையளவில் தொடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அஃதால் உயிர்க்கூறு படிப்படியாக மலர்ச்சி எய்துதல் முடியும். பிற உள்ளங்களை

ஆட்கொள்ளும் நிலையில் அஃது ஒரு மண்வெட்டியைப்போல் பயன்படுதல் வேண்டும். மண்வெட்டி பள்ளம் மேடுகள் நிறைந்த நிலத்திற்கே மிகுதியும் பயன்படுவதாகும். சமமான தரையில் அதன் பயன்பாடு மிகவும் குறைவே. வெறும் சுவைக்காக மட்டுமே வெளிப்படும் பாடல்கள் மாந்த உள்ளுணர்வுகளை வளர்த்து வாழ்விக்காமல் அவற்றை மழுங்கடித்துவிடும்.

பாட்டுணர்வு இயற்கையேயாயினும், அதன் புறக்கூறுகள் உலகியல் சான்றனவே. அப் புறக்கூறுகள் அசை படிந்த சொற்களாலும், சொற்களமைந்த சீர்களாலும், சீர்கள் இணைந்தியங்கும் யாப்பாலும், யாப்புடன் கூடிய அணியாலும், அணிபெற்றியங்கும் கருத்தாலும் விளங்கித் தோன்றுனவாகும். அவையே பாடலுக்குரிய தகுதிகளும் ஆகும். அவை பதினான்கு இன்றியமையாக் கூறுகளைக் கொண்டவை. அவை இவை:

**அ. சொற்கள்**

1. கருத்தாழம் நிரம்பிய தேர்ந்த சொற்கள்.
2. சுற்றி வளைக்காத சொல்லாட்சி.
3. வளங்கொழுவிய பொருத்தமான சொற்கள்.
4. குறைவான இடைச் சொற்கள்.

**ஆ. சீர் அமைப்பு:**

1. ஒலிநயத்தால் இணைகின்ற சீர் அமைப்பு.
2. கருத்தின் உணர்வுக்கேற்ற சீர் நீளம்.
3. வகையுளி அல்லது சொற்பிரிப்பால் பாட்டின் ஓட்டத்தையும் அழகையும் குறைக்காமல், முழுச் சொல்லால் அல்லது சொற்களால் அமைந்த சீர்கள்.

**இ. யாப்பு**

1. பிழையற்ற யாப்பு.
2. கூறப்போகும் கருத்தின் உணர்வை மழுங்கடிக்காத யாப்பு வகை.
3. உணர்வுயர்ச்சிக்கும் கருத்தகலத்திற்கும் ஏற்பத் தெரிந்தெடுக்கப் பெற்ற யாப்பு.

**ஈ. அணிகள்**

1. எளிதே விளங்கிப் பாடற் கருத்துடன் உடனே பொருந்துமாறு இருக்கும் உவமைகளும் உருவகங்களும்.

2. பாட்டின் பெருமையைக் குறைக்கும் பிற ஆரவார அணிகள் பெரிதும் தவிர்க்கப் பெறுதல்.

**உ. கருத்து**

1. மயக்கம் தராது உடனே புலப்படும் தெளிவு நிறைந்த கருத்து.
2. பொது மனத்திற்குப் புலப்படாத உயர்ந்த கருத்து.

இனி, முன்னைக் காலத்து, இயற்கை உணர்வின் ஒலியொழுங்குக் கொத்த மரபு தழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பிய ஓரிளம் பெண் பெற்றெடுக்கும், நல்ல அழகிய அறிவறிந்த நிறைமாதக் குழந்தைகள் போன்றவை. சோம்பலாலும் அறிவுக் குறுக்கத்தாலும் மன இழிவாலும் பிதுக்கப்பெறும் இக்காலத்து மரபு நழுவிய பாடல்கள், தாய்மையுணர்வு நிரம்பாத பெண்ணுரு சான்ற ஒருத்தி, அரைகுறை முதிர்ச்சியோடு பெற்றெடுக்கும், உறுப்புகள் குறைவுற்று அழகும் அறிவும் குறைந்த, குறைமாதக் குழந்தைகள் போன்றவை. நன்கு வளர்ச்சியுறாத உறுப்பு நிலைகளும், உணர்வு நிலைகளும், அக் குழந்தைகளைக் கவர்ச்சியற்றனவாகவும் நீடிய காலத் தங்குதலற்றனவாகவும் ஆக்கிவிடுகின்றன.

ஒழுங்கற்ற ஓசை இசையாகாததுபோல், ஒழுங்கான கட்டுக் கோப்பற்ற கருத்து வெளிப்பாடும் பாடலாகாது.

பாடல் உள்ளத்தின் மலர்; உணர்வின் மணம்; உயிரின் ஒலி யொழுங்கு.

பாடல் மலரிலிருந்தே உரைநடையென்னும் காய் தோன்றிக் கதையாகக் கனிகிறது.

பாடல் உணர்வு சிதைவுறுமானால் உரைநடையாக அது தத்துகிறது. உரைநடையில் பாடல் உண்டு. பாடலில் உரைநடை இல்லை. பாடல் உரைநடையாவது, மலர் தன் மென்மையையும் மணத்தையும் இழந்து பருமையும் வெறுமையும் உறுவது போன்றதே. அத்தகைய பாடற்போலிகள் தேங்காய் மட்டையின் ஊறலின்று அடித்தெடுக்கும் நார் போன்றவை.

இனி, உண்மையான பாடலை வெளிப்படுத்துபவனே உயர்ந்த பாவலன். **பாவலன் பிறக்கிறான்; பாடல் தோன்றுகிறது.** பாவலன் படைப்பாளன். அவன் உண்டாக்கித் தரும் உணர்வுருவாய கற்பனை மாந்தர்களையே இயற்கை பருவுருவாக உலகுக்குப் படைத்துத் தருகிறது. எனவே உலகின் இயற்கைப் படைப்புக்கே அவன் உணர்வுக் கருவைத் தருபவனாகிறான்.

உயர்ந்த உண்மைப் பாவலனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் பத்து. அவை, நுண்ணோக்கு, இயற்கையீடுபாடு, சொல்வன்மை, பாத்திறன், யாப்பறிவு, மொழியறிவு, கற்பனையாற்றல், மனவியல், நடுவுநிலைமை, துணிவு என்பனவாகும். இவை ஒன்றின் ஒன்று சிறந்து விளங்கிப் பாவலன் ஆற்றலைப் படிப்படியாக மிகுவிக்கின்றன. இத் தகுதிகளின் பொருத்தத்திற்கேற்பவே ஒவ்வொருவனின் பாடலும் ஒளிர்ந்து சுடரும்; காலத்தை வெல்லும்; மக்கள் கருத்தினை ஆட்கொள்ளும்; அறிஞர் மதிப்பினைப் பெறும்.

**கனிச்சாறு** என்னும் இப்பாடல் தொகுதி பல நூறு கற்பனைத் தோற்றங்களை உங்கட்குக் காட்டுவதாகும். பல வாழ்வியல் கூறுகள் இதில் சொல்லப் பெறுகின்றன. அறிவுநிலை விளக்கங்கள், உரிமை உணர்வுகள், மாந்தநிலை உயிரெழுச்சிக் கூறுகள், உள்ளுணர்வெழுப்பும் மெய்யறிவு நிலைகள், மொழியியல், இனவியல், நாட்டியல் புரட்சிக்கு வித்தூன்றும் அடிப்படை வரலாறுகள் முதலியன இப் பிழிவில் கலந்திருப்பதை நீங்கள் சுவைத்து உணரலாம்.

**கனியைப் பிழிந்திட்ட சாறு - எம்**
**கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!**

என்றும்,

**கனிச்சாறு போல்பல நூலெல்லாம் கண்டு**
**காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!**

என்றும், பாவேந்தர் பாரதிதாசன் தமிழையும் தமிழ்ப் பனுவலின் இனிமையையும் உணர்த்தக் கனிச்சாற்றை உவமை பேசுவார்.

எனவே தமிழும் தமிழுணர்வும் செறிந்து விளங்கும் இப்பாடல் தொகுதிக்குக் **கனிச்சாறு** என்று பெயர் தரப்பெற்றது. மிக அரும்பாடுபட்டு இத் தொகுதித் தொடர்கள் வெளியிடப் பெறுகின்றன.

தமிழினம் தன் நிலைப்பாட்டு மேன்மைக்கு இத் தொகுதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாக.

சென்னை - 5 அன்பன்

14-4-1979 **பெருஞ்சித்திரன்**

# முதல் பதிப்பு - பதிப்புரை

உலக வரலாற்றிலேயே தலைசிறந்தது மாந்த வரலாறாகும். அதனுள்ளும், நம் முதுபழங் குமரித் தமிழிய வரலாறோ, மூல முதன்மையும், உயர் மாந்தத் தனிச்சிறப்பும் வாய்ந்ததாகும்.

அத் தென்குமரித் தலைக்கழக(சங்க)க் காலத்து முத்தமிழ் மீமிசை மாந்த வாழ்வியலின் ஏந்திய பண்பு நலன்கள் யாவும், அடுத்து வந்த இடைக்கழகக் காலந்தொட்டே, (பிற்காலக் கீழை) வேத ஆரியத்தின் நுழைவால் தாக்குண்டு சீர்குலையத் தொடங்கின. அதுமுதலே, ஆரிய எதிர்ப்பியக்கங்களும், தொடர்ந்து, பரவல் சிதறலாகத் தமிழகத்தில் தோன்றி வரவே செய்தன. ஆனால், அவை எவற்றுக்கும் ஆரியத்தை அடிதுமித்துச் சாய்த்துத் தமிழ் மீட்பினை நிலைநாட்டித் தரும் மொய்ம்புரம் வாய்க்கவில்லை.

இறுதியாக, சென்ற நூற்றாண்டில், மேலைநாட்டு நல்லறிஞரால் விழிப்புறுத்தப் பெற்றும், **மறைமலையடிகளாரின்** தனித்தமிழ்த் தொண்டினாலும், **பெரியாரின்** இனமானத் தொண்டினாலும் இந் நூற்றாண்டில் புத்துரமூட்டப் பெற்றும், பல மறுமலர்ச்சி இயக்கங்கள் தமிழகத்தில் தோன்றலாயின. அவற்றின் ஒட்டுமொத்த முயற்சிகளின் மெய்வருத்தக் கூலியாக, இன்று **மொழிஞாயிறு பாவாணர்** அவர்களின் மொழிமுதற் புலத்தில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்களின் உரன்வல அறிவாண்மைப் படை கொண்டு முனைந்துழுது, 'தென்மொழி' என்னும் இதழ்வாயிலாக, தேடரிய தெளிவியக்கம் ஒன்று புரட்சிக்கால் ஊன்றி, ஆள்வினையும் ஏற்றுள்ளது.

அத் 'தென்மொழி இயக்க'த்தின், வினை வேளாண்மைக்கென மொழி - இன - நாடு தழுவிய பல்வேறு துறைகளிலும், **பாவலரேறு** அவர்கள், முப்பது ஆண்டுகட்கும் மேலாக, பன்னூற்றுக் கணக்கில் பாடிக் குவித்துள்ள அரும்பாடற் கனிகளையே இங்ஙனம் தொகுத்து, '**கனிச்சாறு**' ஆகப் படைத்துள்ளோம். அவ்வமிழ்தச் சாற்றினை ஆரப் பருகும் எவரும், தமிழியக் குடிசெயலுக்கு வேண்டிய 'வீறெய்தி மாண்ட' வினைத் திட்பம் பெற்று, தொண்டாற்ற முன்வர வேண்டுதலே எமது பெருநோக்கம் ஆகும்.

இப் பாடற் களஞ்சிய வெளியீட்டுத் திட்டம், கோவை மாவட்டத் தமிழன்பர்களின் அருமுயற்சியால் இயல்வதாகி, தி.பி. 2006இல் அறிவிக்கப் பெற்று, தி.பி. 2008 முதல் செயலாக்கங்

கொண்டு, இக்கால் முழுமையாக்கப் பெற்றுள்ளது. இத்திட்டத்தை வினைப் படுத்திய **தென்மொழி ந. முத்துக்குமரனார்**, அவர் துணைவர் **தென்மொழி மறை. நித்தலின்பனார்**, ஊக்கப்படுத்திய **திரு.க. ஆகுன்றன்**, கொடை நல்கி வலந்தந்த புரவலன்மார் ஆகிய அனைவரும் தமிழின மீட்பு வரலாற்றில் என்றும் நீங்கா இடம்பெறும் சிறப்புடையர். வெல்க எம் தமிழும்! மலர்க நல்லுலகம்!

பணிவுடன்,

*14.4.1979* **'கனிச்சாறு வெளியீட்டுக் குழு'**

# வெளியீட்டுரை

கனிச்சாறு(பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள்) தொகுதி முதற்பதிப்பு 1979இல் வெளிவந்தபின், 1995 இல் பாவலரேறு மறைவுவரை வெளிவந்த அனைத்துப் பாடல்களும் தொகுக்கப் பெற்று முழுமைபெற்ற முதற்பதிப்பாக இப்போது வெளிவருகிறது.

முதற்பதிப்பின் முத்தொகுதிகளும் தென்மொழியில் சுவடி : 14; ஓலை : 12 வரையிலும் மற்றுத் தமிழ்ச்சிட்டில் குரல் : 9; இசை: 12 வரையிலும் வெளிவந்த பாடல்கள் அளவிலேயே அமைந்தன. அதன்பின் தொடர்ந்து வந்த இதழ்களின் பாடல்கள் அனைத்தும் துறைவாரியாகப் பிரிக்கப்பெற்று எண்தொகுதிகளாக இப் பதிப்பு நிறைவு செய்யப்பெற்றுள்ளது. மேலும், ஐயா அவர்கள் தம் இளமைக் காலத்தில் எழுதியனவும் இதுகாறும் அச்சுக்கு வராதனவுமான பாடல்கள் சில, பழைய குறிப்புச் சுவடிகளினின்றும் எடுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன; அன்றியும் ஐயா அவர்கள் அன்பர்கள் பலருக்குப் பல்வேறு நிகழ்வுகளையொட்டி எழுதியனுப்பிய பாடல்கள் பல, அவ் அன்பர்களிடமிருந்து பெறப்பட்டும், சில ஐயா அவர்களின் சுவடிகளிலிருந்து எடுத்தும் இணைக்கப்பட்டுள்ளன. (பழைய பாடல்களில் ஒரோவழி இடம் பெற்றிருந்த அயன்மொழிச்சொற்கள் வரிவடிவில் வேறுபடுத்திக் காட்டப் பெற்றுள்ளன.)

மொத்தத்தில், ஐயா அவர்களின் தனி இலக்கியங்களான கொய்யாக்கனி, ஐயை, பாவியக்கொத்து, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, நூறாசிரியம், உலகியல் நூறு, கழுதை அழுத கதை, அறுபருவத் திருக்கூத்து ஆகியன அல்லாத பிற பாடல்கள் அனைத்தும் தொகுக்கப்பெற்றுப் 'பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் தனிப்பாடல்கள் _ அடங்கல்' என்னுமாறு இப்பதிப்பு முழுமையான பதிப்பாக வெளிவருகிறது. அவ்வகையில் இதுவே முதற் பதிப்பு எனலாம்.

பாடல்கள் அனைத்திற்கும் முன்னைப் பதிப்பின் போக்கிலேயே தொடர்ந்து பாடல்கள் விளக்கக் குறிப்புகள் எழுதிச் சேர்க்கப் பெற்றுள்ளன.

இயற்றப்பெற்ற அல்லது வெளிவந்த காலத்தையொட்டி ஆண்டு, மாத முறைப்படி பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டிருப்பது இப்பதிப்பின் தனிச்சிறப்பாகும்.

பழைய பாடல்கள் சில எழுதப்பெற்ற காலம் தெளிவாகத் தெரியாமையால், அப்பாடற்குரிய ஆண்டையொட்டி **வினாக்குறி** யிடப்பட்டுள்ளது.

இக் கனிச்சாறு தொகுதிகளில், தமிழ்,இந்தி யெதிர்ப்புப் பற்றிய பாடல்கள் முதல் தொகுதியாகவும், இன எழுச்சிப் பாடல்கள் இரண்டாந் தொகுதியாகவும் அமைந்துள்ளன; நாட்டுரிமை பற்றிய மூன்றாந் தொகுதியில் நாட்டுரிமை, தமிழீழம் என்னும் பிரிவுகளிலான பாடல்கள் இடம்பெற்றுள்ளன; இளைய தலைமுறை, பொதுமை, இயக்கம் ஆகியன பற்றிய பாடல்கள் நான்காந் தொகுதியாகவும், குஞ்சுகளுக்கு, பறவைகளுக்கு, மணிமொழி மாலை என்னுந் தலைப்புகளில் அமைந்த பாடல்கள் ஐந்தாந் தொகுதியாகவும் கொள்ளப்பெற்றுள்ளன; ஆறாந் தொகுதியாவது காதல், இயற்கை, இறைமை என்னும் பிரிவுகளைக் கொண்ட பாடல்கள்; தன்னிலை விளக்கம், பெருமக்கள் சிறப்பு, திருநாள் வாழ்த்து, திருமண வாழ்த்து, மதிப்புரைகள் முதலியனவாகிய பாடல்கள் ஏழாந் தொகுதியில் வைக்கப் பெற்றுள்ளன. பாட்டரங்கப் பாடல்கள் எட்டாந் தொகுதி.

2009இல் தமிழக அரசு, பாவலரேறு அவர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பெருமை கொண்டது. அதனால் அவர்தம் படைப்புகளைப் பலரும் வெளியிட வாய்ப்பு ஏற்பட்டது. எனினும் வெளிவராத பாடல்கள் பலவற்றையும் நாம் வெளியிட்டால் மட்டுமே மற்றவர்கள் வெளியிட வாய்ப்பு ஏற்படும் என்பதால் நாம் முழுமையாக வெளியிட வேண்டிய தேவை ஏற்பட்டது.

எட்டுத் தொகுதிகளையும் ஒரே நேரத்தில் வெளியிடுவதற்குப் பெரும் பொருள் தேவைப்பட்டதால், முன்வெளியீட்டுத் திட்டம் 'தென்மொழி' யில் அறிவிக்கப் பெற்றது.

தென்மொழி அன்பர்கள் பலரும் முனைந்து தொகை அனுப்பி வைத்திருந்தனராயினும், அத் தொகை, தேவையான எல்லைக்கு மிகவும் குறைவான அளவையே நிறைவு செய்தது. நாமும் அந்தக் காலக்கட்டத்திற்குள் வெளியிட இயலாமல் சற்று காத்திருக்கநேர்ந்தது.

அவ்வாறு காத்திருக்கும் காலத்திற்குள்ளும் எதிர்மம், அச்சுக்கூலி, தாள் இவற்றின் விலையேற்றம் அளவு கடந்து உயர்வும் பெற்றன. அவற்றையும் நெருக்கியே வெளியிட வேண்டியதாயிற்று.

இனி, தமிழ்மக்கள் தம் மொழிநலத்தையும் வாழ்வியற் சிறப்புகள் சீரழிவுகள் ஆகியவற்றையும் உணர்ந்து, அறிவிலும் ஆற்றலிலும் உயர்ந்து, எழுச்சிபெற்று, இனநலம் பேணி, நாட்டுரிமை பெற்று வாழ்வாங்கு வாழ வகைசெய்யும் கருத்துத் தெளிவும் உணர்வுச் செழுமையும் வாய்ந்த பாடல் திரட்டான இக் கனிச்சாறு தொகுதிகளைத் தமிழ்கூறும் நல்லுலகம் வரவேற்றுப் பயன்கொண்டு சிறக்கும் என்று நம்புகின்றோம்.

– தென்மொழி பதிப்பகத்தினர்

# கனிச்சாறு மூன்றாம் தொகுதி

**(தமிழ்நாட்டுரிமை, தமிழீழம்)**

## பொருளடக்கம்

பாடல் எண் பாடல் தலைப்பு பக்க எண்.

### தமிழ் நாட்டுரிமை


| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 1. | சீறியெழு! | 3 |
| 2. | எந்நாளோ? | 4 |
| 3. | புரட்சித் தீ! | 6 |
| 4. | குயிலே! | 7 |
| 5. | என்றையோ? | 8 |
| 6. | மாரிவாயில்! | 8 |
| 7. | அமைச்சருக்கு வேண்டுகோள். | 9 |
| 8. | ஏய்ப்பாரை மாய்த்தல் வேண்டும். | 10 |
| 9. | இருள்மிகு நாடே! | 11 |
| 10. | எத்தனை நாள் போராட்டம்? | 11 |
| 11. | தமிழ்நிலத்தை விடுவிப்பீர்! | 12 |
| 12. | குரங்கர் ஆட்சி! | 12 |
| 13. | என்னைத் தூக்கிலிடுங்கள்! | 13 |
| 14. | வழி பிறிதுண்டோ? | 17 |
| 15. | தமிழ்நாட்டு நிலை! | 17 |
| 16. | எச்சரிக்கை! | 18 |
| 17. | வேண்டும் விடுதலை! | 18 |
| 18. | பகை விலகாதோ! | 19 |
| 19. | நாடு நலம்பெறுதல் குதிரைக் கொம்பே! | 19 |
| 20. | விடுதலை வேண்டும்! | 20 |
| 21. | பிரிவினைக்கு வழி வகுப்போம்! | 20 |
| 22. | புரட்சி நாள்...! | 21 |
| 23. | ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை...! | 21 |
| 24. | சாகின்ற செந்தமிழீர்...! | 21 |
| 25. | உருப்படியாகாதடா! | 22 |
| 26. | இறுதி உரை | 23 |
| 27. | நாளையே விடுதலை! | 24 |
| 28. | விடுதலை மருந்து! | 24 |
| 29. | தன்னாட்சி வேண்டும்! | 25 |
| 30. | என்றும் ஒரே நிலை ஏன்? | 26 |
| 31. | வங்காளம் தரும் பாடம்! | 27 |
| 32. | தமிழ் நிலத்தை மீட்பீர்! | 34 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|
| 33. | வேடிக்கையன்று விடுதலை! | 34 |
| 34. | மதுரையில் விடுதலை ஊர்வலம்! | 35 |
| 35. | அடிமை நினைவுக்கு அனல் மூட்டுக! | 37 |
| 36. | விடுதலை வேண்டும்! | 38 |
| 37. | விடுதலை நாடுவாய்! | 39 |
| 38. | அதர்ந்தெழுவாய்! | 41 |
| 39. | வீரநடை நடப்பீர்! வீர அணி வகுப்பீர் | 41 |
| 40. | பூட்டறுக்கப் புறப்படுவீர்! | 42 |
| 41. | அறப்பழி குலுங்கும் ஆளுமை! | 43 |
| 42. | அனைத்து முன்னேற்றங்களுக்கும் ஒரேவழி தமிழ்நிலம் தன்னுரிமை பெறுதலே! | 44 |
| 43. | இழந்த உரிமைகள் உழந்து பெறுக! | 45 |
| 44. | ஏறுநடை போட்டுநட! | 46 |
| 45. | வெற்றிக்கொடி நாட்டு! | 47 |
| 46. | கதிரவ விடுதலை ஒளிவான் படருமோ? | 48 |
| 47. | பொருளியல் பொதுமைக்கும் புரட்சிக்கும் வித்து! | 48 |
| 48. | இந்தியப் புலத்தினில் புரட்சி மேகங்கள்! | 49 |
| 49. | புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்டதிங்கே! | 50 |
| 50. | ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிது! | 51 |
| 51. | மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே! | 52 |
| 52. | மீட்போம் தமிழ்நாடு! | 53 |
| 53. | அதுதான் என் ஆசை! | 54 |
| 54. | உரிமை ஒடுக்கமே விடுதலை முழக்கம்! | 55 |
| 55. | இறுதி நேரம் உனக்கிது! | 56 |
| 56. | தமிழகத்தை வடநாட்டார் ஆள ஒப்பமாட்டோம்! | 57 |
| 57. | அடடா! ஓ! அடுத்தது நம் ஆட்சி இங்கே! | 58 |
| 58. | தமிழ்நிலம் மீட்போம்! | 59 |
| 59. | உரிமை பெற விரும்பாத உளமென்ன உளமோ? | 59 |
| 60. | உரிமைக் கோரிக்கையின் குரல் வளைகளை நெரிக்காதீர்! | 60 |
| 61. | முனைப்புற்ற தொண்டர்களே முனைதல் வேண்டும்! | 61 |
| 62. | தமிழ்நாட்டைப் பெறாமல் தமிழர் வாழ்வில்லையே! | 62 |
| 63. | இந்தியன் என்றால் என்னது தம்பி! | 63 |
| 64. | ஊரதிரும் புரட்சி ஒன்று தேவையே! | 64 |
| 65. | வாய்வீரம் பேசுகிறாய்! துயரில் பின் வாங்குகிறாய்! | 65 |
| 66. | மண்ணுரிமை மீட்பதென்றோ? | 66 |
| 67. | எத்தனை முறை எனைச் சிறையிட்டாலுமே என்கொள்கை மாறாது | 67 |
| 68. | தமிழ்நாடு தமிழர்க்கே! | 68 |
| 69. | பிடுங்கிய உரிமையை மீட்பது தவறா? | 69 |
| 70. | தமிழ்நாட்டின் உரிமை மீட்போம்! | 69 |

| பாடல் எண் | பாடல் தலைப்பு | பக்க எண். |
|---|---|---|

## தமிழீழம்

| | | |
|---|---|---|
| 71. | இலங்கைத் தமிழர்க்கு என் கண்ணீர்! | 73 |
| 72. | சிங்கள இனமே! சிங்கள இனமே! | 79 |
| 73. | நெஞ்சை உருக்கும் நிலை. | 80 |
| 74. | ஒன்றுகாண் உலகத் தமிழினம்! | 81 |
| 75. | புதுச்சூள் உரைப்பீர்! | 82 |
| 76. | தென்னவர் இனமே! தென்னவர் இனமே! | 83 |
| 77. | நாங்கள் புலிகள். | 84 |
| 78. | கன்னித் தமிழ்நிலம் உணருமா ? புதுக்கதை தரும் உரிமைகள் மலருமா? | 85 |
| 79. | தந்தை செல்வா பெயரால் தழைக்கும் தமிழீழம். | 86 |
| 80. | இன்னும் பொறுத்திடலாமோ? | 87 |
| 81. | தமிழீழ மறவரைத் தமிழால் வணங்குவேன்! | 88 |
| 82. | தூக்கில் இடவேண்டாம்! | 89 |
| 83. | பேச்சுரையால் தமிழீழம் பிறப்பதில்லை! | 90 |
| 84. | ஆனால், தமிழ் நெஞ்சங்களே! வீரத்தமிழ் மறவர்களே! உங்களைப் பதறப் பதற வாரிக் கொடுத்து விட்டோமே! | 92 |
| 85. | தமிழீழம் வாழ்க! | 95 |
| 86. | போக்கற்றோம்! போக்கற்றோமே! | 96 |
| 87. | இந்தக் குழந்தைகள் தமிழக் குழந்தைகள்! | 96 |
| 88. | அழுகிறாய் கண்ணே! அழாதே! | 97 |
| 89. | தமிழீழப் பெண்கள் எழுச்சிப் பண்! | 98 |
| 90. | தமிழ்மானம் நிலைபெறும்! | 99 |
| 91. | தரைபிளந்து விழுங்குவாயே! | 100 |
| 92. | புலியோ புலி! | 101 |
| 93. | பகைவென்றிட விலையெனில் முழு இனம் விழுமே! | 102 |
| 94. | இனம், நிலம் மீட்க இணைந்து செய்க! | 103 |
| 95. | சீரழிவும் செஞ்சோற்றுக் கடனும்! | 106 |
| 96. | யாருக்காக அழுகிறாய்? | 107 |
| 97. | ஓ! பிரபாகரனே! கதிர்க்கையனே! நீ எங்கே இருக்கிறாய்? | 108 |
| 98. | இட்டசாவம் முட்டுக! | 112 |
| 99. | பிரபாகரன் பிறந்த நாள் வாழ்த்து! | 114 |
| 100. | மாவீரர் நாளிலே, மலர்க தமிழீழமே! | 115 |
| 101. | அனைத்துத் தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்! | 116 |
| 102. | மானங் கெட்டதுகளும்! மதி கெட்டதுகளும்! | 117 |
| 103. | எனைச் சிறை செய்யினும் செய்க! | 118 |
| 104. | ஆகுமோ உலகு, அவள் அழிவிலாப் புகழ்க்கே? | 119 |
| 105. | வெட்கப் படுவதே நல்லது; அதனினும் துட்கென உயிரைத் துறப்பதும் நல்லதே! | 120 |

# கனிச்சாறு மூன்றாம் தொகுதி

(தமிழ் நாட்டுரிமை, தமிழீழம்)

## பாடல் விளக்கக் குறிப்புகள்

### –தமிழ் நாட்டுரிமை–

1. தமிழகத்தின் உரிமைகளை (1952-ஆம் ஆண்டுத் தேர்தலிலும் பேராய (காங்கிரசு)க் கட்சி வெற்றி பெற்று) இந்திய அரசு ஒவ்வொன்றாய் பறித்துக் கொண்ட நிலைகளை விளக்கித் தமிழரை எழுச்சி கொள்ள வைக்கும் நோக்கில் எழுதப் பெற்றது. தென்மொழி தொடங்கப் பெறுவதற்கு 7-ஆண்டுகளுக்கு முன்பாக எழுதப் பெற்றது.

2. தமிழர்க் கென்று தனித்த நாடு வேண்டப் பெற்று எழுதப் பெற்றது. (பாடலின் முதல் வரியில் 'திராவிடத்தை'-எனும் சொல் கையாளப் பெற்றிருந்தாலும் அது தமிழகத்தையே பொருள் படக் கொண்டது).

3. பள்ளியில் சமற்கிருதத்தைப் பாடமொழியாக ஆக்கவேண்டும் என்று இந்திய அரசு தீர்மானித்த பொழுது கொளுத்திய புரட்சித் தீ.

4. பாரதிதாசனாரின் 'குயில்' மீண்டும் வெளிவந்தபொழுது அதில் வெளியிடப் பெற்ற விளிப்பாட்டு.

5. மக்கள் பண்பாட்டாலும், சூழ்ச்சிகளாலும், நாகரிகப் புன்மைப் போலி உணர்வுகளாலும் தாழ்ந்துபோகும் நிலைகண்டு வருந்திப் பாடியது.

6. வடவர்க்கு ஒரு முகில்விடு தூது.

7. பிரிவினை பேசுவது பிழை என்ற ஆட்சியாளர்க்கு விடையாகக் கூறியவை.

8. இப்பாடல் பேராயக்கட்சி தமிழகத்தை ஆண்டு கொண்டிருந்த 1960ஆம் ஆண்டு வாக்கில் எழுதப்பெற்றது. ஐயா அவர்களின் சுவடியில் இருந்த இப்பாடல் இதுவரை அச்சில் வராதது. இடையில் தென்மொழி இல்லத்துள் தண்ணீர் புகுந்து அழித்துவிட்டதால் அழிந்துபோன பகுதிகளிலிருந்து பெயர்த்தெழுதியதில் சரிவரத் தெரியாத வரிகள் இவ்வாறு கோடிடப்பட்டுள்ளன. பேராயக்கட்சி அமைச்சர்களின் செவிசாய்க்காப் போக்கைக் கண்டிக்கிறது இப்பாடல்.

9. நாட்டினுள்ள இருண்டநிலை. ஓர் ஏக்கம்.

10. 1965-ஆம் ஆண்டில் நடந்த மாணவர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு உணர்வூட்டமாக நின்றவை இத்தகைய பாடல்களே. இந்தியின் ஆளுமையினை மீட்கவும், தமிழைக் கட்டிக் காக்கவும் எழுதப்பெற்ற நூற்றுக்கணக்கான பாடல்களுள் இதுவும் ஒன்று.

11. அரசியலை நடத்துகின்ற அமைச்சர்களின் கொடுமைகள் கண்டு கொப்பளித்தது.

12. பேராயக் கட்சியின் அன்றைய முதலமைச்சராய் இருந்த பத்தவச்சலத்தின் ஆளுமைப் போக்கைக் கடிந்து பாடியது.

13. 1965- இல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக ஆசிரியர் சிறைப் படுத்தப்பட்டிருந்தபோது கடலூர்க் கிளைச் சிறையினின்று எழுதி விடுத்த பாடல்.

14. அரசியலை நடத்துகின்ற அமைச்சர்களின் கொடுமைகள் கண்டு கொப்பளித்தது.

15. தமிழ்நாட்டின் கயமை நிலைகளை அடுக்கிக் கூறியதாகும் இது.

16. ஒரு சூளுரை.

17. இடியாய் ஒரு வேண்டுகை.

18. இளைஞர்களுக்கு ஓர் உணர்வூற்றம்.

19. மக்களிடை ஒருபுறத்தில் எவ்வளவு நல்விளைவுகள் ஏற்பட்டாலும், கீழ்மையுணர்வுகளை வளர்க்கின்ற திரைப்படங்களாலும் செய்தித்தாள்களாலும் மக்கள் நலம் பெறுதல் அருமை எனுங் கருத்தை வலியுறுத்துவதாகும் இப் பாடல்.

20. ஒருமைப்பாடு என்றும், உறவு என்றும் வடவனோடு உறவாடும் தமிழக அமைச்சர்களைக் கண்டித்ததோடு, விடுதலையே வேண்டும் என்பதைச் சொல்லச் சொல்லும் பாடல்.

21. தமிழக ஆட்சியாளர் ஒவ்வொரு நலத்திற்காகவும் வடவரிடம் போய் நயந்து இரக்க வேண்டியதில்லை; தமிழகப் பிரிவினையே பல நலன்களுக்கும் வழிவகுக்கும் என வலியுறுத்த எழுந்தது.

22. தமிழ் நாட்டில் ஒரு பெரும் புரட்சி விரைவில் கிளர்ந்தெழும் என்பதைச் சுட்டி எச்சரித்த பாடல்.

23. நாட்டுணர்வை மக்களிடத்தில் எழுப்புவதற்காக எழுதப்பெற்ற பாடல்களில் இதுவும் ஒன்று.

24. விடுதலைக்கான களத்தில் நமக்குத்துணை நாமே என்னுங் கருத்துடையது.

25. தமிழ் நாட்டிலுள்ள சாதி சமயப் புரட்டுகள், அரசியல் தில்லுமல்லுகள் முதலியவற்றால் மக்கள் உணர்வு மழுங்கிக் கிடப்பதை நினைவூட்டி எழுந்த பாடல்.

26. ஆரியப் பார்ப்பனர்கள் விளைவிக்கும் குமுகாயக் கேடுகளை அவர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும். அல்லாவிடில் இறுதியில் அவர்கள் அழிவுற வேண்டியிருக்கும் எனும் எச்சரிக்கையாக எழுந்தது இது.

27. அடிமைத் தமிழர்கள் தங்கள் இன இழிவைப் போக்கிக் கொண்டாலொழிய அடிமைத் தளைகளை உடைத்தெறிய இயலாது எனுங் கருத்தமைந்தது.

28. கேட்கப் பெறாமல் விடுதலை கிடைக்கப் பெறுவதில்லை எனுங் கருத்தை வலியுறுத்துவது.

29. கொள்கை விளக்கப் :பாடல். ஆசிரியரின் மூன்று உயிர்க் கொள்கைகளுள் ஒன்றை வலியுறுத்துகிறது. தமிழ்மொழி வடமொழியினின்றும் மீளவேண்டும்; தமிழினம் வேற்றின அடிமைப் படுத்தத்தினின்றும் மீளவேண்டும்; தமிழ்நிலம் வடவரின்

வல்லாளுமையினின்றும் மீளவேண்டும் என்பவையே அம்மூன்று கொள்கைகளாகும். இறுதிக்கொள்கையைக் கரணிய கருமிய முறைப்படி வலியுறுத்துவதாகுமிப் பாடல்.

30. 1971-இல் தேர்தல் காலத்து எழுதப் பெற்றது. வெறுந் தேர்தல்களால் மட்டும் மக்களுக்கு எவ்வகையான பெரும்பயனும் விளைந்துவிடப் போவதில்லை என்னும் கருத்தை உணர்த்துவது.

31. கிழக்கு வங்கத்தில் ஏற்பட்ட விடுதலை எழுச்சிகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களும் அவ்வாறு தங்களை அடிமை நீக்கம் செய்துகொள்ள வேண்டும் என்னும் வேண்டுகோளோடு எழுந்தது இப்பாடல்.

32. தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு - எனும் தலைப்பில் (1972-இல் திருச்சியில் தமிழக விடுதலை மாநாட்டை நடத்தத் திட்டமிடும் நோக்கிலான செயல்பாடுகளை ஒட்டி எழுதப் பெற்ற பாடல்.

33. தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு - எனும் தலைப்பில் (1972-இல் திருச்சியில் தமிழக விடுதலை மாநாட்டை நடத்தத் திட்டமிடும் நோக்கிலான செயல்பாடுகளை ஒட்டி எழுதப் பெற்ற பாடல்.

34. 1973-இல் தென்மொழிச் சார்பில் மதுரையில் நடத்தப் பெற்ற தமிழக விடுதலை மாநாட்டு ஊர்வல எழுச்சிச் சிறப்பைப் பாடியது.

35. பாவலரேறு ஐயா அவர்களைச் சிறப்பாசிரியராகவும், திரு. க.வெ. நெடுஞ்சேரலாதன் என்பவரை ஆசிரியராகவும் கொண்டு மதுரையிலிருந்து வெளிவந்த 'தீச்சுடர்' எனும் மாத இதழின் முதல் இதழில் வெளிவந்த பாடல் இது.

36. இப்பாடலும் 'தீச்சுடர்' இரண்டாம் இதழில் வெளிவந்தது. பெற்றோர், உற்றோர், பிள்ளைகள், மனைவியைப் பார்க்கிற எந்த வேலையையும் பிறகு செய்யலாம். விடுதலை பெறுவதே நம் முதல் வேலை என்று கற்றார், கல்லாதவர் அனைவருக்கும் அழைப்போலை கொடுக்கிறார் பாவலரேறு ஐயா அவர்கள்.

37. இப்பாடலும் 'தீச்சுடர்' இதழில் வெளிவந்தது. அடிமை நிலையில் உறங்கிக் கிடக்கும் தமிழனின் நிலையுணர்த்தி மொழி, இனம் விடுதலையை நாடுவாய் எனத் தமிழனை அழைக்கிறார் பாவலரேறு.

38. சென்னையில் 1975-இல் நடத்தத் திட்டமிடப்பட்ட தமிழக விடுதலை 3-ஆம் மாநாட்டினையொட்டி வெளிவந்த தென்மொழி அட்டைப் பாடல். உறங்கும் தமிழனை எழுப்பும் செய்தியைக் கொண்டது.

39. வீர மறவரின் படை நடைப் பாட்டு.

40. அரசியலாளரைக் கேட்டுப் பயனில்லை; தமிழர்கள் ஒன்றுகூடி போர்ப்பறை கொட்டி எழல் வேண்டும் என்னும் உணர்வை உணர்த்துவது.

41. தமிழக விடுதலைக் கொள்கையராய் இருக்கிறார் என்பதற்காக நெருக்கடிநிலை அடக்குமுறைக் காலத்தில் இந்திரா அம்மையாரால் கொடுநெறிச் சட்டத்தின் கீழ்ப்

பாவலரேறு ஐயா அவர்கள் ஓராண்டு சிறையிலடைக்கப் பட்டிருக்கையில் எழுதப்பெற்ற பாடல் இது. அக்கால நெருக்கடிநிலைச் சூழலையும், அதனால் வெஞ்சிறையில் அடைக்கப்பட்டோர் நிலையையும் விளக்கி, அவற்றினின்று இந் நாடு உய்க என்கிறார் ஐயா அவர்கள்.

42. இப்பாடல் 1979-ஆம் ஆண்டு தாராபுரம், தமிழ்க்கலை மன்ற ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா மலரில் வெளிவந்தது. கட்சிகள், இயக்கங்கள் பலவாய் இருந்து எதுவும் தமிழின முன்னேற்றங்குறித்துத் தெளிந்த அரசியலோடு இயங்காமல் இருக்கிற சூழலில் 'செய்யாத சமையலுக்குக் காத்திருக்காமல்' தமிழ்நிலம் மீட்க ஒருவழியாய்ச் சிந்திக்க அழைக்கிறார் பாவலரேறு.

43. திருவள்ளுவரின் உருவச்சிலை கொண்ட படம் தாங்கிய தென்மொழி அட்டைப்பாடல் இது.

44. நெருக்கடி நிலைக்கால ஆட்சியில் இந்திரா பேராயத்தால் அடக்கப்பட்டு நசுக்குண்ட தி.மு.கழகம் மீண்டும் இந்திரா பேராயக் கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து தமிழின வீழ்ச்சிக்கு அடிகோலிய காலச்சூழலில் எழுதப்பெற்றது இப்பாடல்.

வந்தவர்க்கு வால் பிடித்து, சொந்த மொழி, இன நலத்தை விட்டுச் சோற்றுக்கு மண்டியிடும் தமிழனே ஏறுநடை போட்டு நட! எக்காளம் ஊதி நட! என்கிறது இப்பாடல்.

45. இப்பாடலும் கடந்த பாடல் எழுதப்பெற்ற காலச் சூழலிலேயே எழுதப்பெற்றது. அக்கால் தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் முதலில் ஒன்று சேர்வதாக இருந்து பின்னர், ஆளுக்கு ஓர் இந்தியக் கட்சிக்கு அடிமையாய்ப்போன போக்கை எண்ணித் திராவிடக் கட்சிகளின் தம்பியை அழைத்துப் பாடிய பாடல் இது. தலைவர்கள் மக்களைத் தனியே விடுத்திட்டச் சூழலில் வேகம் தளராமல், வெம்மை குளிராமல் வெற்றிக்கொடி நாட்ட வீர நடையில் படை கூட்ட அழைக்கிறார் பாவலரேறு.

46. ஆசிரியர் அவர்கள்தம் ஐரோப்பியச் சுற்றுச் செலவை முடித்துக் கொண்டு வந்தபின் வெளிவந்த தென்மொழி இதழின் அட்டைப்பாடல். உலகம் முழுதுமுள்ள தமிழரின் உரிமை உணர்வெழுச்சியைக் கண்டெழுதியது இது.

47. பாவலரேறு ஐயா அவர்களை முதல்வராய்க் கொண்ட உலகத் தமிழின முன்னேற்றக் கழகமும் உறுப்பியக்கமாய் இருந்து கூட்டப்பட்டது 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி'. தமிழக அளவில் இம் முன்னணிச் செயற்பாடு வீறுகொண்ட நிலையில் இருக்கையில் தென்மொழியின் அட்டைப்பாடல் இது. தமிழுக்கும், பொருளியல் பொதுமைக்கும் புரட்சிக்கும் வித்து மொழி, இன, நாட்டு விடுதலையே என்கிறார் பாவலரேறு.

48. பஞ்சாபிலும், அசாமிலும், நாகலாந்திலும், காசுமீரத்திலும், கேரளத்திலும் தேசிய இன எழுச்சிகள் நடந்து கொண்டிருக்கையிலும், தமிழகத்தில் தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணிவழிச் செயற்பாடு தொடர்ந்த நிலையில் எழுதப்பெற்ற பாடல் இது. எவ்வொரு விளைவும் 'எல்லார்க்கும்' என்று ஒவ்வொரு தேசிய இனமும் உயிர்த்துப் புரட்சி

மாமழை பொழிந்து வறட்சி நீங்கி வரலாறு மாறப்போவதாய் மகிழ்கிறார் பாவலரேறு.

49. உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், பெரியார் சம உரிமைக் கழகம், அறிவியக்கப் பேரவை, தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சி (மார்க்கசிய, இலெனினிய), தமிழக மாநிலக்குழு (இந்தியப் பொதுவுடைமைக் கட்சி) மா.இலெ.நடுவண் சீரமைப்புக் குழு ஆகிய அமைப்புகளின் கூட்டமைப்பாய்த் 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி' 1984-ஆம் ஆண்டு - திசம்பரில் தொடங்கப்பட்ட செய்தியை அறிவிக்கும் பாடலிது. கூட்டணி வகுத்துக்கொண்ட கொள்கை எளிதே விளங்குமாறு பாடல் அமைந்துள்ளது.

50. இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா அம்மையாரின் இறப்பை யொட்டித் தமிழகத் தலைவர்கள் அவர்க்கு இரங்கல் தெரிவிப்பதோடு அல்லாமல் இந்திய ஒற்றுமைக்கு முந்திக்கொண்டு குரல் எழுப்பத் தொடங்கிவிட்டதைக் கருத்தில் கொண்டு இந்திய ஒற்றுமைப் பேச்சைக் கடிந்து எழுதிய பாடல் இது. ஒற்றுமை, ஒருமைப்பாடு பேசுவோரை உதவாக்கரைகள் என்றும், உலுத்தர் இனங்கள் என்றும் அழைப்பதோடு ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிதென் இடித்துரைக்கிறார் பாவலரேறு.

51. தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி ஒருங்கிணைப்பால் கிடைத்த நம்பிக்கையைக் கொண்டு மக்கள் வெள்ளம் கடலெனத் திரள்க என அழைக்கும் பாடல்.

52. தாய்நிலத்தை மீட்க காலம், இடம் தேர்ந்திட்டோம், களத்திலிறங்க எண்ணிவிட்டோம். இனி வெற்றி ஓலமிட்டுத் தமிழ்நிலம் மீட்போம் என்றழைக்கிறார் பாவலரேறு.

53. தம் ஆசையும், உள் ஓசையும் தமிழினம் முன்னைப்போல் தன்னைத்தானே என்கிற நிலையில் இம் மண்ணை ஆள வேண்டும் என்பதே, என்கிறார் பாவலரேறு.

54. 'தமிழக மக்கள் விடுதலைக் கூட்டணி' வழிச் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்த காலச் சூழலில் எழுந்த பாடல் இது.

மக்களை ஒடுக்கி, உரிமையை அடக்கி அடிமையில் முடக்கிடும் அரசே மதக்குழியில் வீழ்த்தவும் சாதியில் தாழ்த்தவுமாக இருக்கையில் கொட்டடா விடுதலை முரசு, என்று முரசு கொட்டும், இப்பாடல் விடுதலை முழக்கமிட இருக்கும் உரிமை ஒடுக்கங்களை விளக்குகிறது.

55. 1986-இல் தமிழீழத்தில் நடந்த கொடுமைகளைக்கண்டு, தமிழக மக்களை எழுச்சி கொள்ள வைக்க எழுந்த பாடல். 'தமிழக விடுதலைக்காக எண்ணி எழுந்து பகையை வீழ்த்திடு இல்லையேல் ஒழிந்திடு' - என்று தமிழனின் இறுதிநேரக் கடமைகளை உணர்த்துகிறார் பாவலரேறு. தமிழீழ விடுதலைப் போராளிகள் இந்திய அரசால் பிரித்தாளப் பெற்ற சூழலிலும், தமிழீழ ஆதரவினர் தமிழகத்தில் கவனிக்கப்பெற்ற சூழலிலும் எழுதப்பெற்ற பாடல் இது.

56. எத்தகைய அடக்குமுறைகளும் இல்லை என்றாலும், தமிழகத்தை வடநாட்டார் ஆளுமை செய்வது எனும் நிலை இருக்கு மட்டும் தமிழ்த் தாய்நாட்டுப் பிரிவினை வேண்டும் என்றும், பிறவெல்லாம் வீணென்றுமே பேசுவோம்! என்கிறார் பாவலரேறு இப்பாடலில்.

57. ஈராயிரம் ஆண்டாய் வாய் வீரம் பேசிடும் நமக்கு எதிரிகளைவிட இரண்டகர்களே அதிகம். எதிரிக்குத் துணைபோகும் உலுத்தரையும், கலை, காமக் கயவரையும் சாய்த்திட அடங்காமல் ஆர்த்தெழுவோம்! அவ்வாறு செய்திட்டால் அடடா... நம் தமிழ ஆட்சி இங்கே என்று வழி காட்டுகிறார் பாவலரேறு.

58. தம் வாழ்நாளுக்குள் ஒரு கை பார்ப்போம், நிலம் மீட்போம்! என்கிறார் பாவலரேறு.

59. உரிமைபெற விரும்பாத உளம் என்ன உளமோ, உடனெழுந்து பாயாத உரமென்ன உரமோ? என்கிறார் பாவலரேறு.

60. தமிழக உரிமைக் கோரிக்கைகள் வன்முறை எனத் தலைப்பிட்டு நசுக்கப்படுவதைக் கண்டிக்கிறது இப்பாடல். அதிகாரக் கொடுமையர் ஆட்சி ஆண்களும் பெண்களும் திரள்வதிலேயே மாய்ந்து போகும் என்கிறார் பாவலரேறு.

61. தொண்டர்கள் எல்லாம் விழிப்பற்றுப் பிளவுபட்டதால் தலைவர்கள் எல்லாம் செழிப்புற்று வாழத் தொடங்கினர். மொழி, இன, நாட்டுப்பற்றுத்_தொண்டர்கள் முனைப்புற்று முனைதல் வேண்டும் என அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

62. தமிழர்தம் உரிமை முயற்சிகளுக்கெல்லாம் எதிராய் இந்தியக் கருத்துகள் அன்றைக்கு இராசீவ் ஆட்சியில் கடுமையாகப் பரப்பப்பட்ட சூழலில் எழுதப்பெற்றது இப்பாடல். பார்ப்பனர், வடவர், வணிகரே இந்தியர். அவர்களின் இந்தியா, தமிழருக்குதவாது என்றும் தமிழரெலாம் தமிழராய்த் திரளாமல் தமிழ்நாட்டைப் பெறாமல் தமிழர் வாழ்வில்லை என்றும் அறிவுறுத்துகிறார் பாவலரேறு.

63. இந்தியா என்றாலே ஆளுமை வெறி கொண்டு, அடிமை செய்வதே - என்று எளிமையாய் விளக்கும் பாடல். 'தமிழ்ச்சிட்டு' பயிலும் சிறுவர்களுக்கு ஏற்றவகையில் எழுதப் பெற்றது இப்பாடல். தமிழ்ச்சிட்டில் இந்தியத்தை மறுத்து வெளிவந்த முதல் அட்டைப் பாடலாகும்.

64. இப்பாடலும் முந்தைய பாடல் எழுதப்பெற்ற காலச் சூழலிலேயே 'தமிழ்ச்சிட்டில்' முன்னதற்குப் பின் எழுதப்பெற்றது. மக்களுக்கு எதிரானவற்றையெல்லாம் விழாக்களாகச் சொல்லும் பாரதக் கூத்தாட்டமே பாரதப் பெருமை என்றால், பாரத ஒற்றுமை என்றால் ஊரதிரும் புரட்சி ஒன்று தேவையே!

65. முந்தைய பாடல் சுட்டப்பெற்ற காலச் சூழலைத் தொடர்ந்தே இப்பாடல் 'தென்மொழி' அட்டைப்பாடலாய் வந்தது. வாய்வீரப் பேச்சினால் எதுவும் நடந்திடாது. தமிழகத்தை மீட்காமல் தரங்கெட்டுப்போவதுவோ என்று இடித்துரைக்கிறார் பாவலரேறு.

66. தமிழினத்துள்ளே வேற்றினத்தார் வந்து வயிறு வளர்க்கும்போது தமிழினத்தவரும் வயிறு வளர்க்கும் நோக்கில் அடிமைகளாய், மடமனத்தராய், மானமிலராய் இருப்பதைக் கண்டு வருந்தி மண்ணுரிமை மீட்பதென்றோ என்கிறார் பாவலரேறு.

67. 1990இல் தஞ்சையில் நடைபெறவிருந்து, நடக்கவொட்டாமல் தடைசெய்யப்பட்ட தமிழர் தன்னுரிமை மாநாட்டில் உரையாற்றச் சென்று, தமிழக அரசால் தளை செய்து சிறைப்பட்டு, வெளிவந்த ஞான்று பாடியது.

68. தமிழ்த் தேசிய எழுச்சி எழுப்பியதோடு, திராவிடம் குறித்த குழப்ப அரசியலுக்கு விடையே இப்பாடல். இந்தியத் தேசியம் எவ்வாறு மாயையோ அவ்வாறு திராவிடத் தேசியமும் மாயைதான் என்று கேள்வியால் விளக்குகிறார் பாவலரேறு.

69. காவிரிநீர்ச் சிக்கல் தொடர்ந்து கொண்டிருக்க அதைத் தரமறுக்கும் கன்னட வெறியனையும், அதற்குச் செவி சாய்த்திடாத் தில்லிக்காரனையும் கடுமையாகச் சாடி வெள்ளைக்காரனிடமிருந்து விடுதலை கேட்டதும், வெறி வடவரிடமிருந்து விடுதலை கேட்பதும் சரியே என்கிற விளக்கத்தில் பிடுங்கிய உரிமை மீட்பது தவறா? என வினவுகிறார் பாவலரேறு.

70. செயலலிதா ஆட்சியில் கொடுங் சட்டத்தின்கீழ் (தடா) ஆசிரியர் அவர்கள் சிறைப்படுத்தப்பட்டபோது எழுதப் பெற்ற பாடல் இது. கொடுஞ்சிறையுட் படுத்தினாலும் தம் உயிர்க் கொள்கையான மொழி, இன, நாட்டுரிமைக் கொள்கை நோக்கத்தினை வெளிப்படுத்த அஞ்சிடாது உறுதியுடன் எழுதியது இப்பாடல்.

## தமிழீழம்

71. இலங்கைத் தமிழர்களின் கண்ணீர் வரலாறாய் இதில் சொல்லப் பெறுகிறது.

72. 1977-ஆம் ஆண்டு ஆகத்துத் திங்களில் இலங்கையில் சிங்கள இனம் தமிழினத்தை இனஅழிப்புச் செய்தபோது அச் சிங்கள இனத்துக்கு விடுத்த எச்சரிக்கை இது.

73. 1977 ஆகத்தில் இலங்கையில் நடந்த தமிழர் இன அழிவுப் போராட்டத்தில் தமிழர் அடைந்த துயரநிலைகளால் நெஞ்சு உருகிப் பாடிய பாடல் இது.

74. இப்பாடல் உலகத் தமிழினம் எழுச்சி கொண்டது குறித்துப் பொதுப்படக் கூறினும் ஆசிரியர் அவர்கள் இலங்கை சென்று திரும்பியதைத் தொடர்ந்து எழுதிய பாடலாதலால் இது தமிழீழ எழுச்சியையே குறிப்பாய்ச் சுட்டியது.

75. திருவாட்டி மங்கையர்க்கரசி 1979ஆம் ஆண்டில் தம் கணவர் திரு. அமிர்தலிங்கம் அவர்களுடன் தமிழகம் வந்து, தமிழீழத் தமிழர் பட்ட கொடுமைகளை யெல்லாம் இங்குள்ள தமிழ் மக்களிடம் எடுத்துரைத்தமையால் அவரை 3.4.1979இல் இலங்கைப் நாடாளுமன்றத்தில், கைத்தொழில் அமைச்சர் சிறில் மத்தியூ மிகவும் இழிவுபடத் தாக்கிப் பேசியதைக் குறித்து எழுதியது. இந்தப்பாடல், ஈழத்தமிழர் விடுதலைக் கூட்டணியின் அதிகார ஏடான 'சுதந்திரன்' என்னும் இதழில் (29.4.1979இல்) வெளிவந்தது.

76. இப்பாடலும் பொதுப்படத் தென்னவர் இனமே என்று தமிழினத்தையே சுட்டிச் சொல்லப் பெற்றிருப்பினும், தமிழீழ மக்கள் அல்லற்பாட்டை மனத்தில் இருத்தியே அக்காலச் சூழலில் எழுதப்பெற்றது. பாவலரேறு எழுத்தின் உறுதிப்பாட்டை விளக்கி அவ்வகையில் குமரிஇனம் செழித்துப் பெரும் புகழ்சேர வீறுகொள்ள வேண்டுமாய்க் கேட்கிறார்.

77. தமிழீழ விடுதலையை நோக்கிய இளைஞர்கள் 'விடுதலைப்புலிகள்'-இயக்கமாய் முதலில் திரண்டபோது - அப் போராளிகளின் சிறப்பைக் குறித்து எழுதிய பாடல் இது.

78. தமிழ்மொழி, இனம் காக்கத் தமிழ்ப்படை தமிழ் ஈழத்தில் எழுந்தது - அதைக் கண்டாகிலும் தமிழகம் எழுச்சியுறுமா என்று வினவுகிறது இப்பாடல்.

79. தமிழீழ விடுதலைச் சிந்தனைக்குத் தந்தை என்கிற வகையில் அழைக்கப்பெறும் மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் 83ஆம் பிறந்தநாள் (31.3.81) தொடர்பாக எழுதப்பெற்ற பாடல் இது. தந்தை செல்வா அவர்களின் சிறப்பையும் - அவரின் தமிழீழ முயற்சிக்கான செய்திகளையும் எடுத்துரைக்கிறார் பாவலரேறு.

80. சிங்களப் பேரின அரசுக் காடையர் தமிழீழ மக்களைக் கொன்று குவித்திடும் கொடுமையைக் கண்டித்தும், அதற்கு எதிராய்-தமிழீழத்திற்கு ஆதரவாய் நாம் குரலெழுப்பிடாமல் பொறுத்திடலாமோ? - என்று தமிழகத்திலிருந்து முதன்முதலில் குரலெழுப்புகிறார் பாவலரேறு.

81. மாந்த உரிமைகளுக்காக எவர் குரலெழுப்பினும் அவர்க்குத் துணையாய் வாழ்த்தும் ஆர்வ நெஞ்சினர் பாவலரேறு அவர்கள் - தமிழீழ வேள்விக்கு உயிர்தர தயங்கா விடுதலைப் புலிகளை வாழ்த்தித் தமிழால் வணங்குவேன் என்று வீறுரைக்கிறார் பாவலரேறு.

82. தமிழீழத்திற்காகப் போராடிய இயக்கத்தினர் பலரும் விடுதலைப்புலிகள் என்றே அழைக்கப்பட்ட அன்றிருந்த சூழலில் குட்டிமணி, செகன் என்கிற தமிழீழ விடுதலை உணர்வு இளைஞர்கள் இருவர் சிங்கள அரசால் தூக்கிலிடப் படுவதற்கு முன்னர் அவர்களின் வீர உணர்வு, செயல் சிறப்பை விளக்கி அவர்களைத் தூக்கிலிடவேண்டாம் எனப் பாவலரேறு அவர்கள் கேட்டெழுதிய பாடல்.

83. தமிழீழ விடுதலை இயக்கங்கள் ஒவ்வொன்றையும் மற்றதற்கு எதிராக இந்திய உளவுத்துறையே திட்டமிட்டு மோதவிட்டது. அதோடு நில்லாது அவற்றுக்கிடையே ஒற்றுமை ஏற்படுத்துவது போலவும், தமிழீழ உரிமைகளுக்காகப் பேச்சுரை நடத்துவது போலவும் 'திம்பு'வில் கூடிப் பேச அழைப்பு விடுத்தது இந்திய அரசு. அத்தகு பேச்சுரையால் தமிழீழம் கிடைக்கப் போவதில்லை என விளக்கி எழுதிய பாடல்.

84. 1983ஆம் ஆண்டு சிங்கள வெறிப்படையால் கொடும் அடக்குமுறைக்குட்பட்ட தமிழீழ மக்கள் படுந்துயர் கண்டு தமிழக மக்கள் ஏதும் செய்யாமல் நின்று விட்டோமே என்று பதைபதைக்கும் உளத்தொடு பாடுகிறார் பாவலரேறு. பாடலின் முடிவு

தமிழகத்தை மீட்பதாகவும், தமிழீழத்தைக் காண்போம் என்பதாகவும் இறந்துவிட்ட தமிழீழ மக்களின் காயாத குருதிமேல் ஆணையிட்டுச் சூளுரைக்கிறது.

85. தமிழீழ விடுதலைக்கான எழுச்சி படிப்படியாக வளர்ந்து வந்தது கண்டு மகிழ்ந்து பாடியது இப்பாடல்.

86. 986ஆம் ஆண்டு சூலைத் திங்கள் சிங்கள வெறிப்படை ஆடிய ஆட்டம் மிகக் கொடுமையானது. பொதுமக்களை யெல்லாம் கொன்று குவித்த அக்கொடுநிகழ்வை எண்ணி அங்கு அவர்கள் அவ்வாறெல்லாம் அல்லல்படுகையில் நாம் என் செய்வோம்! கையற்றோமே! - என்று கவலுறுகிறார் பாவலரேறு.

87. கடந்தபாடலில் சொல்லப்பட்ட சூழலிலேயே 'தமிழ்ச்சிட்டு' இதழில் சிறுவர்க்குத் தமிழீழ மக்கள்படும் அவலங்களை எடுத்துரைக்கும் பாடல் இது.

பயிர்களை அழித்திடும் பூச்சிக் கொல்லி மருந்துபோல், உயிர்களை அழிக்கும் சிங்களரை ஒழித்திடும் மருந்திலையே என்ற ஏக்கத்தோடு முடிகிறது பாடல்.

88. 1986 கலவரத்தில் தாய்தந்தை இழந்து ஏதிலியாய்ப் போன குழந்தை ஒன்றை எண்ணி எழுதிய பாடல் இது. நம்மவர்க்கொரு நாடுகிடைத்திடும் அதனால் நலம் உனக்குவரும் என்பதால் அழாதே என்கிற செய்தியில் பாவலரேறு தமிழீழ விடுதலையை உறுதி செய்கிறார்.

89. தமிழீழ விடுதலைக்குப் பெண்களின் பங்களிப்பும் பெருகத் தொடங்கியதையொட்டி இப்பாடல் எழுதப்பெற்றது. தமிழீழம் அமைத்திடப் பாங்கியரே அணிதிரண் டெழுவோம் எனப் பெண்களைத் தமிழீழ விடுதலைக்கு அழைக்கிறார் பாவலரேறு.

90. சிங்களரைச் சிதறடித்து யாழகத்தில் தனித்தரசு நாட்டுவதாலேயே தமிழ்மானம் மண்ணுலகில் நிலைபெறும் என்கிறார் பாவலரேறு.

91. இலங்கையிலே தமிழினம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கையில் அன்றைய (ம.கோ.இரா.) ஆட்சியினர் விழாக்களிலும் வேடிக்கைகளிலும் திளைக்கின்றனர். இவற்றைப் பொறுக்க இயலவில்லையே எனத் தம்மைச் சுமக்கும் தமிழ்நிலமே அவர்களை தரைபிளந்து விழுங்குவாயே என முறையிடுகிறார் பாவலரேறு அவர்கள்.

92. விடுதலைப்புலிகளின் வீரத்தை மெச்சும் பாடல் இது. முதன்முதலில் 'பிரபாகரன்'- அவர்களின் பெயர்ச்சுட்டி வந்த பாடல்.

93. சிங்கள அரசு பேச்சுரைக்கு அழைப்பதாகச் சொல்லிச் சொல்லி இழுக்கின்ற காலத்தை மறுத்து, நேரடிப் போருக்கு மக்கள் புலிகளுடன் பொங்கி யெழுந்திடாவிடில் முழு இனமுமே விழும் - என்று எச்சரிக்கிறார் பாவலரேறு.

94. இராசீவ் - செயவர்த்தனா ஒப்பந்தத்தைத் தொடக்கத்தில் ஏற்றுக்கொண்டதாய்ப் புலிகள் கூற அதைப் பொறுக்க இயலாமல் பதைபதைத்து எதிரியை எச்சூழலிலும் நம்பாமல், செந்தமிழ் இனத்தை நம்பி இனநலம்மீட்க இணைந்துசெய்க - என அழைக்கிறார் பாவலரேறு. தென்மொழி ஆசிரியவுரைப் பாடலாக வந்ததிப் பாடல்.

95. இந்திய அமைதிப்படை எனும் பெயரில் சென்ற வெறிப்படை - சிங்களக் கொடுநெறிப்படை செய்ததையே செய்கின்றதே; அதையும் இங்குச் சிலர் நயன்மைப் படுத்துகின்றனரே - அவர்கள் பெற்ற இரவல் உணவுக்கான செஞ்சோற்றுக் கடனாகவே அப்படிப் பேசுகின்றனர் - என்று இழித்துரைக்கின்றார் - பாவலரேறு.

96. இந்திய வெறிப்படை தமிழீழத்தில் செய்யும் அட்டூழியங்களைக் கண்டு அழுவதான குழந்தையிடம் யாருக்காக அழுகின்றாய்? - என்று 'தமி(ழீழ)ழ்ச் சிட்டு'-களிடம் விளக்கம் கேட்கிறார் பாவலரேறு.

97. இந்திய வெறிப்படை விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனைப் பிடித்துவிட அலையாய் அலைந்தபோது - அவர் புகழ் போற்றி உம்மோடு நாங்கள் உயிராய்ப் பிணைந்திருக்கிறோம் - என்று அவரை வாழ்த்துகிறார் பாவலரேறு. பிரபாகரன் அவர்களைக் குறித்த முதல் தென்மொழி ஆசிரியவுரைப்பாடலும், பிரபாகரனை- 'கதிர்க்கையன்' - என்றழைத்த முதல் பாடலும் இது.

98. இந்திய வெறிப்படையைத் தமிழீழத்திற்கு அனுப்பி தமிழர்களுக்குக் கொடுமைகள் செய்த இராசீவ் மீது பாவலரேறு அவர்கள் பாடிய அறப்பாடல் இது. இப் பாடலில் சொல்லப் பெற்ற வகையிலேயே அப்'பூதன்' இறக்க நேர்ந்தது வியப்பானது. இப் பாடலின் தனிச் சிறப்பை ஆசிரியரே இட்டசாவம் முட்டியது - எனும் ஆசிரியவுரையாக விரித்தெழுதியுள்ளார். இட்டசாவம் முட்டுக! எனும் பெயரில் இவை தனிநூலாக வந்திருக்கிறது.

99.நவம்பர் 27ஆம் நாள் பிரபாகரன் பிறந்தநாளையொட்டி அவரின் பெருஞ்சிறப்பையும் அவர் இத் தமிழ்ப் பேரினத்துக்குக் கிடைத்த பெறலரும் வீரன் - எனவும் சங்கையும், யாழையும், பேரிகையையும் முழங்கச் சொல்லிப் பெருமகிழ்வொடு வாழ்த்துகிறார் பாவலரேறு.

100. ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 27 ஆம் நாள் தமிழீழத்திற்காக உயிரீகம் செய்த மாவீரர் நாளாகக் கொண்டாடப் பெறுகின்றது. அந்நாளினை எண்ணி அவர்களின் புகழ்குறித்து வியந்தும், வாழ்த்தியும் பாடியது இது.

101. விடுதலைப்புலிகளின் தலைவர் கதிர்க்கையன் எனும் பிரபாகரனின் திறம் வியந்து தமிழர்கள் அனைவர்க்கும் அவனே தலைவன் - என்பதாய் உறுதிப்படுத்துகிறார் பாவலரேறு.

102.இராசீவ் கொலைக்குப் பின்னர் விடுதலைப் புலிகளை இழித்துரைத்து தமிழீழ விடுதலைக்கே பெருந்தடையாக அமைந்த அன்றைய செயலலிதாவையும், அவர் ஆட்சி அமைச்சர்களையும் கடுமையாகக் கண்டிக்கும் பாடல். அவர்கள் எல்லாம் வீழப்போகும் செய்தி விரைவாகக் கேட்கும் என்று வீறுரைக்கிறார் பாவலரேறு.

103 ஈழத் தமிழரை ஆதரிப்பது என்பதே நாட்டெதிர்ப்புச் செயல் என்பதாகச் சிறை செய்யப்படுகிற சூழலில், இதோ நான் ஒருவன் ஈழத்தமிழரை ஆதரிக்கிறேன்.

என்னைச் சிறை செய்யினும் செய்க, என்தலை கொய்யினும் கொய்க - என்று அன்றைய செயலலிதா அரசுக்குச் சூளுரைக்கிறார் பாவலரேறு.

104. இராசீவ் கொலைக்குக் கரணியமான 'தானு' எனும் கன்னி இளமுகை, வீணனுக்கு எதிராய் வெஞ்சினம் கொண்டு ஆற்றிய அருஞ் செயலை வியந்து அவளின் ஈகப் புகழ்க்கு இவ்வுலகே நிகராகாது என்கிறார் பாவலரேறு. இப்பாடல் 'நூறாசிரியம்' தொகுப்புள் 66-ஆம் பாடலாக முகிழ்த்துள்ளது.

105. புரட்சி வேந்தனாய்ப் பீடுறநிற்கும் பிரபாகரனை எச்சில் சோற்றுக்குக் காட்டிக் கொடுக்கும் மாகொடியன்களாய் உள்ள வாழப்பாடி, மூப்பனார், வீரப்பன், இராசாராமன்கள், அனைவரும் தமிழப் பிறவியைத் தாங்கியதற்கு வெட்கப்படுவது நல்லது என்றும், அதனினும் உயிரைத் துறப்பதும் நல்லதே என்றும் இடித்துரைக்கின்றார் பாவலரேறு.

# கனிச்சாறு மூன்றாம் தொகுதி

(தமிழ் நாட்டுரிமை, தமிழீழம்)

## பாடல் முதல்குறிப்பு அகரவரிசை


| பாடல் முதற்குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| அட! அட !தமிழனே | 94 |
| அடிமை நினைவை | 35 |
| அடிமை விலங்கொ டித்து, | 58 |
| அண்டையிலே தமிழ்நாடு! | 84 |
| அமிழ்த வாய்திறந்தே | 88 |
| அரசியல் தெளியா மாந்தரிங் | 9 |
| அரசியலால் முன்னேற்றம் | 42 |
| அருமைத் திராவிடத் | 45 |
| அவன்தான் தமிழின வீரன் | 101 |
| அனைவருமே திரண்டெழுந்தால் | 59 |
| அன்புத்தமிழ்த் தாய்மொழியை | 52 |
| ஆட்டிப் படைக்கும் | 26 |
| ஆண்டுநூ றானாலும் | 17 |
| ஆரியப் பதடியர் | 41 |
| இதோ, நான் ஒருவன் | 103 |
| இந்தக் குழந்தைகள் | 87 |
| இந்தத் திராவிடத்தை | 2 |
| இந்தித்திணிப் பிலையெனினும், | 56 |
| இந்தியத் தேசியம் | 62 |
| இருசகன்ற வண்டியினிற் | 11 |
| இலங்கையில் தமிழ மக்கள் | 71 |
| இலங்கையிலே குருதியாற்றில் | 86 |
| இறுதி நேரம் உனக்கிது | 55 |
| இன்றில்லை, நேற்றில்லை, | 57 |
| இன்னும் பொறுத்திடலாமோ? | 80 |
| உண்ணும் உணவுக்கும் | 64 |
| உரிமை ஒடுக்கமே | 54 |
| உரியன செய்யார் | 12 |
| உருப்படி யாகாதடா | 25 |
| உலகம் உயிர்த்தது; | 37 |
| உலகம் முழுதும் | 46 |
| உலகெலாம் பரவிய | 105 |
| உள்ளத் துரமும் | 18 |

| பாடல் முதற்குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| உறங்கிக் கிடக்கின்ற | 65 |
| ஊட்டப் பெறாத | 28 |
| எத்தனை முறை எனைச் சிறையிலி | 67 |
| எந்தமிழ் இனத்தார் | 22 |
| எழுச்சியுற்றோர் சிலர்கூடிப் | 49 |
| எழுக தமிழனே! | 27 |
| என்றும்போல் தேர்தல்வரும் | 30 |
| என்றெழுவும் தமிழர்படை? | 32 |
| ஏடாயி ரங்கோடி | 19 |
| ஏட்டகத்துப் பலவாறாய்த் | 40 |
| ஏறுநடை போட்டுநட! | 44 |
| ஒட்டென்றும் ஒருமையென்றும் | 20 |
| ஒற்றைத் தமிழ்மகன் | 23 |
| ஒன்றுகாண்; உலகத் தமிழினம் | 74 |
| ஓ! பிரபாகரனே! | 97 |
| குடையெடுத் தன்ன | 6 |
| கூடிக் கை கொட்டி | 33 |
| கேட்டியோ தோழி, | 05 |
| கோரிடக் கோரிடக் | 93 |
| சாகின்ற செந்தமிழீர் | 24 |
| சாதியும் இருக்கும்; | 73 |
| சிங்களவக் கொடியர் | 95 |
| செந்தமிழ் தாழ்ந்தது; | 3 |
| செந்தமிழ் நன்னாட்டிற்கு | 8 |
| சென்று கொண்டிருந்தது, | 34 |
| தங்கத் தாயகம் | 85 |
| தந்தை செல்வா தம்பெயர் | 79 |
| தமிழை மீட்க வேண்டும் | 70 |
| தமிழர்க்குத் திராவிடம் | 68 |
| தமிழ்மொழி காக்கவும் | 78 |
| தூக்கில் இடவேண்டா! | 82 |
| தெங்கிளநீர்க் குலையினிலே | 66 |
| தென்னவர் இனமே! | 76 |
| நடை நடப்பீர், | 39 |
| நல்லதொரு மாட்டுக்கொரு | 71 |
| நாங்கள் புலிகள் | 77 |
| நாடவர்பால் கிடைத்ததென | 1 |
| நாவும் இனிக்க, | 4 |

| பாடல் முதற்குறிப்பு | பாடல் எண். |
|---|---|
| நீண்ட காலம் | 89 |
| நெஞ்சை உருக்குதடா! | 73 |
| பட்டினியால் ஒருபுறத்தே | 22 |
| பாராண்ட தமிழ்வேந்தர் | 90 |
| 'பிரபா கரன்'எனும் | 99 |
| புரட்சி மேகங்கள் | 48 |
| புரிவினைகள் அத்தனைக்கும் | 21 |
| புலியோ புலிபுலி | 92 |
| பெற்றுவிட வேண்டும் | 29 |
| பேச்சுரையால் தமிழீழம் | 83 |
| பொய்யர்கள் புளுகர்கள் | 51 |
| பொற்பிழப்பால் நலந்தேடிப் | 15 |
| மத்தியூ என்னும் | 75 |
| மழைக்கென்றும் | 7 |
| மழைவெள்ளம் மிகுந்(து)ஊரை | 91 |
| மாந்த உரிமைகள் மறுக்கப் | 81 |
| மாவீரர் நாளிது! | 100 |
| மானங்கெட்ட நெடுஞ்செழியன், | 102 |
| மானமும் உயிரும் | 104 |
| முண்டையின் மகனே! | 98 |
| முத்தமிழை மீட்பதுவோ | 10 |
| முன்னம் பறித்த | 16 |
| முன்னைப் போலத் | 83 |
| மொழி,இன விடுதலை | 47 |
| மொழிக்கலப்பும் இனஇழிவும் | 38 |
| மொழிநலம் உணரார் | 14 |
| யாருக்காக அழுகிறாய் | 96 |
| வங்காள மக்கள்! | 31 |
| வரிசை கெட்ட அரசினர்க் | 13 |
| வன்முறை என்றே | 60 |
| விடுதலை வேண்டும்! | 36 |
| வெள்ளைக் காரனை | 69 |
| வெற்று மை எழுத்தில் | 50 |
| வையம் வாழ்த்தும் | 43 |

நாட்டுரிமை

# 1 சீறியெழு!

நாடவர்பால் கிடைத்ததென நம்மவரை நசுக்கும்
நாட்டத்தோ டன்னவரின் நலம்பேணி நின்றே
ஈடவர்போல் இல்லையென இத்தரையின் மக்கள்
எண்ணுமா றவர்வாழ நாமிருந்து வந்தோம்!
ஏடெழுதி என்னபயன்? இந்நாட்டை யன்னார்
ஏய்ப்பதுகண் டெள்ளளவுந் துணிவில்லா திருந்தால்!
வாடுகின்ற மக்களெலாம் வதங்கிமடி யும்முன்
வந்திடுவீர்! பெரும்படையைக் கூட்டிவழி நடப்போம்! 1

பனிமலையின் பாங்கினிலே படுத்திருந்தா ரெல்லாம்
பசுந்தமிழின் நாட்டில்வந்து நடந்துலவு கின்றார்!
நுனிநிலையில் வாழ்ந்துவந்த நந்தமிழின் மாந்தர்
நோவேற்று நலிவேற்று நொந்திறந்து போவார்!
இனிநிலையை வளர்தல்விட் டாலவர்கள் நம்மை
ஏறிமிதிப் பாரிதைநா மின்றுணர்ந்து கொண்டு,
முனியவிலை யாயினவர் முன்னேறிப் போக
முத்தமிழின் நாடுமந்த எத்தர்கையுட் போமே! 2

பஞ்சாலை யவர்கையுள்; பல்பொருளும் அங்கே!
பாய்ந்தோடும் நீர்தடுக்கப் பேரணைகள் அங்கே!
எஞ்சாத வளமனைத்தும் ஏற்றமுறச் செய்ய,
ஏதேது தேவையவை எல்லாமும் அங்கே!
அஞ்சாத படையனைத்தும் அன்னவரின் கையுள்!
அரசாட்சிக் கருவூலம் அன்னவர்க்குச் சொந்தம்!
பஞ்சாக நாம்பட்டுப் படைத்தபெருஞ் செல்வம்,
பனிமலைக்கும் போகுதெனில் நமக்குவளம் எங்கே? 3

புகைவண்டி நிலையத்தின் போக்கவரின் கையுள்;
புறநாட்டி விருந்திங்கே இறக்குமதி செய்யும்
வகைவகையா லெப்பொருளும் வடநாட்டைவிட்டு
வருவதிலை தென்னாட்டுக் கேனென்று கேளோம்.
தொகையென்ன தரமென்ன நம்நாட்டு மக்கள்
துணிவில்லை யாயினவர் தொகைபெருகிப் போகும்!
புகையுண்ணும் குடிலினில்நாம் பொறையிழந்து சாக,
புரட்டுகின்றார் பெருஞ்செல்வம் கடுகுமிடி யின்றி! 4

அன்னவரும் அன்னவரின் அடியில்நடப் பாரும்
அல்லாமல் எந்தமிழர் எங்குவாழ் கின்றார்;
முன்னரவர் சொன்னதென்ன? மொழிவதென்ன ஈண்டு?
முடிவுவரை இவ்வாறே முனையாது நின்றால்
தென்னவர்க்குத் தேய்வென்று தெரிந்துகொள் வீரே!
தெருவெல்லாம் அவர்கூச்சல்! தெருக்கடைகள் தோறும்
அன்னவரின் ஆட்கள்! அவர் வீழாது காத்தே
அடிபணிய நம்மாட்கள்! அரித்துவரு கின்றார்! 5

நொடிக்குநொடி யன்னவர்கள் வந்துகுவி கின்றார்!
நொடிக்குநொடி நந்தமிழர் தாழ்ந்துபோ கின்றார்!
அடிக்கடியத் தீயவரின் அழகுமனை நிற்கும்;
அவரேறும் வண்டிகளை யெந்தமிழர் ஓட்டிப்,
படிக்குப்படி தாழ்ந்திழிவுப் பாதையினை நோக்கிப்
பதைப்பதுவே யல்லால்நந் தமிழரெது கண்டார்?
துடிக்குதடா நம் நெஞ்சம்! துணிவெல்லாம் எங்கே?
தோளெல்லாம் சூம்பிற்றோ? மறமொழிந்து போச்சோ? 6

சீறியெழு துஞ்சுகின்ற செம்புலியே! முன்னோர்
சேர்த்தமைத்த வீரத்து மாளிகையைக் காக்க,
ஊறிவரும் தோள்தந்தே உயிர்தந்து காப்பாய்!
'உணர்வில்லை' யென்றவர்கள் உரைசெய்யும் முன்னர்,
கூறுசெய் யன்னவரின் கொழுத்துள்ள உடலை!
கோடிபெறும் உன்வீரம் முனிந்துவிடின்; அறிவேன்!
ஏறிவரும் நீர்போல ஏய்ப்பவரை மாய்ப்பாய்;
எழுந்திரு நீ புலித்தமிழா! ஏறே! இந் நொடியே! 7

-1952

## 2 எந்நாளோ?

இந்தத் திராவிடத்தை யாள்வதென் மக்களென்று
இயம்புநா ளெந்த நாளோ?
எழிலோடு செந்தமிழை யோதுவதுஞ் செப்புவதும்
யாம்காணும் நாளெந் நாளோ?

*விந்தக் குமரியினை விரிந்திட்ட தமிழ்நாட்டு*
*வினைதலைமை மற்ற நாட்டு*
*வினையாளர் கேட்டக மகிழ்கின்றா ரெனக்கேட்டு*
*வீறுகொள் நாளெந் நாளோ?* 1

*சொந்தத் திருநாட்டின் மக்களிடை நோநீங்கிச்*
*சோர்வற் றிருந்து வாழ்வில்*
*சுறுசுறுப் போடுபல விறுவிறுப் பானமுறை*
*சுடர்விடும் நாளெந் நாளோ?*
*வந்தித் திருநாட்டின் எழில்சுரண்டி வாழ்கின்ற*
*வடநாட்டின் எலிகள் நீங்கி*
*வாழுவதும், ஆளுவதும் இந்நாட்டு மக்களென*
*வகைசெய்யும் நாளெந் நாளோ?* 2

*ஊர்ப்பெயருந் தெருப்பெயரும்*
*உயர்ந்ததமிழ்ப் பெயராக*
*உண்டாகும் நாளெந் நாளோ?*
*உலகத்து மக்களெலாம்*
*ஒருமொழியாய்த் தமிழ்மொழியை*
*உணரும்நா ளெந்த நாளோ?*
*பார்க்கு ளெங்கும் இந்நாட்டுப்*
*பண்டைத்தமிழ் நூல்களையும்*
*பயிலும்நா ளெந்த நாளோ?*
*பலகலைக ளோடுதமிழ்க் கலைகளையும் வைத்துலகு*
*பயனெய்தும் நாளெந் நாளோ?* 3

*ஊர்க்குவூர்த் தமிழ்ப்புலவ ரோடுபலர் கூடிமகிழ்*
*வெய்துநா ளெந்த நாளோ?*
*உணவில்லை; கஞ்சியில்லை; உடையில்லை என்பதெல்லாம்*
*ஒழியுநா ளெந்த நாளோ?*
*ஆர்த்தெழுவீ ரந்நாளை நோக்கித் தமிழ நாட்டாரே!*
*அஞ்சாது வீறு கொள்வீர்!*
*ஆள்வதுநாம்; அன்றியொன்றாய்*
*மாள்வதுதான் நன்றெண்ணி*
*அரசியலார் நோக்கி வாரீர்!* 4

**-1954**

## 3 புரட்சித் தீ!

செந்தமிழ் தாழ்ந்தது; செத்தமொழி உயர்ந்தது;
செய்வதினி நாமிங் கென்ன?
செம்மைஅர சாட்சியிதாம் என்றுசில தொண்டைகள்
சீறுவதென் நோக்க மென்ன?
தந்திரத் தோடுதமிழ் நாட்டினுக் காந்திரத்
தரகரை வைப்ப தேனோ?
தாராளமாய்க் கடையின் தேங்காயில் ஒன்றை வழிப்
பிள்ளையார்க் கீந்த தேனோ? 1

அப்பம் பிரித்தகதை யாக்கிட்ட குரங்கருக்
காரிதைப் போயு ரைப்பார்?
‘அதுதான்நல் லற’மென்றே அதிகாரங் கொடுத்தமர
மண்டையினை ஆரொ றுப்பார்?
“தப்பீது, சரியீது” என்றேநன் றுணராத
தரகர்க்கிங் கென்ன வேலை?
தாய்நாட்டை நாமேங்க மாற்றானுக் கீந்தமரக்
கட்டைக்குக் கிழிக்க ஒலை! 2

எதிரிகளின் உடலெலும்பை ஒடித்தடுக்கி வைத்ததிலே
எண்ணெயெனக் குருதி யூற்றி,
ஏற்றமுடன் புரட்சிப்பண் பாடிநன் றாடியதில்
எரியுந்தீ வைப்பம் ஏற்றி!
அதிரும்படி கூவியழைத் தமைச்சர்களை மாற்றி, தமிழ்
அரசினை வாழவைப் போம்.
அன்றேல், நம் வீரம், மறம் என்றெல்லாம் பேசியவை
அத்துணையும் வெறும்பொய்யாய்ப் போம். 3

புரட்சித்தீ மூட்டுங்கள்; புல்லர்தமை ஓட்டுங்கள்;
புதியவர சாட்சி நாட்டிப்
புதுவாழ்வுப் பாதையினில் பகுத்தறிவி னோடுபெரும்
புகழோடு வாழ்வம் கூட்டி!
புரட்சித்தீக் கொளுத்துங்கள்! புதுவழிகை யாளுங்கள்!
பூந்தமிழின் நாட்டைக் காத்துப்
பொன்போலப் போற்றுவோம்; புதுவாழ்வு ஏற்றுவோம்
புகழ்காட்டும் பாடல் யாத்து! 4

1954

## 4 குயிலே !

நாவும் இனிக்க, நறுந்தமிழின்
நறவை மாந்தி நெஞ்சினிக்கக்
கூவுங் குயிலே! தேமாவின்
கோதுண் டிருந்து மலர்மலர்வாய்த்
தாவுங் குயிலே! தண்டமிழின்
தனித்த சீர்த்திப் பெரும்புலவன்
பாவும் இசைத்தே யாங்கொடுக்கும்
பாலும் பழமும் பெறுவாயே! 1

ஏடும் மணக்க, இளந்தமிழில்
இசையும் மணக்கத் தீம்பாடற்
பாடுங் குயிலே! பழந்தமிழர்
பகையும் மறந்தே பணியாற்றித்
தேடும் பெருமை திகழ்தற்கே,
தீம்பண் ணிசைத்துத் தனித்தமிழர்
நாடுங் கேட்டே, யாங்கொடுக்கும்
நறவுந் தளிரும் பெறுவாயே! 2

நாளும் பயில நற்றமிழ்ப்பா
நாட்டுங் குயிலே! ஒன்றுரைப்பேன்,
கேளாய்! சீர்த்தித் தனிநாட்டைக்
கேட்டும் மறுப்பார்க் கிந்நாட்டுத்
தூளும் மிஞ்சா தென்பதையும்,
தோள்கள் கோடி தாயின்மேல்
சூளுற் றதையும் நீகூறிச்
செந்தேன் தினைமாப் பெறுவாயே! 3

-1958

## 5 என்றையோ ?

கேட்டியோ தோழி, வாழி! நாட்டிடை
மேட்டிமைச் சான்றோர் மெய்வழிப் பிறழ்ந்தனரோ?
ஓரக மகளிர் உயர்நா ணுகுத்தே
ஊரகச் சீர்மை ஒழுங்கூழ்ந் தனரோ?
கெழுதகை ஈகையர் கேடுபட் டாங்கே
இழிதகைப் பட்டரோ? எவண் எவண் காண்புழி
பொய்யும் புலையும் கைவலித் தீதும்
வெய்ய சூழ்வும் வெறிவினை மிகுவும்
ஏழ்மையும் புன்மையும் ஏற்றமில் வாழ்க்கையும்
தாழ்மையும் காழ்ப்பும் தாய்மொழிப் பாழ்மையும்
பிறருயர் வழிக்கும் பேதைப் பெற்றியும்
நறவுக் குடத்துள் நச்சுப் பெய்தென
நல்லோர் ஆயத்துப் புல்லோர் மிகுத்தே
அல்லோர் பல்க அருந்துயர்ப் பட்டு
மாய்தல் என்னையோ? நன்னெறி
பாய்தல் என்றையோ பழிநீங்கி யிவணே!

-1959

## 6 மாரி வாயில் !

குடையெடுத் தன்ன வடபுல மேகுங்
கொண்டல் காள்! இந் நாடாள
நடையெடுத் தார்வட நாட்டின ரவர்பால்
நண்ணுவி ரேல்,"செம் புதுவெள்ளம்
மடையெடுத் தன்ன, தினவெடுத் தேபல
மறத்தமி ழர்நல் லுணர்வெடுத்தே
படையெடுத் தார்செந் தமிழ்நா டாளப்
பார்த்தனம்! வேர்த்தனம்!" என்றுரைப்பீர்!

-1959

## 7 அமைச்சருக்கு வேண்டுகோள்!

*மழைக்கென்றும் வெயிற்கென்றும் கூரை யிட்டோம்!*
*மறைவுக்குச் சுற்றிநெடுஞ் சுவர்கள் வைத்தோம்!*
*அழைக்கின்ற தென்றலிளங் காற்றுக் கென்றே*
*அருகருகிற் பலகணிகள் அமைத்தோம் வீட்டில்!*
*உழைக்கின்றார்; உண்கின்றார் அண்டை வீட்டார்!*
*ஒருபொருளும் பிறர்பொருளைத் திருடா வாறு*
*பிழைக்கின்றார்; எனினும் தம் வீட்டிற் கென்று*
*பெருங்கதவை வைக்கின்றோம்; தாழ்வைக் கின்றோம்!* 1

*"கதவைநீ ஏன்வைத்தாய்? நாங்க ளெல்லாம்*
*கள்ளரென்ற நீநினைவோ? சுவரேன் வைத்தாய்?*
*உதவெனக்கு நீ! உனக்கும் உதவு கின்றேன்!*
*உன்வீடும் என்வீடே! எனதுன் வீடே!*
*புதுமுறையாய் வாழ்ந்திடுவோம்" என்று நாம்போய்ப்*
*புதுவீட்டுக் காரரிடம் கேட்டு விட்டால்,*
*பதிலுரையா கிடைக்கும்? நம் கைகால் போகும்,*
*பல்விழும்;நம் உடலெலும்பு நொறுங்கிப் போகும்!* 2

*பிரிவுமனப் பான்மையென்றே அமைச்ச ரெல்லாம்*
*பிழையாகப் பேசுகின்றார், தமிழ்நா டென்றால்!*
*பரிவோடு கேட்கின்றோம்; உம்மைப் பெற்றாள்*
*பழந்தமிழ்த்தாய் ஒருத்தியெனில், தமிழ்த் தந்தைக்கே*
*கருவான துண்மையெனில், கருத்தைச் சொல்வீர்!*
*கன்னித்தமிழ் வடமொழியால் தீங்கு றாதா?*
*உருவாகும் தமிழ்நாட்டுப் பற்று தீதா?*
*உழைத்துழைத்துப் பிறர்க்கிட்டு வாழ்தல் நன்றா?* 3

*தமிழ்நாடு தமிழர்க்கென் றார்த்தல் தீதா?*
*தாங்காத கொடுமைபல தாங்கல் நன்றா?*
*தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வாழல் தீதா?*
*தாயென்றே அதைநினைத்துப் போற்றல் தீங்கா?*
*அமிழாத சிறப்பதன்பால் இருத்தல் பொய்யா?*
*அமைச்சர்தமைக் கேட்கின்றோம்! வரும்நூற்றாண்டில்*
*உமிழாத நிலைபெறுவீர்! ஒளியாய் வாழ்வீர்!*
*ஒண்டமிழ்க்குத் துணையாவீர்! அறங்காப் பீரே!* 4

-1959

## 8 ஏய்ப்பாரை மாய்த்தல் வேண்டும்.

செந்தமிழ்நன் னாட்டிற்குத் தொழிற்றுறையில்
சீர்திருத்தம் வேண்டுமென்றோம்; தில்லி வாழ்வோர்
இந்தியநன் னாட்டிற்குள் தொழில்முன் னேற்றம்
எங்கிருந்தாற் றானென்ன? தில்லி யொன்று
முந்திவிடின் போதுமென்று தமிழ்நாட்டார்கள்
மகிழ்வுகொள வேண்டாமா? என்றுசொல்லிச்
சிந்தைபிள வானதற்குச் செம்மண் பூசிச்
சரிசெய்வோர் போலமகிழ் வெய்தினார்கள்!

தமிழ்மொழியில் முன்னேற்றம் வேண்டு மென்றோம்!
தில்லியறி வாளரதைத் தள்ளிவிட்டுத்
தமிழ்மொழியும் பிறமொழியும் இந்தி யென்னும்
தில்லிமொழி முன்னேறில் மகிழவேண்டும்.
நமிலுயர்வு தாழ்வுகளே(து) இந்தி வந்தால்
நமக்கெல்லாம் பெருமைதான்; என்று சொல்லி
இழிசலடைந்து போனதற்குச் சேற்றைப் பூசிச்
சரிசெய்வார் போலமகிழ் வெய்தினார்கள்!

தில்லியிலே பேரணைகள் கட்டி விட்டால்
திகழ்பரத கண்டமெலாம் நீரோடாதோ?
தில்லியிலே ஏருழுது விதைத்து விட்டால்
தென்னாட்டில் விளையாதோ? என்றவாறு
தில்லியினர் நாடகத்தை நடத்துதற்குத்
தென்னாட்டுக் குருடரெல்லாம்.......
.............................................................................................
.............................................................................................
தாம்போடும் திட்டமெலாம் தில்லிவாழ்வோர்
தாமுயர்ந்து வாழற்கே! அவைகட் கெல்லாம்
ஆம்போடும் குருடரெல்லாம் செவிட ரெல்லாம்
அமைச்சேற்றுத் தம்குடலைக் கழுவுகின்றார்
நாம்போடும் பேரொலிக்குச் செவிசாய்க்காது
'நாமம்' போட் டேய்ப்பாரை மாய்த்தல் வேண்டும்
தேம்பாயும் தமிழ்நாட்டார் பிணமா குமுன்
தெவ்வரெலாம் பிணமாகும் வகையைச் செய்வோம்!

-1960

## 9 இருள்மிகு நாடே..... !

*அரசியல் தெளியா மாந்தரிங் கொருபால்;*
*அறம்பிழை வாணிகர் ஒருபால்;*
*வரவியல் செலவியல் அறிகிலர் ஒருபால்;*
*வருவதை முடக்குவர் ஒருபால்;*
*கரவுளம் ஒருபால்; குலவெறி வளர்க்கும்*
*கயவரும் களியரும் ஒருபால்;*
*இரவினும் திண்ணிய மடமைகொள் நாடே*
*எங்கொளி பெறுகுவ தினியே!*

**-1963**

## 10 எத்தனை நாள் போராட்டம் ?

*முத்தமிழை மீட்பதுவோ பகைவர்முன்*
*வீழ்வதுவோ, முடிவு செய்வீர்!*
*கத்துவதால் குரல்வற்றி உயிர்வற்றிக்*
*களைத்தல்லால் பயனென் கண்டீர்?*
*செத்தழிவோம் என்றெண்ணி அஞ்சினிரோ?*
*தமிழ்மறவீர்! சீற்றம் எங்கே?*
*எத்தனைநாள் போராட்டம் நடப்பதிங்கே?*
*உயிர்குடிக்க எழுக நாடே!*

**-1964**

## 11 தமிழ் நிலத்தை விடுவிப்பீர் !

இருசகன்ற வண்டியினிற் கண்ணவிந்த
ஏறுகளைப் பூட்டி, மக்கள்
நெரிசலுறுங் குறுந்தெருவில் பெருங்குடியன்
வெருட்டுதல்போல், அமைச்சர் என்பார்
அரசியலை நடத்துகின்றார் அவர்மனம்போல்!
மிகக்கொடுமை! அழன்றெ ழுந்தே
முரசறைவீர்! தமிழ்வழங்கும் முழுநிலத்தை
விடுவிப்பீர்! முனைவீர் இன்றே!

-1964

## 12 குரங்கர் ஆட்சி !

உரியன செய்யார்; சான்றோர்
உரையுளங் கொள்ளார்; தீய்ந்த
கரிய வன் னெஞ்சர்; முற்றாக்
கனவினிற் காரு வாவில்
நரியை நாய் புணர்ந்து பெற்ற
குரங்கு கள் ளுண்டாற் போலத்
திரியுநர்; உரைப்பர்; மக்கள்
திகைப்புற நாடாள் வோரே!

-1965

## 13 என்னைத் தூக்கிலிடுங்கள் !

வரிசை கெட்ட அரசினர்க் கின்னும்
உரைக்க வேண்டுவ தொன்றுண் டென்னில்
என்னைத் தூக்கில் இடுங்கள் என்பதே!
அன்னை மொழியைக் காத்திட அதுதான்
நடந்திட வேண்டும் என்னின் நடக்க!
கடந்த நாளெலாம் கடவா நாட்களே!
வாழ்ந்த பொழுதெலாம் வாழாப் பொழுதே!
வீழ்ந்த தமிழினை வீழ்த்திய இந்தியை
ஓட்டுதற் கென்றன் உயிர்தான் ஈடெனில்
தீட்டிக் கொள்க கைவாள்! இதோ, தலை!

வடவர் பிடிக்கு வால்பிடிப் போரை
உடல்வே றாக உயிர்வே றாகச்
சிதைப்பேன் என்று முழக்கினால் தூக்கெனின்
பதைப்பிலா தென்றன் தலைகொய் திடுக!
மயர்விலாத் தமிழின் மானங் காத்திட
உயிர்தான் விலையெனில் இதோ! உயிர்! கொய்க!
'பத்தவச் சலங்'கள் வயிறு நிறைந்திட
இத்தனை தமிழர் ஈகுவீர் உயிரெனில்
என்னுயிர் முன்னர் இளைப்பா றட்டும்;
என்ற முடிவில் இதனை உரைப்பேன்;

தமிழும், தமிழரும் பிழைப்ப தென்னில்
தமிழகம் தனியாய்ப் பிரிதலே தக்கது!
'இந்தியா வேண்டும் இந்தி வேண்டா' என்பதும்,
'குதிரை வேண்டும் குதிரைப்பீ வேண்டா' என்பதும்,
ஒப்பினும் பொருளினும் ஒன்றே யாகும்!
தப்பென மறுப்பார் தனிமேடை வருக!
இந்தியி னாற்றான் இந்திய மக்கள்
முந்தைய பிரிவுகள் முற்றும் மறந்தே
ஒற்றுமைப் படுவது கூடும் என்பிரேல்
இற்றை இந்தியா இன்றே அழிக!

"வடக்கன் பேசிடும் பேச்சே பேச்சாம்;
இடக்காய் அவன்நமக் கிட்டதே சட்டம்!"
என்றே அரசும் இயம்பிடு மாயின்
அந்த அரசும் இன்றே அழிக!

மானம் இழந்த மக்களும் மக்களோ?
கூனும் குருடும் கொடிமரம் பிணிக்கையில்
உலகை ஆண்ட தமிழரும் ஒய்வதோ?
மலர்ச்சி இன்றி இவரால் மாய்வதோ?
அடிமையா யிறந்திடில் சாவு இனிப்பதோ?
மிடிமையால் உரிமைச் சாவு கசப்பதோ?

இன்றே எழுக! எந்தமிழ்க் கூட்டம்
ஒன்றே கருதுக; ஒன்றே செய்க!

உள்ளக் கருத்தை உணர்த்துதல் மொழியே!
உள்ளக் கருத்திற் குலைவைப் பாரெனில்
வெள்ளம் போலும் திரளுக! திரண்டு
தீப்போல் கனல்க! களிறாய்ப் பிளிறுக!
பாய்க புலியென; பகையை விரட்டுக!
மாய்க தோற்றிடின்; மனைவி மக்களைத்
தூசென மதிக்க! உள்ளந் துறக்க!
மாசெனக் கருதுக, மானம் இலாவுடல்!

இறுதியாய் நமக்கிடும் தண்டம் என்னெனில்
உறுதியாய் நல்லுயிர் வாங்குதல் ஒன்றே!
மானந் தலைகெட மடியேந் துவது
வீணரின் செய்கை! மிடியரின் வினைவகை!
செந்தமிழ்க் குருதி ஓடுவ தென்னில்
முந்துவீர் தமிழரே! முந்துவீர் தமிழரே!
சிந்துவீர் குருதி! சிந்திய குருதியால்
இந்திய மண்ணில் தமிழக இணைப்பை
உடனே பிரித்திடற் கொருவழி செய்க!
கடனது தமிழர்க்கு! களிப்பொடு பொங்குக!

முன்னர்த் தோன்றிய விடுதலைப் படைகள்
இன்னவா றில்லை என்னும் படிக்கே
வெற்றி நினைவொடு நடந்து காட்டுக!
முற்றுக இன்றோ(டு) அடிமை வரலாறு!

*எந்தமிழ் நாட்டில் இதுவரைத் தோன்றிய*
*முந்து படையெலாம் மூச்சிலாச் சாப்படை!*
*பெரியார் நடத்திய பெரும்படை என்றோ*
*உரிய கூலியைப் பெற்றுணர் விழந்தது!*
*பின்னர் வந்தவை கூலிப்பட் டாளம்!*
*'இன்னர் பெரியர்; இன்னவர் தலைவர்;*
*இவரடி வைப்பின் அதன்பின் ஏகுவோம்!'*
*எனஎண் ணாமல் எழுக மறவனே!*
*மனம்உன் னுடையது; நினைவுஉன் னுடையது!*
*முழுநினை வெல்லாம் விடுதலை முழக்கம்!*
*விடுதலை ஒன்றே வேண்டிய தென்னிற்*
*கொடுதலை! கொடுஉயிர்; விடுதலை குமிழ்க்கும்!*

*பல்லை இளித்தா விடுதலை பெறுவது?*
*சொல்லை அடுக்கியா உரிமை சுவைப்பது?*
*கரையில் நின்றா கடலைக் கடப்பது?*
*விரைக தமிழனே விடுதலை நோக்கி!*
*பொங்கும் உணர்வால் விடுதலை முழக்கம்*
*எங்கும் எழுந்திடச் செய்க! தமிழனே!*

*நாட்டுக்கு விடுதலை நண்ணுவ தாயின்*
*வீட்டுக்கு வீடு மறவரைக் கூட்டுக!*
*நெஞ்சுக்கு நேராய்க் கத்தியை நீட்டினும்*
*அஞ்சாத தமிழர் ஆயிரக் கணக்கில்*
*எழுவா ராயின் இந்தி நுழையுமா?*
*தொழுதால் அடிமை விலங்கைத் துணிப்பரா?*

*சோற்றைக் கருதியா கல்வி கற்பது?*
*ஊற்றை அடைத்தா நீரை இறைப்பது?*
*பித்தக் குரங்கு பேய்பிடித் தன்ன*
*இத்தமிழ் நாட்டின் தலைமையர் இருப்பார்!*
*அவர்வாய் திறந்தால் நாடு பேசியதா?*
*அவர்'ஆம்' என்றால் ஒப்பினோம் என்பதா?*
*சோற்றுக் குடலும் மூளையின் தோற்றமும்*
*ஒன்றுபோ லாயின் உணர்வும் ஒன்றா?*
*தமிழர் தலைவர்(!) பத்த வத்சலம்*
*உமிழும் சொற்கள் தமிழர் உரைப்பதா?*

*இந்திக் கெதிர்ப்பிலை என்றவர் மொழியும்*
*மந்தித் தனந்தான் தமிழரின் ஒப்பமா?*

*உரிமைக் கடிப்படை உயிர்ப்போ ராட்டம்!*
*நரிமையும் நாய்மையும் அடிமையர் சொத்து!*
*விடுதலைப் பேச்சுக்குச் சாதலே விலையெனில்*
*விலையினைக் கொடுத்து விடுதலை பெறுக!*

*மாணவர் வருக! அறிஞர் வருக!*
*மானக் கற்பின் மங்கையீர் வருக!*
*இளமை மொய்க்கும் கனவினார் வருக!*
*வளமை குன்றா மறவோர் வருக!*

*தீத்திறஞ் செய்யினும் நாத்திறந் திறம்பாப்*
*பூத்த கொள்கைப் புலவரீர் வருக!*
*பாத்திறஞ் சாற்றும் பாவலர் வருக!*
*மணவறை பாரா மணியிளம் பெண்டிரும்,*
*கணவரை இழந்த கைம்மை மகளிரும்*
*தமிழர் விடுதலை என்னுந் தாழ்விலா*
*அமிழ்தாம் உணர்வில் அகமகிழ் வெய்துக!*

*மொழிப்போ ராட்டம் தீயென மூளுக!*
*விழிப்பிலார்க் கில்லை விடுதலை இன்பம்!*
*நாய்கட் கென்றும் நக்கலே வாழ்க்கை!*
*பேய்களின் ஆட்சியை இன்றே தொலைத்திடப்*
*பீறிட்டுக் கிளம்பும் குருதிமேல் ஆணை!*
*கூறிட்(டு) என்னுடல் சிதைப்பினும் பகைவரை*
*ஏறிட்டுப் பாராத நெஞ்சுமேல் ஆணை!*
*பூக்கிலா உரிமைஎன் உயிர்தரப் பூக்குமேல்*
*தூக்கினில் இடட்டும்,என் உடலைஇவ் வரசே!*

**-1965**

## 14 வழி பிறிதுண்டோ ?

மொழிநலம் உணரார்; மக்கள்
முழுநலங் கருதார்; தீய
பழிமிகத் துணிவார்; ஈட்டம்
பதுக்குவார்; உரையால் ஏய்ப்பார்;
அழிவழக் கிடுவார்; இன்னோர்
அமைச்சரென் றமர்வா ராகில்
வழிபிறி துண்டோ? நாடு
வளம்பெறல் குதிரைக் கொம்பே!

-1965

## 15 தமிழ்நாட்டு நிலை !

பொற்பிழப்பால் நலந்தேடிப் புனைசுருட்டால்
பொருள்சேர்க்கும் பொய்ம்மை மாந்தர்;
கற்பிழப்பால் கலைகற்றுக் கருவழிப்பால்
கலைவளர்க்கும் கயமைப் பெண்டிர்;
சொற்பொழிவால் தொண்டாற்றித் திரைப்படத்தால்
தமிழ்வளர்க்கும் தலைவர் கூட்டம்;
மற்போரால் பெரும்பணத்தால் அரசமைக்கும்
மதிகேடர்; தமிழர் நாட்டே!

-1966

## 16 எச்சரிக்கை !

முன்னம் பறித்த
முழுமைத் தமிழ்நிலத்தைத்
தன்னால் திருப்பித்
தராமல் இருப்பாரேல்
கன்னல் தமிழ்மொழியால்
கட்டுண்டு பாய்ந்தெழுந்தே
இன்னல் விளைப்போமென்
றெச்சரிப்பாய் பூங்குயிலே!

-1966

## 17 வேண்டும் விடுதலை !

"ஆண்டுநூ றானாலும்
அன்னைத் தமிழ்நாடு
வேண்டும் விடுதலை
எண்ணம் விலக்கோம்யாம்;
பூண்டோம் உறுதி!
புறப்பட்டோம்" என்றேநீ
மூண்ட இடியாய்
முழங்காய் தமிழ்மகனே!

## 18 பகை விலகாதோ !

உள்ளத் துரமும் உரையில் துணிவும்
உரைத்தபடி
வெள்ளத் தனைய துயர்மேல் வரினும்
வினை செயலும்
கொள்ளத் தகுந்த விடுதலை எண்ணமும்
கொண்டுவிட்டால்
எள்ளத் தகுந்த பகைவில காதோ
இளைஞர்களே!

-1966

## 19 நாடு நலம்பெறுதல் குதிரைக்கொம்பே !

ஏடாயி ரங்கோடி எழுதிக் குவித்தாலும்,
இடித்திடித்து உரைத்திட் டாலும்,
பூடாயி ரங்கோடி பிழிந்து,மருந் திட்டாலும்,
புத்தறிவு புகட்டி னாலும்,
கேடாயி ரங்கோடி கிளர்க்கின்ற செய்தித்தாள்,
கீழ்மைத் திரைப்படங்க ளாலே,
நாடாயி ரங்கோடி ஆண்டுகள் சென்றாலும்
நலம்பெறுதல் குதிரைக் கொம்பே!

-1967

## 20 விடுதலையே வேண்டும் !

ஒட்டென்றும் ஒருமையென்றும் உறவாடும்
வடவனுயர் கதவை நாளும்
தட்டென்று தட்டுகின்றீர்! தரும்பொருளால்
தமிழரசை நடத்து கின்றீர்!
மட்டென்று மதித்தீரோ நந்தமிழர்
மானத்தை; மறக்கூட் டத்தை!
வெட்டொன்று துண்டிரண்டாய் "விடுதலையே
வேண்டும்"என விளம்பு வீரோ!

-1967

## 21 பிரிவினைக்கு வழிவகுப்போம் !

புரிவினைகள் அத்தனைக்கும் புரைவடவர்
தம்மிசைவைப் போய்ப்போய்க் கேட்டுப்
பரிவினுக்குக் காத்திருக்கும் படி,என்ன
வந்ததிங்கே! பணங்கா சுக்கே
நரிவினையைச் செய்திடுவார் நயந்துவரார்;
நறுந்தமிழர்க் குரிமை வேண்டிப்
பிரிவினைக்கு வழிவகுப்போம்; பிறவினைகள்
பிறகென்போம்! பிளிறு வோமே!

-1967

## 22 புரட்சி நாள்.... !

*பட்டினியால் ஒருபுறத்தே மக்கள்படும்*
*பாடறிந்தும் பதறார் உள்ளம்!*
*சுட்டிறப்பார் எண்ணிக்கை வளர்வதல்லால்*
*நாட்டுவளம் வளர்தல் காணோம்;*
*எட்டுணையும் உரிமையில்லை; வாழ்க்கையில்லை;*
*ஏழ்மையின்னும் ஒழிய வில்லை;*
*கிட்டியதோ பெரும்புரட்சி இந்நாட்டில்*
*கிளர்ந்தெழுமோர் நல்ல நாளே!*

**-1967**

## 23 ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை... !

*ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை, உள்ளத்தே*
*அற்றைத் தமிழ்த்தாயிங் காட்சி புரியும்வரை,*
*எற்றைக்கும், எந்நிலத்தும், எந்த நிலையினிலும்*
*மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டால்*
*பெற்றவர்மேல் ஐயம்; பிறப்பின்மேல் ஐயமெனச்*
*சற்றும் தயக்கமின்றிச் சாற்று!*

**-1968**

## 24 சாகின்ற செந்தமிழீர்... !

*சாகின்ற செந்தமிழீர் சாகா விடுதலைக்கே*
*போகின்ற தெண்ணிப் புறப்படுங்கள் - மாகுன்றத்*
*தோளும் மணிமார்பும் தூங்காத நல்லுணர்வும்*
*நாளும் துணையாம் நமக்கு!*

**-1968**

## 25 உருப்படியாகாதடா!

உருப்படி யாகாதடா - தமிழகம்
உருப்படி யாகாதடா - தமிழா
உருப்படி யாகாதடா!

தெருப்படி யிறங்கினால் குலமதத் திருட்டுகள்;
திரிவோர்தம் வாயெலாம் அரசியல் புரட்டுகள்!
நெருப்படி வாழ்க்கையில் ஏழையர் வாட்டங்கள்!
நிலையற்ற போக்குகள்! சோற்றுத்திண் டாட்டங்கள்!
(உருப்படி)

கயவரும் கள்வரும் காசடிக் கின்றார்;
கரவினால் தொண்டர்கள் போல்நடிக் கின்றார்!
நயமிகு நாடக விளம்பர உரைகள்!
நாளுக்கு நாள்மிகும் ஒளிப்படத் திரைகள்! (உருப்படி)

அறிஞர்கள் வறுமையில் வாடுவர் இங்கே;
அறிவுநூல் செய்வதும் உரைப்பதும் எங்கே?
நெறிகளும் முறைகளும் செல்வர்கால் செருப்பு;
நேர்மையர் வாழ்க்கையோ மெழுகு கீழ் நெருப்பு! (உருப்படி)

அரசியல் விரகுகள் ஆயிரங் கோடி!
ஆரவா ரங்கட்கே மாடிமேல் மாடி!
முரசறைந் தென்பயன் விடுதலை நாடி?
முனைபவர் குலைவதோ நாட்குநாள் வாடி? (உருப்படி)

பெண்டிர்க் கிலைபெண்மை; ஆண்கட்கே தாண்மை?
பிழைப்பதற் கெனில்விடு வார்மன நாண்மை!
தொண்டுசெய் வார்வினை, செயல்முற்றும் பொய்ம்மை;
தொகைவரு மென்னிலோ புதைப்பர்தம் மெய்ம்மை!
(உருப்படி)

உரமில்லை நெஞ்சினில், தமிழர்க்கிந் நாளில்!
ஊராளும் துடிப்பில்லை அவர்கூம்பல் தோளில்!
மரமென உணர்விழந் தார்! மறங் கெட்டார்;
மானத்தை என்றைக்கோ கொட்டாவி விட்டார்! (உருப்படி)

தாய்மொழிப் பற்றில்லை; இனப்பற்று மற்றார்!
தம்மினத் தாரையே பகையெனச் செற்றார்!
நாய்மொழி என்னினும் அவர்கற்க லுற்றார்;
நாற்பது நூற்றாண்டாய் அடிமையிங் குற்றார்! (உருப்படி)

வெற்றுமை, வெள்ளைத்தாள், எழுத்துப்போ ராட்டம்!
வீறுகொள் என்றிடில் எடுப்பர்நல் ஓட்டம்!
ஒற்றுமை என்பது தாளொட்டும் பசையே!
உயர்பாடல் என்பது கழுதைகத் திசையே! (உருப்படி)

-1969

## 26 இறுதி உரை !

ஆட்டிப் படைக்கும் அரசுக்கும் ஆரியர்க்கும்
ஈட்டியால் செந்தமிழர் தீட்டும் இறுதியுரை!
கூட்டில் அடைத்தீர்; குமுகாயச் சீரழித்தீர்;
வாட்டி வதைத்தீர்; வறுமை யுறச்செய்தீர்!
நீட்டிப் படுத்திடவும் கூனாமல் நின்றிடவும்
மாட்டாமல் எம்மவரை வல்லடிமை செய்துவிட்டீர்!
காட்டிக் கொடுக்கும் கயவரிங்கு உள்ளவரை
நாட்டின் விடுதலைக்கே நாவசைக்க மாட்டீர்கள்.
கேட்டோம்; கிளர்ந்தெழுந்தோம்;
கீழென்றே எண்ணிவிட்டீர்.
கூட்டிலுள்ள ஆவி கொதித்திடுமுன், செங்குருதி
சூட்டினால் பொங்கிச் சுழன்றிடுமுன், இந்நிலத்துக்
கோட்டைக் கடந்துய்வீர்! இன்றேல் கொடிமுகத்து,உம்
கூட்டிற் கமைப்போம் குழி!

-1969

## 27 நாளையே விடுதலை !

எழுக தமிழனே! இனநலம் கருதுக!
கொழுந்துவிட் டெரியும்உன் குலைக்கனல் பெருக்குக!
உன்றனை விடுதலைக் கொப்புவித் திடுக!
பின்வரும் தமிழருன் பெற்றியைப் புகழ்வர்!
வடக்குக் கதவினை இறுக்கிப் பூட்டுக!
இடக்குசெய் ஆரிய இனப்கொழுப் புருக்குக!
இழிவுக்குத் தீவை! ஏற்றப் படியமை!
அழிவுசெய் அடிமைத் தளைகளை உடைத்தெறி!
உணர்வுகொள்! உறுதிகொள்! உயிரைப் பணயம்வை!
தினவுத் தோள்களால் வெற்றியைத் திருப்பு!
நாளையே விடுதலை நண்ண,
காளையே! களிற்றின் கன்றே! கனல்கவே!

-1969

## 28 விடுதலை மருந்து !

ஊட்டப் பெறாத உணர்வொடு விலங்கும்
பறவையும் ஒற்றுமை யுறுங்கால்
மாட்டப் பெறாது வலிந்துநாம் புகுந்து
மனங்கெட மதம்,குலம் என்னும்
பூட்டப் பெறாத சிறைகளி லிருந்து
புழுங்குற அறிவெலாம் புதைந்து
கூட்டப் பெறாமல் சிதைவுறும் நமக்கே
கூடுமோ விடுதலை அமிழ்தே!

கத்தப் பெறாமல் குழவிவாய்க் கமிழ்துங்
கனிவுறத் தாய்தரல் உண்டோ?
கொத்தப் பெறாமல் பைங்கிளி வாய்க்கே
குலைக்கனி சாய்தலும் உண்டோ?
மொத்தப் பெறாமல் கவர்பொருள் கள்வன்
முன்வரத் தருதலும் இயல்போ?
வித்தப் பெறாமல் விளையுமோ நமக்கே
விடுதலை எனும்உயிர் மருந்தே?

-1969

## 29 தன்னாட்சி வேண்டும்!

*பெற்றுவிட வேண்டும், தமிழகம்*
*பெற்றுவிட வேண்டும், தன்னாட்சி*
*பெற்றுவிட வேண்டும்!*

*முற்றும் நினைத்தே உரைக்கும் உரையிது!*
*முழுமையாய் என்றைக்கும்*
*மாற்றம் இலாதது! (பெற்று)*

*ஒற்றுமை ஒற்றுமை என்பதால் யார்க்கும்*
*உருவான பயனென்ன? யார்க்கது ஏற்கும்?*
*வெற்று நினைப்பினில் வாழந்திட லாமோ?*
*விலகுதல் பகையெனப்*
*பொருள்கொள்ள லாமோ? (பெற்று)*

*கற்றும் கல்லாதவர் போல்,இந்த நாட்டில்*
*கணக்கிலா மதங்களும் குலங்களும் கொண்டோம்!*
*தொற்றும் பிணிகளைப் போல்மூடப் பழக்கம்;*
*தொலையாத போராட்டம்; ஓயாத தொல்லை! (பெற்று)*

*தில்லிக்குப் போவதும் வருவதும் ஒன்றே*
*தெற்கினில் உள்ள அமைச்சர்கள் வேலை!*
*மல்லிக்குச் சுக்கொன்று வேண்டுவ தென்றால்*
*மாதங்கள், ஆண்டுகள் காத்திடல் நன்றோ? (பெற்று)*

*வடக்கிலோ மேன்மேலும் அதிகார வீக்கம்;*
*வருமான வீழ்ச்சியோ தெற்கினைத் தாக்கும்!*
*இடக்குசெய் இந்தியும் இடைஇடைத் தொல்லை!*
*எத்தனை நாளைக்கோ இத்துன்ப எல்லை? (பெற்று)*

*நாளுக்கு நாள்ஏழை நலிவையே கண்டான்;*
*நாடாளும் பதவிகள் பணக்காரன் கொண்டான்;*
*தோளுக்குச் சுமைமேலும் மிகுகின்ற போதில்*
*தொந்திக்கு விருந்திசை கேட்கின்றோம் காதில்! (பெற்று)*

உழைப்பவர் வாழ்க்கையில் துயர்காணல் நன்றோ?
உயர்வான திட்டங்கள் செயலாதல் என்றோ?
பிழைப்பெல்லாம் செல்வர்க்கே பேச்சென்ன பேச்சோ?
பிறநாட்டில் கையேந்தும் வாழவென்ன வாழ்வோ?
(பெற்று)

இராப்பகல் உழைப்பவன் சாகின்றான் நாட்டில்;
ஏய்ப்பவன் துய்க்கின்றான் உயர்மாடி வீட்டில்!
வராப்பயன் வந்ததாய் முழங்குகின் றீர்கள்;
வாய்ச்சொல்லால் முழக்கத்தால்
என்னகண் டீர்கள்? (பெற்று)

-1970

## 30 என்றும் ஒரேநிலை ஏன் ?

என்றும்போல் தேர்தல்வரும்; முடிவுவரும்;
ஆங்காங்கே, போட்டியிட்டே
ஆர்ப்பரிப்பார் பலருக்குள்ளும்,
என்றும்போல் ஒவ்வொருவர்
தேர்ந்தெடுக்கப் பெறுவார்கள்!
அமைச்சரவை அமைப்பார்கள்;
அமருவார்கள்!
என்றும்போல், தருக்கம்வரும்;
சட்டம்வரும்; திட்டம்வரும்;
செய்திவரும்; எல்லாமும்
வரும்! - ஆனாலும்,
என்றும்போல் ஏழையரின், உழைப்பவரின்,
நிலைமட்டும் இருந்தபடி யிருந்துவரும்!
எண்ணிப் பார்ப்பீர்!

இதுகாறும் எத்தனையோ தலைவர் வந்தார்;
கூட்ட மிட்டார்;
"தோழர்களே! அரிசி,புளி, மிளகாய் எல்லாம்
குதிகாலில் இறக்கை கட்டி,
விலையேறிப் பறந்த" தென்று
கூச்சலிட்டார்; மறியலிட்டார்; 'குறைப்பேன்' என்றார்!
அதிகாரம் கைக்கு வரும்;
அப்படியே செருக்குவரும்! இயங்கிவரும்! ஆனாலும்
உழைப்போர் மட்டும்
மிதிகாலில் நசுக்குண்ணும் புழுப்போலத்,
துடிக்குநிலை இருந்தபடி யிருந்துவரும்!
எண்ணிப் பார்ப்பீர்!

**-1971**

## 31 வங்காளம் தரும் பாடம் !

வங்காள மக்கள்!
மங்காத உணர்வினர்!
பொங்கிப் பாய்ந்தெழும் பூரித்த தோளினர்!
மண்ணைத் தாயென வணங்கும் மரபினர்;
புண்ணைத் தழும்பெனப் போற்றும் மறத்தினர்;
மொழியை உயிரென முழுங்கும் மாண்பினர்;
அழியா இலக்கியம் ஆர்க்கும் அறிவினர்,
பழிவரின் உள்ளம் பதறுமா னத்தினர்!
இழிவெனின் உயிரையும் எள்ளும் இயல்பினர்;
ஓவியக் கலைஞரும் உருவியத் தச்சரும்
பாவியப் புலவரும் படைத்தலை மறவரும்
நாட்டியக் கூத்தரும் நல்லிசை வாணரும்
ஈட்டிய பெரும்புகழ் கூட்டிய இனத்தினர்!
இந்திய மக்கள் யாவரும் ஆங்கிலர்
சிந்திய சோற்றுப் பருக்கையைப் பொறுக்கி
உண்டு களித்தே உறங்கிடும் பொழுதில்
பண்டைப் பெரும்புகழ் மீட்கும் பான்மையில்
முந்தி முந்தி முரசம் முழக்கி

எந்தாய் நிலத்தை எமக்குக் கொடுவென
வெள்ளையர் தம்பால் விடுதலை கேட்ட
உள்ளொளி நிரம்பிய உரிமை உளத்தினர்!
பெண்டிர் அனைவரும் கற்பின் பெற்றியர்;
பண்டை வரலாறு படைத்த பாவையர்!

சுருங்கச் சொன்னால் தமிழரோ டிவர்கள்
ஒருங்கே பொருந்திய ஓரினம் எனலாம்!
ஆயினும் இற்றைத் தமிழர்போல் அடிமையால்
தாயினம் பேணாத் தகவிலர் அல்லர்!
காக்கை போலக் கரைந்துண்ணும் பண்பினர்;
பீக்கைச் சோற்றுக்குப் பிறர்க்கு நம்போலக்
காட்டிக் கொடுக்கும் கயவர்கள் அல்லர்!
நீட்டி முழக்கு வானேன்? இங்குப் போல்,
வரலா றழிக்கும் வையா புரிகள்,
திறமையாய்ப் புளுகும் தெ. பொ. மீக்கள்,
சொல்லின், 'செல்வ'ராம் சே(ரத்)துப் பிள்ளைகள்,
மூக்கு வெயர்த்த முத்துச்சண் முகங்கள்
பத்தி லக்கப் பத்தவத் சலங்கள்,
சுத்திக் காம்பாம் சுப்பிரமணி யன்கள்,
எனும்படி அவரினத் தெவரும் இருக்கார்!
இனும்பிடி படும்படி எடுத்துரைப் பதெனில்
அற்றைக்குத் தமிழினம் இருந்த அமைப்புப்போல்
இற்றைவங் காளியர் இனமென் றுரைக்கலாம்;
(இற்றைத் தமிழர்போல் உலகில் இழிந்த
ஒற்றைத் தனியினம் உவமைக் கில்லையே!)
ஈங்கிது கிடக்க!
　　　　　இத்துணைப் பெருமையும்
தாங்கும் வங்காளத் தலைமை மக்களின்
இன்றைய நிலைமை என்ன? என்றறிந்தால்
கன்றிய நெஞ்சம் கண்ணீர் வடிக்கும்!
மயிர்பொடித் துதிரும்; மாவுடல் நடுங்கும்;
உயிர் துடித்(து!) 'ஓ'வென ஓலமிட் டழுங்கும்!
வாழ்க்கை வெறுக்கும்; உலகெலாம் வறண்டஓர்
பூழ்க்கைப் புழுதியாய்க் கண்களிற் புலப்படும்!
ஏந்தலர், பகுத்தறிவு ஏய்ந்தவர் எனப்படும்

மாந்தரின் பெருமை மண்ணாய்ப் போகும்!
மறமும் மெய்மையும் கொண்ட மக்களின்
அறமும் கல்வியும் ஆற்றலாய்த் தெரியும்!
வல்லா சென்றும் நல்லா சென்றும்
சொல்லப் படுவன சுடுகா டாகும்!

சமயப் பெருமைகள் சாணியாய் நாறும்!
அமைந்துள கோயில்கள் ஆட்டங் கொடுக்கும்;
கோபுரப் பெருமை குப்பைமே டாகும்;
காப்புடைக் கடவுள் எனக்கை யெடுத்துக்
கும்பிடும் பெருமைபோய்க் குழவிக் கல்லென
வெம்பிக் கூறிட வேண்டி யிருக்கும்!
அத்தகு நிலைக்கு,அதை ஆளாக் கியவோர்
தித்திருக் கனை,(பேர் சாற்ற நாகூசும்),
இன்னுமிவ் வுலகமும் இதிலுறை மக்களும்,
(மண்ணாங் கட்டி! மக்களாம் மக்கள்!)
,விட்டுவைத் துளரெனில், வேறென்ன சொல்வது?
சட்ட மன்றமாம்! சட்டங் காக்கும்
அறநெறி மன்றமாம்! ஆட்சியாம்! அரசாம்!
திறமையாம்! அமைச்சராம்! சென்னையாம் தில்லியாம்!
பாராளு மன்றமாம்! படைபட் டாளமாம்!
நேரான பொருளும் இவற்றிற் கென்னெனில்
ஊரை,ஏ மாற்றி உலையில் இடுவதே!

இவ்விடத் தில்தான் எண்ணுதல் வேண்டும்;
ஒவ்விய கொள்கையால் உரங்கொண்ட தமிழர்
அங்கிங் கொருவ ராகிலும் இருப்பர்;
இங்கிவை அவர்செவிக் கேறும் என்றுதான்
பாட்டடி கொண்டுநான் பதற எழுதுவேன்!
காட்டடி அடிக்கும் அரசியல் காரர்க்கு
எல்லா அடிகட்கும் 'இடையில் அடிக்கும்'
பொல்லாக் 'கையடி' ஒன்றே பொருளாம்!
இதுவும் கிடக்க,
இற்றைநாள் இளைஞர்
புதுவுணர் வெய்திப் புரட்சியென் றார்ப்பர்;
விடுதலை யே, நாம் வேண்டுவ தென்பர்;
கொடுதலை என்னினும் கொடுக்கமுன் வருவர்!

அன்ன இளைஞரை அன்புடன் வேண்டுவேன்;
என்னுரை தவறெனில் என்னைத் திருத்துக!
விடுதலை என்பது வேண்டுகோள் அன்று!
தொடுதலைத் தவிர விடுதலை அறியாப்
பூட்கையோர் தம்மின் வாழ்க்கையே விடுதலை!
வேட்கையும் உண்டு;அது நாடுவேண் டுவதே!
எண்ணமும் உண்டு;அதும் எதிரியைப் பொடிப்பதே!
பண்ணும் உண்டு;அதும் படைப்பா டல்களே!

அத்தகு விடுதலை ஆர்த்தஓர் இனந்தான்
மெத்தவங் காளியர் மேட்டிமை இனமாம்!
அந்த இனத்தின் அரற்றலும் அழுகையும்
எந்த இனத்தின் எழுச்சியும் ஒடுக்கும்.
விடுதலைப் பேச்சையே வெறுப்புடன் ஒதுக்கும்!
கெடுதலை நமக்கேன், எனவியா கேட்கும்!
உரிமை கேட்பதே உயிர்க்கொலை என்னும்!
நரிகளும் நாய்களும் நாயகம் ஏற்றால்
கழுகும் காக்கையும் காவல் காக்கும்!
அழுகலும் நாறலும் அன்றாட நிகழ்ச்சி!
உண்மையும் உரிமையும் உயிரற்றுக் கிடக்க
வெண்மையும் வெறுமையும் வெண்குடை பிடிக்கும்!

வெறியோன் ஒருகால் அரசினை வென்றால்,
அறிவினார் எவரும் ஆட்சிக்கு வேண்டா!
எத்தகை ஆற்றலும் எழுச்சிகொள் ளாமல்
மெத்தவே அடக்கவும் சொற்களால் மிரட்டவும்
படிந்தால் அடிமைப் படுத்தவும், படிப்படி
முடிந்தால் அழிக்கவும் அழிவினை மூடவும்,
துணிந்து செய்யலாம்; பொய்யைத் தூற்றலாம்!
பணிந்து செல்லுதல் பழிக்கிடன் என்று,
பதவிக் கையன் பலவும் செய்யலாம்!
உதவிக்குத் தம்போல் ஒருவரை அழைக்கலாம்!
'அமெரிக்கா' போன்ற,வல் லரசையும் அணுகலாம்!
குமுறிக் குமுறிக் குலைநடுங் கிடவே
மக்களைக் கோடியாய் மாளச் செய்திடத்
தக்க கருவிகள் தந்தும் உதவலாம்!
காலக் கொடுமையால் மக்களின் கருத்துகள்
ஓலத்தும் சாவிலும் ஒடுங்குதல் உணர்க!

இத்தகு நிலையில் எந்தமிழ் நாட்டில்
புத்துருக் கொளுமொரு புரட்சியைத் தோற்றினால்
என்ன விளையுமென் றெண்ணிப் பார்க்கிறேன்;
மின்னலொன் றென்னுடை மேனியில் பாய்ந்தது!
மந்திரம் அன்று! மாயமும் அன்றே!
இந்திரா காந்தி யாகியாக் கானாய்
மாறி நந்தமிழ் மக்களை மாய்த்தால்
வேறுயார் நமக்குத் துணை வர விரும்புவார்?
எண்ணிப் பார்க்கிறேன்....!
                    இந்திரா வெனுமொரு
பெண்ணிற் கத்தகு துணிச்சல் பிறக்குமா?
பிறப்பினும் பிறக்கா தாயினும் நம்முடைச்
'சிறப்புத்' தமிழரைச் சிறிதே நினைக்கிறேன்;
வங்காளர் துணிவு தமிழர்க்கு வருமா?
வங்காளர் ஒற்றுமை தமிழரில் வாழுமா?
சிறுத்தைபோல் அன்று; கூற்றமாய்ச் சீறும்
திறத்தினில் அவர்போல் தமிழர் திகழ்வரா?
குருதி ஆற்றினில் குளித்து மூழ்கிடும்
உறுதி நம்மிடை ஒருதுளி இருக்குமா?
பேச்சுப் பேச்செனப் பேசித் தூவலை
வீச்சு வீச்செனவீசிடும் மறவர்கள்
உண்மை விடுதலை உயிர்த்ததிங் கென்றால்
திண்மை குறையாத் திறத்தொடு நிற்பரா?
எனைவகை யால்நாம் தேறியக் கண்ணும்
வினைவகை யால்வே றாகிவிடும் மாந்தர்
பலர்எனக் குறள்மொழி பகர்ந்ததே; யாரை?
சிலர்எனில் முனைந்திடச் சிறிது கருதலாம்!

இன்றோ!
எதற்கெடுத் தாலும் இந்திரா காந்தி
கதவுகள் மூடிக், காதுகள் பொத்தி
ஊமையாய் இருந்திடக் கண்டும் நம்மவர்
ஆமையாய் ஒடுங்கி அடங்கிய பின்னரும்,
திண்ணையில் படுத்துத் திராவிடங் கேட்ட
அண்ணாத் துரைகள் அடங்கிய பின்னரும்
'திராவிடம்'போய், 'தமிழ்நாடு'போய், பெரியார்
'இராமருக்குச் செருப்படி' என்ற பின்னரும்,

*இந்தியால் இறந்த இருநூற்று வரையும்*
*செந்தீக் கொலுவிச் சிதைந்தோர் நினைவையும்*
*ஒருங்கே மறந்து,அவர் உயிர்பறித் திட்ட*
*பெருங்கல் நெஞ்சன், அரசியல் பேயன்,*
*பத்த வத்சல சுப்பிர மணியரோ*
*டொத்து,ஊ தற்குநாம் ஒப்பிய பின்னரும்,*
*தன்னாட்சிக் கொள்கையைத் தரையினில் புதைத்துத்*
*தென்னையும் பனையும் தேடிய பின்னரும்,*
*என்னருந் தமிழகம் விடுதலை எய்திட*
*முன்னர் எழுந்து முழங்குதற் காருளர்?*

*வடவர் வண்டியில் வலமோ இடமோ,*
*இடமுண் டென்றால் ஏறுங்கள் என்றே*
*தமிழரை அழைக்கும் தலைவரே அல்லால்*
*கமழும் விடுதலைக் களம்புக வருவர்,யார்?*
*அமைச்சர் பதவியில் அமர்ந்ததும் அவரவர்*
*நமைச்சலை அடக்கவே நாழிகை இன்றி*
*பட்டந் தாங்கவும் பட்டுடை யேற்கவும்*
*கொட்டம் அடிக்கவும் கொடுப்பதை வாங்கவும்*
*நேரம் இன்றி, நினைவின்றி அலைகையில்*
*காரம் போன விடுதலைக் கனவை*
*எண்ணிப் பார்த்திட எவருளர்? உரிமைப்*
*பண்ணின் எழுச்சியைப் பாடிட வருவர்யார்?*

*என்னருந் தமிழரை இதோ,காண் கின்றேன்;*
*தந்நலம் ஒன்றே குறிக்கோள் தாங்கிப்*
*பொதுநலம் என்றால் பொருளெது வென்னும்*
*நொதிந்து போன நொள்ளையர் ஒருபுறம்!*

*அந்தநொள் ளையரை ஆரவா ரத்தால்,*
*தந்திரப் புளுகால் தலைத்தலைப் புகுந்தே*
*ஏமாற்றிப் பிழைக்கும் எத்தர் ஒருபுறம்!*

*தாமுமாற் றாமல், தமரையும் விடாமல்*
*நெடுங்கிடைக் குறுக்காய் நீட்டிப் படுத்தே*
*ஒடுங்கிய உளத்தொடு பழமையில் ஊறிப்*
*புலனும் பொறியும் புரையிட் டோடிய*

குலமும் சமயக் கூச்சலும் ஒருபுறம்!
நிலமும் நீரும் இவ்வகை நேர்தலால்
நலமும் விளைவும் நலிவுறத் தோன்றிய
இளையோர் கூட்டம் ஒருபுறம்! அவரொடு
வளையோர் கலந்திடும் வலிப்புகள் ஒருபுறம்!

இத்தகு சூழலில் விடுதலை ஏந்திப்
புத்துணர் வாலொரு புரட்சி தோற்றிட
எண்ணிப் புறப்படும் இளைஞரீர்!இந்த
மண்ணில் தோன்றிய மாசறு தொண்டரீர்!
கருத்துப் புரட்சியே முதற்கண் கருதுவீர்!
கருத்துப் புரட்சியே விடுதலைக் கருவி!
அதனால்,

எழுச்சி பெற்ற இளையோர் யாவரும்,
புழுச்சிறை போலும் புன்மை உலகினை,
சேற்றுப் புலத்தின் பழமைச் செருக்கினை,
மாற்றிடத் துடிக்கும் மனத்தினர் யாவரும்,
மணிமணி யான மாணவ ரனைவரும்

அணியணி யாகப் படைபடை யாக,
ஒன்றாய்த் திரண்டே ஊர்ஊ ராக
நன்றாய் ஊன்றுக புரட்சி நாற்றினை!
நாற்று வளரவே நாளும் கருத்துநீர்
ஊற்றுக; உழைப்பை உரமெனக் கொள்ளுக!

ஊக்கம் பெறுவீர்! இராப்பகல் உழைப்பீர்!
தூக்கந் தவிர்ப்பீர்! தூற்றுதல் எள்ளுவீர்!
வன்மையாய் உடலை வளர்ப்பீர்! வறிதாம்
புன்மையும் போலியும் ஒருங்கே புதைப்பீர்!
கருத்து மழையினால் கால நிலத்தினில்
குருத்துவிட் டெழுந்தே உரிமை குலுங்கிடும்!
குலுங்கும் உரிமையில் குமிழ்த்திடும் அதுதான்
இலங்கு விடுதலை எனுமொரு கதிரே!
வங்கா ளந்தரும் பாடம்
இங்கிது வல்லால் வேறொன் றிலதே!

-1971

## 32 தமிழ் நிலத்தை மீட்பீர் !

என்றெழுவும் தமிழர்படை?
என்றெமது தோள்புடைக்கும்?
இளைஞர்களும் பெண்டிர்களும் எழுந்து வந்தே
ஒன்றிணைவ தெந்தநன்னாள்?
உயர்நிலத்தை மீட்பதெந்நாள்?
உலகம்வாழ் தமிழரெலாம் ஒன்றாய்க் கூடிக்
குன்றனைய பெரும்புகழைக்
குவிப்பதெந்நாள்? - வாழ்வதெந்நாள்?
குவலயத்தார் காண்பதெந்நாள்? - என்றே என்றே
சென்றபல நூற்றாண்டாய்க் கேட்கின்ற தமிழர்களே!
செருமுகத்துக் கெழுந்திடுவீர் இன்றே! இன்றே!

நனவெடுத்த பெருநிகழ்ச்சி! நடத்திடுமெய் வரலாறு!
நடையெடுத்த பெரும்படையின் விடுத லைப்பண்!
தினவெடுத்த பொருதோளீர்!
திறலெடுத்த விறல்மனத்தீர்!
தீந்தமிழின் பகையெங்கே எங்கே என்று
கனவெடுத்த கதையிலெலாம் உரையெடுத்த காளையரீர்!
களிப்பெடுத்த செய்தியிது கேட்பீர்! கேட்பீர்!
தினவெடுத்த கைச்சோற்றை வீசிவிட்டுச் செருமுனைக்குத்
திரண்டுவந்தே தமிழ்நிலத்தை மீட்பீர்! மீட்பீர்!

-1972

## 33 வேடிக்கையன்று விடுதலை !

கூடிக்கை கொட்டி முழக்கி உரக்கக்
குரல் கொடுத்தே
தேடிக்கை நீட்டித் திசையெலாம் வேண்டித்
தெரிந்ததுணை
நாடிக்கை கோத்துநம் நாடுதா வென்றே
நயந்திரக்க
வேடிக்கை யன்று விடுதலை; வீரர்
விளைப்பதுவே!

*பாடிக்கை கூப்பிப் பராவிப் புகழ்ந்து*
*பணிந்திரக்க*
*வேடிக்கை யன்று விடுதலை! வீழாத*
*வீர மிக்க*
*நாடிக்குள் விம்மும் நரம்பிற்குள் பாய்ந்திடும்*
*நல்லரத்தம்*
*கோடிக்கு நூற்றுவர்க் கோடினும் நாடு*
*கொளப் பெறுமே!*

**-1972**

## 34 மதுரையில் விடுதலை ஊர்வலம் !

*சென்று கொண்டிருந்தது, விடுதலை மாப்படை!*
*செவ்வரி படர்ந்தது நெடுங்கூர் விழிகளில்;*
*தின்று கொண்டிருந்தனர் பகையினை, வாயினால்;*
*தினவுநீர் ஊறித் தெறித்தது பேச்சிலே!*
*என்றுகண் டிருக்குமப் பாண்டியன் மாநகர்!*
*எதிர்ந்தவர் யாவரும் யாவரும் வியந்தனர்!*
*நின்றுகொண் டிருந்தனர் பகைவர்கள் விதிர்ப்புற;*
*நெட்டுயிர்ப் பெய்தினர் நீடுற நடுங்கியே!*

*'தமிழ்நிலம் தமிழருக் கே',என முழங்கினர்!*
*'தாய்நிலம் விடுதலை பெறு'கெனப் பிளிறினர்!*
*'தமிழ்மொழி அரியணை யாள்'கென வீறினர்!*
*'தாழ்வுகள் அகல்'கெனத் தருக்கொடு கூறினர்!*
*இமிழ்கடல் வரைப்பினில் யாங்கணும் உறைந்திடும்*
*எந்தமிழ்த் தாயினர் யாவரும் இணை' கெனத்*
*துமிபட முழங்கியே தொன்னகர் மதுரையின்*
*தோரண வீதியில் ஊர்வலஞ் சென்றனர்!*

*சென்றுகொண் டிருந்தவல் லூர்திகள் நின்றன!*
*செருப்படை போல்வலஞ் சென்றவர்க் கண்டதும்*
*ஒன்றிரண் டொன்பது பத்தென நூறென*
*ஓரா யிரம்நடை பாதையர் ஒதுங்கியே*
*நின்றுகொண் டவர்சொலும் நெருப்புரை கேட்டனர்!*
*நெரிசல்கண் டோடிய பேர்பலர்! மற்றவர்*
*நின்றுகொண் டிருந்தவர் இருந்தவர் தாம்பிற*
*நினைவுகள் மறந்தவர் மறந்தவர் தாமரோ!*

காவலர் ஒருபுறம் கையற நடந்தனர்;
காளையர் நிரல்படக் கொடியோடு கடுகினர்!
மேவுறு கன்னியர் சிறுவர்கள் ஒருபுறம்
மெல்லிய செந்நிற மார்பணி பூண்டராய்
ஆவலின் கொள்கைகள் அழகுற முழக்கினர்!
அயில்விழித் தாயினர் அவர்வழித் தொடர்ந்தனர்!
கூவலோ பகைவரின் குலைகளை உலுக்கின!
கொள்கைகள் அவர்செவிக் குறும்பறை யறுத்தன!

குன்றுகண் டஞ்சிடுந் தோளினர் எம்மவர்!
கூற்றினை நூறிடுங் கொல்களி றன்னவர்!
'வென்றுகொண் டவர்தலை வெட்டிவா' என்றிடில்
வீணரைக் கட்டிவந் தவிழ்த்திடும் வேங்கையர்!
மென்றுகொண் டிருந்தவெம் படையினர் தோள்களில்
மேல்விழுந் தாடியே களித்தது வீரமே!
அன்றுகண் டாரியப் படைகடந் தவனினும்
அழல்தெறி மறவரைக் கண்டது மதுரையே!

-1973

## 35 அடிமை நினைவுக்கு அழல் மூட்டுக !

**அடிமை** நினைவை அனற்கா டாக்கிட
அழலேந்துக ஒருபுறம்!
**அறியாமைக்கே** தீச்சுடர் காட்டி
அனல்மூட்டுக மறுபுறம்!

**மடிமை** கொண்டான் தமிழன்; அவன்தன்
**மானம்** பற்றி எரிந்திட,
மண்டெரி மூட்டிச் சோம்பல் பொசுக்குக!
மருளைத் தீய்க்க ஒருபுறம்!

**மிடிமை** கண்டான் தமிழன்; அவனின்
மீளா வறுமையைக் கொளுத்துக!
மேட்டுக் குடியினர் போட்ட கணக்கினை
மீறும் நெருப்பில் உருட்டுக!

**குடிமை** பேண இளைஞர் எழுக!
கோதையர் எழுக எழுகவே!
குப்பைச் சருகாய்த் தீமைகள் அனைத்தும்
கொளுத்துக! **விடுதலை** மலர்கவே!

-1973

## 36 விடுதலை வேண்டும் !

விடுதலை வேண்டும்! அதுமுதல் வேலை!
வேறெந்த வேலையும் செய்யலாம் நாளை! (விடுதலை)

'கொடு'தலை என்றால், கொடுத்திடத் துடிக்கும்,
கொள்கை மறப்படை பகைஉயிர் குடிக்கும்!
'எடு'தலை என்றால், பகைதலை எடுக்கும்,
இலக்கம் கோடியென் றெண்ணிக்கை கொடுக்கும்!
(விடுதலை)

காடுமே டெல்லாம் பசிக்க ஊண்தேடிக்
கண்ணீரில் மிதக்கின்ற தமிழர்கள் கோடி!
வாடுமே அவருளம்! துவண்டிடும் நாடி!
வற்றாத வளஞ்சேர்க்க வா,தமிழ் பாடி!
(விடுதலை)

என்னென எண்ணினார், எந்தமிழ்த் திறத்தை?
எதிர்க்கின்ற காட்டவா, வழிவழி மறத்தை?
சொன்னாலும் சொல்லுவோம் குறள்சொல்லும் அறத்தை!
சூடேற விட்டாலோ காட்டுவோம் புறத்தை!
(விடுதலை)

புலிபெற்ற பிள்ளைக்குப் பூனையா எதிரி?
புறப்பட்டு விட்டாலோ பகையோடும் சிதறி!
வலிபெற்ற நெஞ்சங்கள் துடிக்கவா பதறி?
மானமே உயிராகும், மற்றெல்லாம் உதிரி! (விடுதலை)

பெற்றோரை உற்றோரை பேணுவோம் நாளை!
பிள்ளைகள் மனைவியைப் பார்ப்போம்அக் காலை!
கற்றவர் கல்லாதார்க் கிது,அழைப் போலை!
காளையர் கன்னியர் நிமிர்த்துவீர் தோளை!
(விடுதலை)

-1973

## 37 விடுதலை நாடுவாய் !

*உலகம் உயிர்த்தது; நிலங்கள் விழித்தன;
ஒவ்வோ ரினமும் எழுந்தது! - அதன்
உரிமை முழக்கம் வானம் அதிர்ந்திட
ஊமையன் காதிலும் விழுந்தது!
நிலமும் விளைவும் மலையும் காடும்
நீரும் பொதுவே என்றனர்! - அவர்
நேர்மைக் குரலுக் கொப்பா தவரை
நீட்டிய வாளால் தின்றனர்!
புலமும் தூர்ந்திட உளமும் மயங்கிடப்
புலராத் தூக்கம் தூங்கினாய்! - அட
போக்கற் றவனே, தமிழா, நீதான்
புன்மை இழிவுகள் தாங்கினாய்!
குலமும் மதமும் உன்னைக் குலைத்தன!
குடும்பந் தனக்கிடர் இழைத்தனை! - ஒரு
கொள்கையு மில்லை; நோக்கமும் இல்லை!
கோடரிக் காம்பாய் உழைத்தனை!*

*மனமும் கெட்டாய்; குணமும் கெட்டாய்;
மதியுங் கெட்டாய் வடிவிலே! - தன்
மானம் இழந்தாய்; உரிமை இழந்தாய்;
மண்ணும் இழந்தாய் முடிவிலே!
தினவும் தோளும் வீரமும் விறலும்
தேர்ந்தனை தமிழா அந்நாளில்! - பிறர்
தின்னும் இலைக்கே காவல் நிற்கத்
தெருவில் திரிவாய் இந்நாளில்!
இனமும் காவாய்! மொழியும் பேணாய்!
எச்சில் சோறுண் டுடுத்தனை! - உன்
இனமுன் னேற்றம் விழைவோர் தமையே
எவர்க்கோ காட்டிக் கொடுத்தனை!
நனவும் வருமோ? நாணமும் வருமோ?
நாளும் வருமோ அரசோச்ச? - இந்
நானிலம் எங்கும் தமிழர் புகழை
நான்கிரு திசையும் முரசோச்ச!*

விழுவாய் குழியுள் என்றே எண்ணினர்;
வீழ்த்தினர் சூழ்ச்சியுள் சிக்கினை, நீ! - அவர்
விரலை நீட்டிய திசையில் விரையுமுன்
வீழ்த்திய காலை நக்கினை,நீ!
கழுவாய் உனக்கே இதுதான் தமிழா,
கடமையைச் செய்ய நீவருவாய்! - உன்
கான்முளை வருவோர் தமக்கா கிலும்,உயிர்
கழலினும் உரிமையை நீதருவாய்!
புழுவாய் விலங்காய் அடிமைப் பட்டது
போதும்; விடுதலை நாடிடுவாய்! - ஒரு
புல்லியன் எவனும் உனைநெருக் காமல்
பூட்கை மறத்தைப் பாடிடுவாய்!
எழுவாய் தமிழா! இன்றே! இன்னே!
இனமும் காப்பாய் மொழிகாப்பாய்! - நம்
இனத்தை நாமே காட்டிக் கொடுக்கும்
இழிவை மறப்பாய்! பழி மீட்பாய்!

-1973

## 38 அதர்ந்தெழுவாய் !

மொழிக்கலப்பும் இனஇழிவும் பண்பாட்டு வீழ்வும்
முழுஅடிமை அரசியலும் பொருளியலும் உன்னை
விழிக்கவிலா உறக்கத்தில் ஆழ்த்தியடி வீழ்த்தி,
விலங்குகளாய்ச் சமைத்தனகாண்!
உணர்கிலையே! தமிழா!
பழிக்கொருவ னாகினையே! விழிக்கிலையே இன்னும்!
பகையுணர்ந்தே நின்தடந்தோள்
நிமிர்ந்தெழுவா யானால்,
அழிக்கலுறும் பெரும்பகையும் தூள்தூள்ஆ காதோ!
அதர்ந்தெழுவாய், இமைதிறந்தே! அடலேறே! களிறே!

-1975

## 39 வீர நடை நடப்பீர் ! வீர அணி வகுப்பீர் !

நடை நடப்பீர், வீர நடை நடப்பீர்!
நாடு கேட்பீர், தமிழ்நாடு கேட்பீர்!
படை திரட்டிப் பரணி பாடிப்
பாய்ந்து வீரம் தோய வந்து
நடை நடப்பீர்!வீரநடை நடப்பீர்!
நாடு கேட்பீர் தமிழ்நாடு கேட்பீர்!

அணிவகுப்பீர், வீரஅணிவ குப்பீர்!
ஆட்சி கேட்பீர், தமிழ்ஆட்சி கேட்பீர்!
துணிவு தோயும் தோழன் மாரே,
தோழி மாரே, விரைந்து வந்து,
அணி வகுப்பீர், வீரஅணி வகுப்பீர்!
ஆட்சி கேட்பீர், தமிழ்ஆட்சி கேட்பீர்!

-1975

## 40 பூட்டறுக்கப் புறப்படுவீர் !

ஏட்டகத்துப் பலவாறாய்த் தமிழுணர்வை
ஆள்வோருக் கெழுதிக் காட்டி,
நாட்டகத்துத் தமிழர்நலம் நசுக்குகின்ற
போக்குக்கு நயன்மை கேட்டோம்!
வேட்டெஃகத்தை எடுத்தால்தான் விடுதலையே
தமிழகத்தில் விளையும் என்றால்,
பூட்டறுக்கப் புறப்படுவீர் மறவர்களே;
உரிமைநலம் புதுக்கு தற்கே!

வாட்டுகின்ற வறுமைக்கும் எந்தமிழர்
அடிமையிலே வாடுதற்கும்,
நீட்டுகின்ற வெடிக்குழல்தான் ஒருமுடிவைத்
தமிழகத்தில் நிகழ்த்தும் என்றால்,
காட்டுங்கள் தமிழ்மறத்தை தொல்லடிமைக்
கட்டறுக்கும் காளை யோரே,
தீட்டுகின்ற பட்டயத்தில் நும்பெயரை
முதல் பெயராய்த் தீட்டு தற்கே!

-1975

## 41

## அறப்பழி குலுங்கும் ஆளுமை
## இறப்பவழிந் துய்க இந்திய நாடே !

*ஆரியப் பதடியர் அருந்தமிழ் செகுக்கும்
பூரியக் குறும்பின் புல்லியர் ஆட்சி
என்றினித் தீருமோ இரிந்துகால் முறிமோ?
மன்றிடைத் தமிழினம் மலர்ந்து மணக்குமோ?
காமரா செனுமோர் கடமைத் தமிழ்மகன்
ஏமுறச் சூழாது இந்திரா வென்னும்
மெய்ம்மை வெளிறி மிக்குரை செருக்கும்
கைம்மைப் பார்ப்பினி கையகப் படுத்திய
இந்திய முழுநிலம் ஏற்றமுற் றுய்யுமோ?
முந்தைய உரிமையும் முளைத்துச் செழிக்குமோ?
அறமுறை மன்றின் குரல்முறை நெரித்து
மறமுறை வலித்து மக்க ளாட்சியின்
முற்றா ளுமைநெறி முழுவதும் பற்றிக்
கற்றார் நிறைமனம் கசிந்துலை வுற்றிட
வல்லதி காரம் வழிவழிக் கொளுவுமோர்
சொல்லுதிர்த் திசைக்கும் சூழ்ச்சியோ ளாகி
நிகரமை எனும்பெயர் சாற்றி நெறிபிறழ்ந்து
தகவுகுத் தரும்பெறல் தலைவருந் தொண்டரும்
வெஞ்சிறை யொடுக்கி விளம்பரந் தருக்கி
அஞ்சுறை மக்கள் அறியாமை நிலத்துள்
திரைவா னொலியொடு தாட்கொழு வுழுது
புரையும் பொய்யும் புனைவதும் வித்திக்
கள்ளத்துக் கொண்ட களவூ தியத்தின்
வெள்ளம் பாய்ச்சி விரகுகள் விளைக்கும்
அறப்பழி குலுங்கும் ஆளுமை
இறப்பவழிந் துய்க இந்திய நாடே!*

**-1976**

## 42 அனைத்து முன்னேற்றங்களுக்கும் ஒரே வழி தமிழ்நிலம் தன்னுரிமை பெறுதலே !

அரசியலால் முன்னேற்றம் காண்பதற்கென் றிங்கே
அளவிறந்த கட்சிகளும் இயக்கங்களும் உண்டு.
'சரிசமநன் னிலைவேண்டும் பொருளியலில்; பின்னர்ச்
சரியாய்ப்போம் தமிழினமுன் னேற்ற'மென்றே ஓங்கி
முரசறைவர் பொதுவுடைமைக் கொள்கையினர்! மற்றும்
முழுமூடக் கொள்கைகளும் பலமதமும் சாதி
இருசுமொடிந் திடுகவென்பார் பகுத்தறிவார் என்போர்!
எந்தமிழ்முன் னேறட்டும் என்றுரைப்பார் சில்லோர்!

'இருக்கட்டும் இந்துமதம், புராணவே தங்கள்,
இதிகாச உபநிடதங்கள்; இவைதம்மா லன்றோ
உருக்கெட்டும் உளங்கெட்டும் அறிவுகெட்டும் மக்கள்
உணர்வுகெடா திருக்கின்றார் அதுபோதும்' என்றே
செருக்கெட்டும் மூளையினை அகல்வாயாய்க் கொண்டே
சிருங்கேரி காஞ்சிமட 'அதிபதிகள்' எல்லாம்
திருக்கொட்டும் உண்டியலைக் கணக்கிட்ட வாறு
திசையெல்லாம் எட்டுகின்ற புளுகுரைத்து வாழ்வார்!

வடநாட்டுத் தலைவரெலாம் 'இந்திமொழி கற்றால்
வளம்பெருகும் பாரதத்தில்' என்றுரைப்பார் நாளும்!
இடநோட்டம் ஆள்நோட்டம் பகலிரவு நோட்டம்
எதிர்ந்துவரும் பணநோட்டம் அனைத்தையுமே பார்த்துக்
கடனாற்றும் நந்தமிழ அமைச்சரெல்லாம் இங்கே
காவலர்கள் துணையோடு விழாவேடிக் கைகள்
உடனாற்றும் உரைவிளக்கம் விளம்பரங்கள் என்றே
ஊருக்கூர் நடந்தாலே முன்னேற்றம் என்பார்!

இந்தியினைப் பரப்புதற்குப் பலமாநா டங்கே!
இந்தியினை எதிர்த்திங்கே பற்பலமா நாடு!
முந்தியபர சார்' பிசெய்து ஊழல்களை ஆய
முயற்சிபல; பொருள் கோடி ; முடிவுமட்டும் முட்டை!

சந்துக்குச் சந்துகொள்ளை; சாராயம்; புளிங்கள்!
சாமாரிக் கையூட்டு! தலைமறைவாய் ஊழல்!
முந்திக்குத் தாழ்வில்லை; ஆனாலும் கொஞ்சம்
மூக்குத்தான் உடைந்துவிட்ட தென்றிடுவார் ஆள்வோர்!

ஐயய்யோ, தமிழகமே! அருந்தமிழத் தாயே!
அளப்பரிய திட்டங்கள்; பேச்சுவிளம் பரங்கள்!
பொய்யான விளக்கங்கள் புளுகுரைகள்! ஆனால்
புழக்கடையில் சாய்க்கடையில் தெருக்கடையில் வாழும்
மெய்யான உருவங்கள் அப்படியப் படியே!
மிகையில்லை, உண்மையிது! தமிழர்களே இன்னும்
செய்யாத சமையலுக்குக் காத்திருக்க வேண்டாம்!
சிந்திப்பீர் ஒருவழியாய்த் தமிழ்நிலத்தை மீட்பீர்!

-1979

## 43 இழந்த உரிமைகள் உழந்து பெறுக !

வையம் வாழ்த்தும்
வள்ளுவர் பெயரால்
பொய்யாம் குலமதப்
புன்மைகள் தவிர்த்துக்
கட்சிகள் என்னும்
களைகள் அகற்றி,
நச்சுக் கொள்கையின்
நலிவுகள் நீக்கி,
உலகத் தமிழினம்
ஒன்றுபட் டியங்குக!
இலகு செந்தமிழ்
எங்கும் பரப்புக!
பாழ்மை விலக்குக!
பழைமை புதுக்குக!
ஏழ்மை விரட்டுக!
இனிமை வித்துக!
இழந்த உரிமைகள் இனியே
உழந்து பெறுக
உலகத் தமிழரே!

-1979

## 44 ஏறுநடை போட்டு நட !

*ஏறுநடை போட்டுநட!*
*எக்காளம் ஊதிநட!*
*வீறு தமிழ்த் தாயின் புகழ் எண்ணி, - அவள்*
*விடுதலைக்கே சூளுரைகள் பண்ணி! (ஏறுநடை)*

*கூறுபட்டு நின்றவரைக் கூட்டிநட! ஊட்டிநட!*
*கொள்கையினைப் போற்றிநட ஊக்கி! - வெற்றிக்*
*கொடியினைநீ தோள்களிலே தூக்கி! (ஏறுநடை)*

*மாறுபட்ட ஆட்சிக்கு நீ மண்டியிட்டுச் சாய்வதோ?*
*மற்றவர்கள் வாழ்கையில் நீ உண்டியின்றிக் காய்வதோ?*
*வேறுபட்ட மக்களின்முன் கூறுபட்டுப் போயினை;*
*வெற்றிபெற நீ வணங்கு பண்டைத் தமிழ்த்தாயினை!*
*(ஏறுநடை)*

*உன்றன்மொழி நாகரிகம் பண்பாடெல்லாம் காற்றிலே*
*ஊமைமொழி, கோணல்நடை ஊன்றிவிட்டாய் நாட்டிலே*
*வென்றவன்நீ; தோற்றுவிட்டாய் ஆரியர்பொய்ப் பாட்டிலே!*
*வெற்றி கொள்ள நீஎழடா செந்தமிழ்மெய்ப் பாட்டிலே*
*(ஏறுநடை)*

*வந்தவர்க்கு வால்பிடித்தாய்; கால்பிடித்தாய் கையிலே!*
*வாய்வலிக்க வாழ்த்திவிட்டாய்; வாழ்ந்துவிட்டார் பொய்யிலே;*
*சொந்தமொழி சொந்தஇனம் சொந்தநிலம் விட்டனை;*
*சோற்றுக்குநீ மண்டியிட்டு மானம்,உயிர் கெட்டனை!*
*(ஏறுநடை)*

*உலகமெல்லாம் உன்தமிழர் ஓடுகின்றார் வாழவே!*
*உன்நிலத்தை வேறுமக்கள் ஆளுகின்றார் சூழவே!*
*இலகுதமிழ்த் தாயையெண்ணி ஏற்றம்மிகக் கொள்ளடா!*
*இளைப்பதில்லை என்றவர்க்கு வாளில்விடை சொல்லடா!*
*(ஏறுநடை)*

பண்டைவர லாற்றையறி! உன்உரிமைத் தீயினைப்
பற்றவைத்தே வீசிடுவாய் நல்லடிமை நாயினை!
கண்டுநிகர் தாய்மொழியால் உன்னினத்தைப் பேணுவாய்!
காலம்வரும்; வெற்றிவரும்; வாழ்க்கைநலம் காணுவாய்!
(ஏறுநடை)

ஆரியர்தம் கொட்டமெலாம் அடங்கிவிடும் நாளிலே
ஆட்சிதமிழ்த் தாயின்கையில் வந்துவிடும் வாளிலே
நேரியஉன் கொள்கையினை நீமுழங்கிப் பாடடா!
நேற்றிழந்த உரிமைநலம் நாளைவரும்; கூடடா!
(ஏறுநடை)

-1979

## 45 வெற்றிக்கொடி நாட்டு !

அருமைத் திராவிடத் தம்பி! - பல
அரசியல் கட்சிகளை நம்பி, - நீ
அலைந்த அலை போதும்;
நடந்த நடை போதும்;
அமைவாய் ஒருபுறம் குந்தி, - இனி
அடுத்த முயற்சியினைச் சிந்தி!

அன்புடைத் தமிழின மறவ! - உனை
ஆண்ட தலைவர்களின் உறவால்
அடைந்த பழி போதும்;
மிடைந்த துயர் போதும்;
ஆழ நினைந்து வினை தொடங்கு, - நீ
அற்றைத் தமிழ்மறத்தின் மடங்கு!

விடுதலை விரும்பிடும் புலியே, - உனை
விடுத்தனர் தலைவர்கள் தனியே!
வேகம் தளராமல்
வெம்மை குளிராமல்
வீரநடையில் படைகூட்டு! - தமிழ்
வெற்றிக்கொடியை இங்கு நாட்டு!

-1979

## 46 கதிரவ விடுதலை ஒளிவான் படருமோ ?

உலகம் முழுதும்
தமிழர் முழக்கம்!
உறக்கம் தவிர்ந்தது!
உரிமை ஒலித்தது!

கலகம் அடங்கிக்
காரிருள் கலையுமோ?
கதிரவ விடுதலை
ஒளிவான் படருமோ?

-1983

## 47 பொருளியல் பொதுமைக்கும் புரட்சிக்கும் வித்து !

மொழி,இன விடுதலை வேண்டும்! - பின்
முற்றுமாய்த் தமிழ்நாட்டு விடுதலை வேண்டும்!
வழியது வல்லாமல் தமிழர், - வேறு
வகையினில் முன்னேறும் வாய்ப்பொன்றும் இல்லை! (மொழி)

அழியாமல் இனத்தினைக் காக்கும், - மொழி
யன்றோநம் தமிழரை ஓர்அணி சேர்க்கும்!
இழியாமல் மேல்நின்று தூக்கும், - தமிழ்
ஏற்றமே மதம்,சாதி வேரினைத் தாக்கும்! (மொழி)

முதியவர் இளையவர் வருக! - இன
முனைப்பிற்கு அவரவர் உழைப்பினைத் தருக!
புதுமைக்கும் விளைவுக்கும் சொத்து! - தமிழ்,
பொருளியல் பொதுமைக்கும் புரட்சிக்கும் வித்து! (மொழி)

-1984

## 48 இந்தியப் புலத்தினில் புரட்சி மேகங்கள் !

புரட்சி மேகங்கள் இந்தியப் புலத்தினில்
திரட்சி யுற்றுத் தென்படு கின்றன!
மருட்சி யுற்ற அரசியல் மாண்புகள்
மிரட்சியால் மக்களை மேய்க்கப்பார்க் கின்றனர்!
புதுமை மின்னின! கருத்துகள் முழங்கின!
பொதுமை காணும் போக்குகள் மலிந்தன!
கிளர்ச்சி! கிளர்ச்சி! எங்கணும் கிளர்ச்சி!
தளர்ச்சியுற் றிருந்தவர் தணலாய்க் கிளம்பினர்!
வளர்ச்சி வேண்டி வகைசெயக் கோரினர்!
குளிர்ச்சி விட்டிடச் சூடு கிளர்ந்தது!
இலகும் இழிவுகள் இழப்புகள் நீங்கிட
உலக மாந்தர் கலகம் விளைத்தனர்!

பலமொழி! பலஇனம்! பலபண் பாடுகள்!
குலங்கள் கோடி! மதங்கள் பற்பல!
எத்தனை நாளைக்கு இணைந்து கிடந்திடும்?
செத்துக் கிடந்தவர் சீறி எழுந்தனர்!
ஒவ்வொரு தேசிய இனமும் உயிர்த்தது!
எவ்வொரு விளைவும் 'எல்லார்க்கும்' என்றது!

ஆண்ட இனத்தவர் அரண்டனர்! அழன்றனர்!
பூண்ட அதிகாரம் புதுக்கினர்! அடக்கினர்!
அடிகள்! உதைகள்! அழல்வாய்க் குண்டுகள்!
வெடிகள்! பிணங்கள்! வேடிக்கைத் தீர்ப்புகள்!

கொடிகள் விரிந்தன! கூட்டங்கள் நிறைந்தன!
இடிமுழக் கங்கள் இன்னும்கேட் கின்றன!
மேகப் புயல்கள் விண்விட் டிறங்கின!
வேகச் சீற்றம்! விடியலுக் கேங்கின!
புரட்சி மாமழை பொழிந்திடப் போகும்!
வறட்சி நீங்கிடும்! வரலாறு மாறுமே!

-1984

## 49 புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்ட திங்கே !

எழுச்சியுற்றோர் சிலர்கூடிப் பலவாறாய் ஆய்ந்தே
ஏற்றதொரு கொள்கையினை வரையறுத்து விட்டோம்!
வீழ்ச்சியுற்ற தமிழகத்தை மீட்டெடுக்க வேண்டும்!
விடுதலைக்கே படைநடத்தி விடிவுபெற வேண்டும்!
புழுச்சிதைவாய் வாழ்ந்துவரும் பாட்டாளி மக்கள்,
புலம்பெயரா துழுதுழுது சாகின்ற உழவர்,
குழுச்சேர்த்துப் போராடி வெற்றிபெற எண்ணிக்
கூட்டணியொன் றமைத்துவிட்டோம்! இளைஞர்களே வருக!

அயல்நாட்டு வல்லரசின் மூலமுத லீடும்
அகநாட்டில் சுரண்டுகின்ற தரகுமுத லியரும்
வயல்நாட்டின் உழவர்களை நிலக்கிழமை யாரும்
வயிற்றடித்துத் தாம்கொழுக்கும் தன்மையெலாம் மாற்றும்
புயல்வேகப் புரட்சியொன்று புறப்பட்ட திங்கே,
பொதுவுடைமைத் தமிழகத்தை உருவாக்கல் வேண்டி!
மயலடிமைத் தனம்வீழ்க! கோழைத்தனம் வீழ்க!
மனவுறுதி கொண்டவரே! மறவர்களே! வருக!

பதவிவளம் அடிமைநலம் துய்க்கின்ற செல்வர்,
பாட்டாளி மக்களினைச் சுரண்டுகின்ற கயவர்,
உதவிசெயும் நோக்கமென ஊர்க்கொள்ளை யடிப்போர்,
உன்மத்தர், சட்டங்களை உடைத்துய்யும் திருடர்,
கதவிடுக்கில் ஒளிந்திருக்கும் அதிகாரக் கேடர்,
காமத்தைக் காசாக்கும் கலையுலகக் கீழோர்,
மதவிளக்கம் பலகூறி மக்களையிங் கேய்ப்போர்
மற்றிவரை அழித்தொழிப்போம்! வீரர்களே வருக!

-1984

# ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிது !

*வெற்றுமை எழுத்தில் வீரார்ப்புப் பேச்சில்
கற்ற,கை வரிசை காட்டியே மக்களை
எற்றிப் பிழைக்கவும் ஏய்த்துப் பிழைக்கவும்
ஒற்றுமை என்றும் ஒருமைப்பா டென்றும்
சுற்றிச் சுற்றிப் பேசுகி றீர்கள்!
வெற்று வயிறுகள்! வெறுமை உடம்புகள்!
முற்றமும் இன்றிப் பாதைகள் ஓரம்,
குற்றுயி ராயும் குலைஉயி ராயும்
தொற்று நோயோடு துன்பப் படுவதைச்
சற்றே நின்று, சாய்க்கடைப் பகுதியில்
உற்றுப் பார்த்தே உணர்ந் திருப்பீர்களா?*

*ஒற்றுமை என்ன? ஒருமைப் பாடென்ன?
உதவாக் கரைகளே! ஓ! உதவாக் கரைகளே!
ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிதடா,
உதவாக் கரைகளே! ஓ! உதவாக் கரைகளே!*

*கோயிலைக் கட்டிக் குழவியை வைத்து,
வாயிலில் கோபுரம் வானளவு உயர்த்தி,
நோயினில் விழுந்தவர் நொடிந்திடும் ஏழைகள்
ஆயிரம் நாளும் வணங்குவீர் என்றே
வாயுரம் பேசியே வஞ்சிக்கும் நீங்கள்,
காய்களும் கனிகளும் கறிகளும் உண்டு,
நோய்களும் இன்றி நொடிகளும் இன்றிச்
சாய்ந்த மெத்தைச் சொகுசுவண் டிகளில்
ஓயாமல் நாளும் ஊர்வலம் வந்தே
காயாமல் காயும் ஏழைகள் காதிலே
மாய்மால ஒற்றுமை ஒருமைப்பா டென்றே
வாயால் கத்தியே வாழுகின் றீர்களே!*

*ஒற்றுமை என்ன? ஒருமைப்பா டென்ன?
உலுத்தர் இனங்களே! ஓ! உலுத்தர் இனங்களே!
ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிதடா,
உலுத்தர் இனங்களே! ஓ! உலுத்தர் இனங்களே!*

**-1984**

## 51 மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே !

*பொய்யர்கள் புளுகர்கள் பொல்லாக் கயவர்கள்*
*பொழுதெலாம் தந்நலம் கருதும் பேயர்கள்*
*மெய்யர்கள் போலவே உலாவரு கின்றனர்;*
*மேலுக் குழைப்பதாய் உரையளக் கின்றனர்!*
*வெய்ய உழைப்பினில் மேனித் தசைகளை*
*விளர்ந்துள நாடி நரம்புமண் டிலங்களை*
*நெய்யாய் உருக்கி உழைக்கும் மக்களோ*
*நித்தமும் செத்துப் புதைகின்றார் நாட்டிலே!*

*பிழைக்கவும் வழியிலை; பேசவும் பொழுதிலை!*
*பின்னும் இருப்பதால் யார்க்கும் பயனிலை!*
*உழைக்கும் மக்களும் உழவரும் தொழிலரும்*
*ஒன்றிணைந் தெழுந்திடில் உண்மை சாகுமோ?*
*அழைக்கும் விடுதலை ஆர்ப்பரிப் பெழுந்தது!*
*அனைவரும் ஒன்றெனும் நாளும் கிளர்ந்தது!*
*மழைக்கும் வெயிற்கும் மலைத்தது போதும்!*
*மக்களின் வெள்ளம் கடலெனத் திரள்கவே!*

*-1984*

## 52 மீட்போம் தமிழ்நாடு !

அன்புத்தமிழ்த் தாய்மொழியை
அழிவடவர் சீர்குலைக்க
முன்பிருந்தே இந்திபுக
விட்டார்! - உளத்
தென்புடனே நாமெழுந்தால்
கெட்டார்!

பண்டைத்தமிழ்த் தாயினத்தைப்
பார்ப்பும் சேர்ப்பும் அடிப்படுத்தும்!
அண்டை அயல் நாடுகள் பார்,
தம்பி! - வெறுங்
கொண்டைகளா நாம்?எழுக
நம்பி!
நல்லதமிழ்த் தாய்நிலத்தை
நாயும்பேயும் ஆட்சிசெய்யும்!
வெல்லுதற்கே நாம்முனைதல்
வேண்டும்! - வேறு
சொல்லுதற்கே யாதுளது,
மீண்டும்?

காலம்,இடம் தேர்ந்துவிட்டோம்;
களத்திறங்க எண்ணிவிட்டோம்!
கோலங்கொள்வாய் வீறுறுதி
யோடு! - வெற்றி
ஓலமிடு! மீட்போம்,தமிழ்
நாடு!

-1985

## 53 அதுதான் என் ஆசை!

முன்னைப் போலத் தமிழ இனம்
இன்னல் துயரம் யாவும் நீங்கித்
தன்னைத் தானே ஆள வேண்டும்
அதுதான் என்ஆசை!
மின்னைப் போலக் கதிரைப் போல
அன்னைத் தமிழ்த் தாய்மொழி,இம்
மண்ணை ஆட்சி செய்ய வேண்டும்!
இதுதான் உள்ஓசை!

உலகம் முழுதும் அலைந்து சாகும்
இலக்கை இழந்த தமிழர், தமிழ்
நிலத்தில் வந்து வாழ வேண்டும்!
அதுதான் என் நோக்கம்!
புலத்தை மீட்டுப் புன்மை தவிர்த்துக்
குலத்தில் தமிழர் ஒன்றே என்னும்
இலக்கை மீண்டும் அடைய வேண்டும்!
இதுதான் என்ஆக்கம்!

ஊரும் பேரும் உலகம் போற்ற
தாரும் நிலமும் தமிழர் தாங்க
ஏரும் நீரும் செழிக்க வேண்டும்
அதுதான் என்வேண்டல்!
தூரும் தும்பும் கசடும் நீக்கி
வீறும் அன்பும் மனத்தில் ஊறக்
கூறும் நலன்கள் குவித்தல் வேண்டும்
இதுதான் என்தூண்டல்!

-1985

## 54 உரிமை ஒடுக்கமே விடுதலை முழக்கம்!

*உரிமை ஒடுக்கமே விடுதலை முழக்கமாய்*
*உருவாகி வருவது திண்ணம்! - இதற்கு*
*உரமிட்டு வளர்ப்பதே எண்ணம்! - இதைச்*
*சரிவர விளங்கிக் கொள்ளாத மக்களைச்*
*சார்பாக ஆக்குதல் வேண்டும்! - அதுதான்*
*சரிநிகர் உணர்வினைத் தூண்டும்!*

*வழிவழி யாய்வரும் மக்களை ஒடுக்கி*
*வாழ்வியல் உரிமையை அடக்கி - அவரை*
*வறுமையில் அடிமையில் முடக்கி - மதக்*
*குழிகளில் வீழ்த்திச் சாதியில் தாழ்த்திக்*
*கொன்று குவித்திடும் அரசு! - உடனே*
*கொட்டடா விடுதலை முரசு!*

*உலகெலாம் உரிமை முழக்கம் எழுந்தது!*
*உணர்ந்திடு! விழி! எழு! தமிழா! - உன்றன்*
*உயிரென்ன நீரினில் குமிழா? - உன்*
*ஒண்டமிழ்த் தாய்மொழி, இனம், நிலம் யாவும்*
*உருக்குலைந் தழிவதோ, இந்நாள்? - நீதான்*
*உலகைஆண் டவனடா முன்னாள்!*

*சிறுசிறு நலன்கள் சில்லறை உரிமைகள்*
*சிதைக்குமே உன்பெரும் நோக்கம்! - அவற்றால்*
*சிறக்குமோ விடுதலை ஆக்கம்? - இனம்*
*உறுபெரும் பயன்பெற உரிமையை மீட்பாய்!*
*ஒன்றுதான் உனதுயிர்க் கொள்கை! - என்றும்*
*உறுதிதான் தமிழ்நிலம் வெல்கை!*

-1985

## 55 இறுதி நேரம் உனக்கிது !

இறுதி நேரம் உனக்கிது, தமிழனே!
எண்ணுவாய் எண்ணுவாய் எண்ணியே எழுவாய்!
உறுதிசெய்! ஒன்று,நீ ஒழிந்திடல் வேண்டும்;
அல்லதுன் பகையை, நீ ஒழித்திடல் வேண்டும்!
சிறுதயங் கலும்,உன் நிலையினைச் சிதைக்கும்!
சீர்த்திடும் பகைஇனும் வலுப்பெற வைக்கும்!
மறுதிசை திரும்பேல்! மார்புக்கு நேரே
மாற்றான் துமுக்கியும் நீண்டது, பாரடா!

கட்சியைக் களைந்தெறி! சாதியைக் கழற்று!
கணநே ரத்திலுன் மதத்தினைத் துப்பு!
முட்சிதை வுற்றே முனைவருத் துதல்போல்
முப்பது நூறாண் டொற்றுமை யின்றி
உட்சிதை வுற்றஉன் இனத்தினை ஒன்றுசேர்!
உருட்டு விழிகளை! உன்பகை தூள்தூள்!
வெட்சிப் பூவணி! வேகப் படு,நீ!
வெற்றி முரசினை அதிர முழக்கியே!

நரிமையை நாய்மையை நையப் புடைத்திடு!
நமக்குள் வேர்விடும் வஞ்சரை நசுக்கு!
அரிமாப் போத்தே! அடர்வெம் புலியே!
ஆரடா உனையெதிர்த் தாளுமை செய்பவர்?
உரிமையை மீறிய ஒருவளம் இல்லை!
உள்ளம் நாறிடும் கீழ்மைக்குத் தீவை!
எரிமேல் இருந்துன் சூளுரை முழக்கு!
எங்கள் தமிழ்நிலம் எங்களுக் கென்றே!

-1986

## 56 தமிழகத்தை வடநாட்டார் ஆள ஒப்பமாட்டோம் !

இந்தித்திணிப் பிலையெனினும்,
யாவருமே சமமெனினும், இந்தி யாவில்
சொந்தமொழி சொந்தஇனம்
சொந்தப்பண் பாடு,கலை தம்மைப் பேணி
முந்தைவர லாற்றுநிலை
மொய்ம்பெல்லாம் வளர்க்கத்தடை இலையென் றாலும்,
செந்தமிழ்த்தாய்த் திருநாட்டைத்
தனிநாடாய்ப் பிரிப்பதைக்கை விடமாட் டோமே!

பார்ப்பனியம் இனநஞ்சைப்
பரப்புவதைக் கைவிடினும், வணிகக் கும்பல்
ஊர்ச்சுரண்டல் இல்லாமல்
உலகநலம் கருதிடினும் தமிழ கத்தைத்
தார்ப்பாய்ச்சுக் காரர்களாம்
வடநாட்டார் தாம்ஆள ஒப்ப மாட்டோம்!
ஆர்ப்பரிப்போம் செந்தமிழ்த்தாய்த்
திருநாட்டின் ஆட்சிதனி ஆட்சி என்றே!

உரிமையெனும் ஆட்சிநலம்,
உணவு(உ)டுக்கை உறையுள்நலம் யாவற் றுள்ளும்
பெரியநலம்; பெருமைநலம்;
பிறவியிலே உயர்ந்தநலம், என்றே எண்ணிச்
சரிநிகர்மை, பொதுமையுணர்
வென்பவற்றை நிலைநாட்டும் தமிழ்த்தாய் நாட்டுப்
பிரிவினையே வேண்டுமென்றும்
பிறவெல்லாம் வீனென்றும் பேசு வோமே!

-1986

## 57 அடடா ! ஓ ! அடுத்தது, நம் ஆட்சி இங்கே !

இன்றில்லை, நேற்றில்லை,
ஈராயி ரத்தாண்டாய்
வடவரை,நாம்
எதிர்க்கின்றோம், எதிர்க்கின்றோமே!

ஒன்றில்லை, இரண்டில்லை;
ஒவ்வொன்றாய்ப் படிப்படியாய்
உரிமையை,நாம்
உதிர்க்கின்றோம், உதிர்க்கின்றோமே!

நன்றில்லை, தீதுமில்லை
எனவேநாம் இருப்பதுவே
நலமென்று
நாயினமாய் நலிகின்றோமே!

வென்றில்லை, தோற்றுமில்லை;
வீணுக்கு வீரரென்று
வாய்வீரம்
விளைக்கின்றோம் விளைக்கின்றோமே!

எதிரிகளைவிட, நமக்குள்
இரண்டகர்கள் மிகஅதிகம்!
எனவே,நம்
எழுச்சியிலே தொய்வுண் டிங்கே!

உதிரிகளை, வஞ்சர்களை
எதிரிக்குக் குரல்கொடுத்துத்
துணைபோகும்
உலுத்தரை,நாம் ஒழித்தல் வேண்டும்!

சதிராடும் களத்தினிலே
போரெழுச்சி தோன்றாது!
கலை,காமக்
கயவரையும் சாய்த்தல் வேண்டும்!

அதிராமல் குரல் கொடுப்போம்;
அடங்காமல் ஆர்த்தெழுவோம்
அடடா, ஓ!
அடுத்தது, நம்ஆட்சி - இங்கே!

## 58 தமிழ் நிலம் மீட்போம் !

அடிமை விலங்கொ டித்து,
மடிமை, மடம்வி லக்கிக்
குடிமை நலம்வி ளைக்க வருவீர்; செயல் தருவீர்! - இன
விடிவை நினைத்து டம்பில்
குடிவைத் திருக்கும் உயிர்
முடிவைப் பெறுதற் குள்,ஓர் கை பார்ப்போம்;
நிலம் மீட்போம்!

-1986

## 59 உரிமை பெற விரும்பாத உளமென்ன உளமோ ?

அனைவருமே திரண்டெழுந்தால்
அரசாட்சி என்செய்யும்?
முனைவோர்க்குக் கடலாழம்
முழங்காலென் றறியோமோ?

பழகுதமிழ் இந்தியினால்
பாழடையக் கண்டிருந்தும்,
உழுவோரும் உழைப்போரும்
உயிர்வாழா நிலையிருந்தும்,

மதமென்றும் சாதியென்றும்
மடம்பரவப் பார்த்திருந்தும்
முதலினமாம் தமிழினமோ
முழுஅடிமைப் பட்டிருந்தும்,

உரிமைபெற விரும்பாத
உளமென்ன உளமோ?
உடனெழுந்து பாயாத
உரமென்ன உரமோ?

-1987

## 60 உரிமைக் கோரிக்கையின் குரல்வளைகளை நெரிக்காதீர் !

வன்முறை என்றே உரிமைக்கோ ரிக்கையின்
குரல்வளை களைநெரிக் காதீர்!
மென்முறை என்றே ஏமாற்றுக் காரரின்
எத்துக்குத் துணைபோ காதீர்!

ஆட்சிக்கு வந்த அரக்கரே! உங்கள்
ஆவணம் கிழிபடும் ஒருநாள்!
மாட்சிமைக் குரிய மாண்புக ளே,உம்
சட்டங்கள் தீப்படும் ஒருநாள்!

மக்களை ஒடுக்கிடும் மமதையின் போக்கு
மண்ணிலே புதைபடும் ஒருநாள்!
பொக்குகள் போலவே சுட்டுப் பொசுக்கிடும்
புன்செயல் மிதிபடும் ஒருநாள்!

அதிகாரக் கொடுமையர் ஆட்சியை அகற்றிட
ஆண்களும் பெண்களும் திரள்வீர்!
மதியாத போக்கும் மக்களின் துயரும்
மாய்ந்திடும் மாய்ந்திடும் உணர்வீர்!

-1987

# முனைப்புற்ற தொண்டர்களே முனைதல் வேண்டும் !

நல்லதொரு மாட்டுக்கொரு சூடே என்பார் - இந்
நாயினத்துத் தமிழர்பல சூடு பெற்றும்,
வல்லெருமைத் தோலர்களாய் இருப்ப தாலே - ஒரு
வளர்ச்சியதும் காணாமல் வீழ்வே கண்டார்!
வெல்லுதற்கும் தோற்பதற்கும் பேச்சே யில்லை! - நல்ல
வீறுவர வேண்டாமோ? துளியும் காணோம்!
கொல்லுதற்கே ஆட்பட்டார்; அடிமைப் பட்டார்! - தமிழ்க்
கொடிபறக்க வேண்டுமெனில் விழிப்பு வேண்டும்!

விழிப்புற்றார் எல்லாரும் தலைவர் ஆனார்! - மக்கள்
விழிப்படைய உதவாமல் அவரை ஏய்த்தே
செழிப்புற்ற வாழ்க்கையினைத் தேடிக் கொண்டார்! - தம்
சிந்தனையை முயற்சியினைத் தமக்கே செய்தார்!
வழிப்பற்றும் தொண்டர்களோ பிளவு பட்டார்! - நல்ல
வாய்ப்புகளைத் தேடுவதே பொதுத்தொண் டென்றார்!
மொழிப்பற்றும் இனப்பற்றும் நாட்டுப் பற்றும் - கொண்ட
முனைப்புற்ற தொண்டர்களே முனைதல் வேண்டும்!

-1987

## 62

## தமிழ் நாட்டைப் பெறாமல் தமிழர் வாழ்வில்லையே !

*இந்தியத் தேசியம் என்பது பொய்மை!*
*இந்திய ஒருமையென் றெண்ணுதல் அடிமை!*
*இந்தி(ய) மொழியென் றியம்புதல் கீழ்மை!*
*'இந்தியா' தமிழருக் குதவாத கொள்கை!*

*பார்ப்பனர், வடவர், வணிகரே, இந்தியர்!*
*பார்ப்பனர் ஆட்சி பயன்படா தெமக்கே!*
*ஊர்ப்பணக் கொள்ளையர் ஒருமைப்பா டென்பர்!*
*ஒருநாள் அவையெலாம் அடங்குவ துறுதியே!*

*தமிழரெ லாம்தமைத் தமிழரென் றெண்ணுக!*
*தம்சாதி மறக்க; தமிழினம் நினைக்க!*
*தமிழரெ லாம்தமின் தாய்மொழி பேணுக!*
*தமிழ்மொழி பேசுக; பிறமொழி தவிர்க்கவே!*

*தமிழரெ லாம்தமின் தாய்நாட்டைக் கருதுக!*
*தமிழ்நாட்டை விரும்புக; தனிநாடாய் ஆக்குக!*
*தமிழர்க்குத் தமிழ்நாடு தம்நாடாய் ஆகுக!*
*தமிழ்நாட்டைப் பெறாமல் தமிழர்வாழ் வில்லையே!*

**-1988**

## 63 இந்தியன் என்றால் என்னது தம்பி ?

சாதியும் .இருக்கும்;
மதமும் இருக்கும்;
சாத்திரம் மக்களை
வேறெனப் பிரிக்கும்!

மோதலும் இருக்கும்;
முதலாளி இருப்பான்;
முன்னேற்றம் சிலர்க்கே
வாய்ப்பாக இருக்கும்!

குந்தியே தின்பான்
ஒருவன்; மற்றவன்
குடல்வற்றிச் சாவான்;
இவற்றிடை யாவரும்

இந்தியன் என்றால்
என்னது தம்பி?
எல்லாரும் சமமென்றால்
எப்படித் தம்பி?

கொள்ளையன் ஆள்வான்;
கொடுமைகள் செய்வான்;
கொடுக்கும் உரிமைகள்
கொடாது தடுப்பான்!

வெள்ளையன் ஆண்டதும்
வெறியர் ஆள்வதும்
வேறுபா டின்றி
விளங்கிடும் தம்பி!

முந்திய ஆட்சியை
அடிமைஎன் றார்கள்!
முன்னினும் இவர்கள்
அடிமைசெய் தார்கள்!

இந்தியன் என்றால்
என்னது தம்பி?
எல்லாரும் சமமென்றால்
எப்படித் தம்பி?

-1988

## 64 ஊரதிரும் புரட்சி ஒன்று தேவையே!

உண்ணும் உணவுக்கும்
உடுக்கும் உடைக்குமே
எண்ணி எண்ணியே
ஏங்கிய நெஞ்சொடும்

கடுத்த வயிறொடும்
காந்திய கண்ணொடும்
படுத்துக் கிடந்து
பகற்கனாக் காணும்

பாட்டாளி உலகம்
பலகோடி இருக்கையில்
ஆட்டமும் பாட்டமும்
ஆரவா ரங்களும்

கொண்ட கலைகளும்
கூத்தும் தேவையா?
மண்டும்இந் நிலைதான்
பாரத மாண்பா?

எடுத்த எடுப்பில்
உலகம் என்கிறாய்!
உடுத்த உடையிலும்
ஊர்மெச்சும் பேச்சிலும்,

மக்களை ஏய்க்கும்
மதவிழாக் களிலும்
ஒக்க பாரத
ஒற்றுமை என்கிறாய்!

கலகம் என்கிறாய்,
கருத்துகள் சொன்னால்!
உலகை ஏமாற்ற
ஒருமைப்பா டென்கிறாய்!

பாரதப் பெருமையே
பகற்கொள்ளை என்றால்,
ஊரதிரும் புரட்சி
ஒன்று தேவையே!

-1988

## 65 வாய்வீரம் பேசுகிறாய் ! துயரில் பின்வாங்குகிறாய் !

*உறங்கிக் கிடக்கின்ற*
*உணர்விலாத் தமிழனே!*
*இறங்கிப் போரிடாமல்*
*எதுவும் கிடைக்காது!*
*அறங்கெட்டுப் போனதிங்கே அரசு - ஆட்சித்*
*திறங்கெட்டுப் போனதென்று*
*தெளிவாய்த் தெரிந்த பின்னும்...* (உறங்கிக்)

*மறங்கொண்டு போரிட்டால்*
*விளையும் எதிர்ப்புகளை*
*மனங்கொண்டே ஏற்காமல்*
*அஞ்சி மடங்குவதா?*
*முறங்கொண்டு புலியெதிர்த்த வீரம் - இன்று*
*தரங்கெட்டுப் போவதுவோ?*
*தமிழகத்தை மீட்காமல்...* (உறங்கிக்)

*வாய்வீரம் பேசுகிறாய்*
*துயரில்பின் வாங்குகிறாய்!*
*தாய்நாட்டைப் பார்க்காமல்*
*தன்னலத்தைப் பார்க்கின்றாய்!*
*நாயும்தன் உரிமைக்குப் பாடுபடும் - அங்கே*
*மாயும் தமிழர்களைப் பார்!*
*மற்றென்ன உன் கடமை?...* (உறங்கிக்)

**-1988**

## 66 மண்ணுரிமை மீட்பதென்றோ ?

*தெங்கிளநீர்க் குலையினிலே*
*தேரைநோய் பாய்ந்ததைப்போல்*
*தென்தமிழ இனத்தில் வந்தே,*
*தங்கியவேற் றினத்தவர்க்குத்*
*தாள்பிடித்துக் கைக்கட்டித்*
*தம்வயிறு வளர்க்கும் போது,*
*மங்கிவரும் தமிழ்மொழியைத்*
*தமிழினத்தைத் தமிழ்நிலத்தைத்*
*தமிழ்ப் பண்பைத் தமிழர் கலையை*
*எங்கிவர்கள் முன்னேற்றி*
*வளர்த்தெடுத்தே இவ்வுலகில்*
*ஏற்றதோர் இடத்தைக் காண்பார்?*

*வடமொழிக்கே உழைத்துழைத்து*
*வயிறுவளர்ப் பார்சிலபேர்!*
*வடநாட்டார்க் குழைப்பர் சிலபேர்!*
*படமொழியில் கதையெழுதிப்*
*பாட்டெழுதிச் சீர்குலைவைப்*
*பரப்பிவாழ் வார்கள் சிலபேர்!*
*திடமுடைய கொள்கையில்லை;*
*தென்பில்லை; இனத்துக்கொரு*
*தீங்குவந்தால் எதிர்ப்பதில்லை!*
*மடமனத்தர், மானமிலர்,*
*இக்காலத் தமிழரிவர்!*
*மண்ணுரிமை மீட்ப தென்றோ?*

**-1989**

## 67 எத்தனைமுறை எனைச் சிறையிலிட்டாலுமே என்கொள்கை மாறாது !

*எத்தனை முறைஎனைச் சிறையிலிட் டாலுமே*
*என் கொள்கை மாறாது! - ஒரு*
*பித்தனை, ஆண்டியைப் போல்என்றன் உள்ளமும்*
*பேதைமை கூறாது!*
*எத்தனை அரசியல் புரட்டர்கள்! எத்தர்கள்!*
*ஏய்ப்பதே வாழ்வு(அ)வர்க்கே! - ஒரு*
*சித்தனை, அறிவனைப் போல்மக்கள் வாழ்க்கையே*
*சிந்தனை, செயல் எனக்கே!*

*ஏச்சுகள் இழிவுகள் எவையுமென் தொண்டினை*
*இம்மியும் அசைப்பதில்லை! - வாள்*
*வீச்சுகள், குண்டுகள் உடல்பிளந் தாலுமே*
*விளைவினில் மாற்றமில்லை!*
*பூச்சுகள், புனைவுகள், புரட்டுகள், எத்துகள்,*
*பொய்,எனைச் சார்வதில்லை! - விடும்*
*மூச்சுகள் ஒவ்வொன்றும் தமிழ்,இனம்,நாடு - எனும்*
*முழக்கினில் சோர்வதில்லை!*

*அரசெனை எதிர்த்தாலும், அதிகாரம் பணித்தாலும்*
*அச்சமென் நெஞ்சிலில்லை! - ஒரு*
*முரசினைப் போலவே கொள்கை முழக்குவேன்!*
*மூச்சிலும் கெஞ்சலில்லை!*
*உரசியென் உடலினைப் பாறையில் தேய்த்தாலும்*
*உறுதியில் குறைவதில்லை! - தமிழ்*
*அரசினை நிறுவவே உண்கிறேன்; உடுக்கிறேன்!*
*அஃதின்றி மறைவதில்லை!*

**-1990**

# 68 தமிழ்நாடு தமிழர்க்கே !

தமிழர்க்குத் திராவிடம் என்பதோ அயன்மை!
தமிழருக்(கு) இந்தியம் என்றுமே எதிர்மை!
தமிழர்க்குத் தமிழமே பொருந்திடும் இயன்மை!
'தமிழ்த்தே சியமே' என்றும்பே ருண்மை!

'திராவிட உணர்வு' ஒரு மாயைஎன் பதற்கும்,
'தேசிய இந்தியம்' பொய்என் பதற்கும்,
கரவட மாகவே காவிரி நீரைக்
கருநா டகம்தர மறுப்பதே சான்றாம்!

கண்ணகி கோயிலில் வழிபடத் தமிழர்கள்
கால்வைத் திடவும் இசையாமல், கேரளம்
திண்ண மாகவே மறுப்பதும் இந்தியத்
தேசியம் என்பதைப் பொய்யென்று காட்டும்!

ஒற்றுமை ஒருமை என்பன வெல்லாம்
உருப்படாக் கருத்துகள் என்பதைப் பார்ப்பனன்
வெற்றுடல் பூணூலும் விளக்க வில்லையா,
வேறு வேறு இனம்நாம் என்பதை?

ஆகையால் இந்தியத் தேசியம் என்பதோ
'அடிமுட் டாள்தனம், அடிமை'என் றுணர்க!
சாகையில் எழுந்தோ உரிமை மீட்பது?
சாகாத் தமிழர்கள் விடுதலைக் கெழுகவே!

'பிராமணன்' என்றொரு பெயருள்ள வரைக்கும்
பீடிலா இந்தியே ஆள்கின்ற வரைக்கும்
இராதிங்கு ஒற்றுமை, ஒருமைப் பாடெல்லாம்!
எனவே முழக்குக 'தமிழ்நாடு தமிழர்க்கே'!

-1991

## பிடுங்கிய உரிமையை மீட்பது தவறா ?

வெள்ளைக் காரனை விடுதலை கேட்டதும்
வெறிவட வரைநில விடுதலை கேட்பதும்
கொள்ளும் பொருளினில் ஒன்றுதான் என்பதைக்
குருடரும் செவிடரும் உணர்ந்திடல் வேண்டும்!
கொள்ளை யடிப்பவன் அண்டையன் எனினும்
குன்று, மலை, கடல் கடந்தவன் எனினும்
சள்ளையும் ஒன்றுதான்! சழக்கும் ஒன்றுதான்!
சரிநிகர் தமிழக விடுதலை சமைக்கவே!

கருமைப் பாடுளக் கன்னட வெறியன்
காவிரி நீர்தர மறுப்பதைக் கண்டும்,
எருமைப் பாடெனத் தில்லியில் இருப்போன்
எம்மின அழிவினைத் தடுத்திட முனையான்!
ஒருமைப் பாடென, ஒற்றுமை என்ன
உலுத்த வாயர்கள் உளறுவ தெல்லாம்
பெருமைப் பாடெனப் பேசுதல் சரியா?
பிடுங்கிய உரிமையை மீட்பது தவறா?

-1992

## 70 தமிழ் நாட்டின் உரிமை மீட்போம்!

தமிழை மீட்க வேண்டும் - தமிழ்
இனத்தை மீட்க வேண்டும்!
கமழக் கமழத் தமிழன் நாட்டைக்
கடிதில் மீட்க வேண்டும்!

அமிழப் போவதில்லை - வேறு
ஆசை நமக்கிங் கில்லை!
இமையும் பொறுப்ப தில்லை - முன்
இழந்த உரிமை வேண்டும்!

வடவன் மொழியும் வேண்டா - அவன்
வழியும் நமக்கு வேண்டா!
வடவர் ஆட்சி வேண்டா - நாம்
வாழ உரிமை வேண்டும்!

பொறுத் திருந்து விட்டோம் - பூனை
போல் வாழ்ந்து விட்டோம்!
வெறுத்து விட்ட தாட்சி - தமிழ்
வீர வாழ்க்கை வேண்டும்!

கோழை யாகப் போனோம் - ஊமைக்
குருட ராக வாழ்ந்தோம்!
ஏழ்மை தொலைய வில்லை - தமிழ்
நாட்டின் உரிமை மீட்போம்!

-1993

தமிழீழம்

## 71 இலங்கைத் தமிழர்க்கு என் கண்ணீர் !

*இலங்கையில் தமிழ மக்கள்*
*எத்தனை யோநூற் றாண்டாய்*
*விலங்குக ளோடும், தீய்க்கும்*
*வெயிலொடும் குளிரினோடும்*
*கலங்கிய கண்ணீ ரோடும்*
*கடுமையாய் உழைத்து ழைத்துப்*
*புலங்களைத் திருத்தி னார்கள்!*
*புதுப்புலம் விளைவித் தார்கள்!* 1

*காடுகள் அழித்து, நல்ல*
*கழனிகள் தோற்று வித்தார்!*
*மேடுகள் குழிகள் எல்லாம்*
*சமநிலை மேவச் செய்தார்!*
*மாடுகள் போலு ழைத்தும்*
*மண்வளம் பெருக்கி வாழ்ந்தும்*
*நாடுகள் அற்ற, வாழ்க்கை*
*நலமற்ற, குடிக ளானார்!* 2

*நினைக்கையில் உயிரும் நெஞ்சும்*
*நெருப்பாகிக் கனலும்! நல்ல*
*பனைக்கீடாய் உழைப்பைத் தந்தார்;*
*பயன்தினை யின்றிப் போனார்!*
*வினைக்கவர் உரியர் என்றால்,*
*விளைவுக்கும் உரியர்; ஆனால்,*
*மனைக்கொரு நிலமும் இன்றி*
*அடிமையாய் மாள்கின் றாரே!* 3

*கல்விக்கங் குரிமை யில்லை;*
*சிங்களம் கற்றல் வேண்டும்!*
*செல்வத்தைச் செய்வா ரேனும்*
*செழிப்புள்ள வாழ்க்கை யில்லை!*
*பல்வளம் பெருக்கு கின்ற*
*பாட்டாளி மக்க ளேனும்*
*நல்வள வாய்ப்பு மின்றி,*
*நலிவோடு வாழ்த லுற்றார்!* 4

தேயிலைத் தோட்டத் துள்ளே
தேட்டங்கள் செய்வ தெல்லாம்,
நோயினில், கொடுமை தன்னில்
நொந்துடல் மெலிவ தெல்லாம்,
நாயினும் இழிவாய் வாழும்
நந்தமிழ்க் கூட்ட மே, ஆம்!
வாயிலாப் புழுவாய் அங்கே
வதைப்பட்டுச் சாகின் றார்கள்!

கொய்வது குளம்பிக் கொட்டை[1]
குடிப்பது பச்சைத் தண்ணீர்!
நொய்வப்பால்[2] எடுப்ப தெல்லாம்
நொடிகின்ற தமிழர் கூட்டம்!
உய்வதும் நாட்டை யாளும்
உரிமையும் சிங்க ளர்க்கே!
செய்வதங் கின்ன தென்று
தெரியாமல் திகைக்கின் றார்கள்!

இமிழ்கடல் வரைப்பில் தோன்றி
இவ்வுல கெல்லாம் ஆண்ட
தமிழ்மொழி அடிமை மக்கள்
தாய்மொழி யாகும், அங்கே!
தமிழ்மொழிக் கல்விக் கங்குத்
தனியிடம் அளிப்ப தில்லை?
உமிழ்தரு சிங்க ளத்தில்
உரையாற்றல் சட்டம், அங்கே!

பாண்டியன் மரபில் தோன்றி
உலகெலாம் பரந்து வாழும்
மாண்டிறல் தமிழ ரைத்தாம்
**மரமேறும் கூலி** என்பார்!
வேண்டிய தெல்லாம் நன்கு
விளைவித்துக் கொடுத்த கூட்டம்
கூண்டில் அடைக்கப் பெற்ற
அரிமாப்போல் குறுகிற் றங்கே!

பதவியோ தமிழர்க் கில்லை;
படை யினில் சேர்ப்ப தில்லை;
முதலிட்டு வணிகஞ் செய்யும்
முதலாளிப் பேறங் கில்லை;
கதவுக்குத் தாழ்ப்பாள் போல,
களைகொத்துக் காம்பைப் போல,
உதவிடும் தமிழர்க் கங்கே
உண்மைப் பேர் **கள்ளத் தோணி!** 9

காடுற்ற உழைப்பால் நீண்ட
களைப்புற்ற தமிழர்க் கங்கே
வீடற்ற தெருநாய் வாழ்க்கை!
விடிவற்ற இருண்ட காட்சி!
நாடற்றும் உரிமை யற்றும்
நலமற்றும் பதவி யற்றும்
கேடுற்ற தமிழர் அங்கே
கிளையற்று வாழ்தல் கேளீர்! 10

தமிழினம் உலகை யாண்ட
தனியினம் என்றே நாமும்
அமிழ்தெனப் பேசிப் பேசி
ஆண்டாண்டா யடிமை யானோம்!
உமிழ்கின்ற எச்சில் சோற்றுக்
கோடிடும் நாய்க ளைப்போல்
தமிழினம் தமிழர் நாட்டில்
வாழ்தலைத் தவிர்ப்பார் இல்லை! 11

என்னினம் இலங்கை நாட்டில்
இடர்ப்பட்டு வாழ்தல் கேட்டால்
மின்னொன்று தலையிற் பாய்ந்து
மேனியைத் தீய்த்தாற் போல
இன்னுயிர் நடுக்கங் கொள்ளும்!
என்செய்வார் இங்கே உள்ளார்?
தன்னினும் கேடுற்றோர் யார்
என்றிந்தத் தமிழன் கேட்பான்? 12

தமிழர்க்குத் தமிழர் நாட்டில்
தனியர சுரிமை இல்லை;
தமிழர்க்கிங் குடம்புக் கூட்டில்
தமிழுயிர் ஓடல் இல்லை;
தமிழரின் குருதி யோட்டம்
தனித்தமிழ் ஓட்டம் இல்லை;
தமிழரைத் தமிழர் நாட்டில்
தமிழனே மதிப்ப தில்லை! 13

அடிமைக்கோ ரடிமை தன்னால்
ஆகிடப் போவ தென்ன?
மிடிமைக்கு மிடிமை யாங்ஙன்
மேல்துணை வருதல் கூடும்?
விடிவிலாத் தமிழன் சொந்த
வீட்டிலும் வறுமை காய்ந்தால்
மடிதட்டி வரவா செய்வான்
தம்பியின் மலைப்ப சிக்கே? 14

கொடுமையாம் கொடுமை! என்றன்
குலமே, நீ கேட்டுக் கொள்க!
கடுமையிற் கடுமை என்னல்
உரிமையில் கவலை யற்றல்!
நெடுமையாங் கால மாக
தமிழ்க்குல மரபே, நீதான்
கெடுமையை நலமென் றெண்ணிக்
கீழ்மையை உரிமை என்றாய்! 15

இலங்கையில் தமிழர் கூட்டம்
இழிசெயப் படுவ தற்கும்,
கலங்கிய அதன்கண் ணீரைத்
துடைத்து நீ காவா தற்கும்,
விலங்கொன் றுன் காலில் கொண்ட
விளைவதே கரணம் என்பேன்!
துலங்குயர் விடுத லைதான்
இருவர்க்கும் துணையாம் இன்றே! 16

*தமிழர்க்கிங் குரிமைச் சாவே*
*விடுதலை வாழ்வாம் என்க!*
*கமழ்புகழ் பேரி னந்தன்*
*காலந்தேர் கால மெல்லாம்*
*அமிழ்கின்ற அடிமைச் சேற்றில்*
*அலைவுறல் வாழ்க்கை என்றால்,*
*உமிழ்கந்த வாழ்க்கை யின்மேல்;*
*ஒருகோடித் தீமை சாகும்!* 17

*என்னினம் உலகத் தின்மேல்*
*எந்நாட்டிற் போய்வாழ்ந் தாலும்*
*பொன்னினம் பொன்னி னந்தான்!*
*புகழ்பூத்த பேரி னந்தான்!*
*மின்னினம் கதிரி னம்போல்*
*மேலினம் பழமை என்பேன்!*
*முன்னினும் பெருமை யாக*
*முகிழ்ப்பதற் குரிமை வேண்டும்!* 18

*உரிமைநல், லுணர்வு பூத்த*
*ஓரினந் தன்மேல் வந்து*
*நரிமைகள் மொய்ப்ப தில்லை;*
*நாய்களும் மோப்ப தில்லை!*
*உரிமைநல் லுணர்வு செத்த*
*ஓரினந் தன்னைக் காத்தல்*
*அருமையின் அருமை யாகும்!*
*அவ்வினம் கிளைத்தும் சாகும்!* 19

*தாய்நாட்டில்,தமிழர் நாட்டில்,*
*தமிழர்கள் சாகும் போது,*
*சேய்நாட்டில் அவரின் சேய்கள்*
*செழிப்புற வாழ்தல் எங்ஙன்?*
*பாய்கின்ற குருதி யாறு*
*பாய்ந்தன்றோ உரிமை என்னும்*
*காய்காய்க்கும்; கனிப ழுக்கும்!*
*கருத்தினில் வைத்துக் கொள்க!* 20

இலங்கையில் பிசியில் மற்றும்
எந்நாட்டும் தமிழர் வாழ்ந்து
கலங்கையில், தமிழர் நாட்டின்
கருப்பையின் குழந்தை நெஞ்சும்
மலங்கியுள் துடித்தல் வேண்டும்!
மாண்புயிர் வேதல் ண்டும்!
நலங்குலைந் திழிவு பட்ட
தமிழா,அந் நாளும் உண்டோ? 21

அயல்நிலந் தாவிப் போந்தீர்!
அடிமையாய் வாழ்த லுற்றீர்!
மயலுறும் கொடிய ராட்சி
மலையினால் மோத லுற்றீர்!
வயலுண்டு; வளமு முண்டு!
வாழ்தமி ழகத்தில்; ஆனால்
செயலுண்டோ, உரிமை யுண்டோ,
உங்களைச் சீந்து தற்கே? 22

குலைகுலை யாகப் பூத்த
குலமே, செந் தமிழ்ப்பூக் காடே!
விலையிலை உன்மொ ழிக்கே;
விளைவுக்கும் வரலா றில்லை!
அலையலை யாகப் போனாய்
அயல் நிலந் தேடி! அங்கே
இலையிலை யாக வீழ்ந்தாய்!
இருப்பது கிளையொன் றேயாம்! 23

அடிமரம் தமிழ்நி லந்தான்!
ஆனாலும் மரத்தின் வேரில்
குடி கொளும் ஆரி யந்தான்
கொடுநாகம்! அந்நா கத்தின்
முடிமயல் கொள்ளு மாறு
மகுடிவைத் தூதும் ஆட்சி!
விடியுங்கொல், இருளுங் கொல்லோ,
விறல்தமிழ் மரத்தின் வாழ்க்கை? 24

விடுதலை ஒன்றே வாழ்க்கையை
விடிவுறச் செய்யும்! மாற்றார்
கெடுதலைத் தூள்தூ ளாக்கும்!
கீழ்மையைத் தலைகீ ழாக்கும்!

அடுதலைச் செய்க! உண்மை
ஆர்வத்தால் உணர்வால் பூக்கும்
விடுதலை! அதைநி னைத்தால்
மண்ணன்று; விண்நம் கையில்!

**-1975**

## 72 சிங்கள இனமே ! சிங்கள இனமே !

எந்தமிழ் இனத்தார் இந்நில வுருண்டையில்
எந்தப் பகுதியில் இருந்தாலும் - அவர்
சொந்தம் நமக்கே! நாமவர்க் கென்றும்
சொந்தம் சொந்தம் என்றுரைப் போம்!
உந்தும் உணர்வும் உறவும் அவர்பால்
உண்டுண் டென்றே முழக்கிடுவோம்! - அவர்
சிந்தும் கண்ணீர், செந்நீர் எதற்கும்
சீறி எழுந்தே வழக்கிடுவோம்!

ஈழத் தமிழ்க்குலம் சிங்கள ரால்உறும்
இடர்கள், இழிவுகள் நினைந்திடுவோம்! - அவர்
வாழத் துடித்தும் வறுமைப் பட்டும்
வடிக்கும் நீரில் நனைந்திடுவோம்!
ஆழக் கடலும் அரசுப் பிரிவும்
அவர்க்கும் எமக்கும் தடையில்லை! - எம்
வேழப் பெருந்தோள் எழுந்தால், தமிழர்
வெற்றி நடைக்கெதிர் நடையில்லை!

சிங்கள இனமே! சிங்கள இனமே!
சிறுமை செய்தாய் தமிழினத்தை!... நீ
இங்குள தமிழரை எண்ணிலை போலும்!
எங்குள ராயினும் செந்தமிழர்
பொங்குணர் வுக்கடல்! புகையும் எரிமலை!
போழ்வாய் அரிமா! பொருகளிறு!... அவர்
வெங்குரு தித்துளி ஒன்றிருக் கும்வரை
வீழ்ச்சியி லாதது தமிழினமே!

**-1977**

## 73 நெஞ்சை உருக்கும் நிலை.

நெஞ்சை உருக்குதடா! - நம்
நினைவைக் கருக்குதடா! - ஒரு
பஞ்சைப் பழுதென, ஈழ நிலத்தினில்
பைந்தமிழ்த் தாயினம்
அஞ்சி வாழுநிலை (நெஞ்சை)

கெஞ்சி மறுகுகின்றார் - கொடுங்
கேட்டில் கருகுகின்றார்! - 'த்சொ'
கொஞ்சமோ துயர்! எஞ்சுமோ உயிர்!
குடிமைத் தமிழினம்
மிடிமைப் படும்நிலை (நெஞ்சை)

கூறுகூ றாய்ப்பிரிந்தார் - பல
குடும்பங்க ளாய்க் கரிந்தார் - அட,
ஆறுமோ துன்பம் தீருமோ என
ஆண்ட தமிழினம்
மாண்டு வரும்நிலை (நெஞ்சை)

குலைக்குள் வெயர்த்ததடா! - நம்
குடர்க்குள் சிலிர்த்ததடா - படு
கொலைக்கும் புலைக்குமாய் அலைக்கப் பட்டே,உயர்
கொற்றத் தமிழினம்
செற்றப் படும்நிலை (நெஞ்சை)

ஏழ்மைத் தொழிலாளர் - மலை
ஏறும் உழைப்பாளர் - இனி
வாழ்வா இலைஉயிர் வீழ்வா எனும்படி
வாய்மைத் தமிழினம்
நோய்மைப் படும்நிலை (நெஞ்சை)

அழிவுக்குள் ளாகினரே! - ஓ!
ஆதர வற்றனரே! - பல
இழிவும் இழப்புமாய் ஏதிலி யாய்விட்ட
ஈழத் தமிழினம்
வாழத் தகாநிலை (நெஞ்சை)

-1977

## 74 ஒன்றுகாண் உலகத் தமிழினம் !

ஒன்றுகாண்; உலகத் தமிழினம்! இன்றே
உறக்கந் தவிர்த்தே எழுந்தது காண்!
நன்றுகாண் அதனின் நடையும் திறனும்;
நாட்குநாள் வலிந்தே பொலிவுறும் காண்!
அன்றுகாண் அரசும் அழிந்தது; வரலா
றழிந்தது; பெருந்திறல் அழிந்தது காண்!
இன்றுகாண், எழுந்தது புரட்சியும் புதுமையும்!
இணைந்தது தமிழினம் முனைந்தது காண்!

குன்றுகாண்! மலைகாண்! கடல்காண்! காடுகாண்!
குன்றா உணர்வினில் மறைந்தன காண்!
நின்றுகாண்! சென்றுகாண்! எங்கும் தமிழினம்
நிமிர்ந்தது நிமிர்ந்தது சோர்விலை காண்!
கன்றுகாண் ஆயினும் களிறுகாண் இளைஞர்!
கதிர்விழி நோக்கினர் அதிர்நடை காண்!
வென்றுகாண் திரும்புவர்! தமிழ்நிலம் மீட்குவர்!
வீழ்ச்சியும் தாழ்ச்சியும் இனியிலை காண்!

பழம்பெரு ஞாலம்; பழம்பெருந் தாயினம்!
பழிப்பிலும் இழிப்பிலும் கிடந்தது காண்!
இழந்ததிங் குரிமை; இழந்தது பெருமை!
இழப்பிலை இனியது வளம்பெறல் காண்!
செழுந்தமிழ் வளர்க! சிறப்புற் றிலங்குக!
செந்தமிழ் இனமும் செழித்திடுக!
எழுந்தன புலிகள்! எழுந்தன கரிகள்!
எங்கும் விடுதலைக் கொடிநடவே!

-1979

## 75 புதுச்சூள் உரைப்பீர் !

'மத்தியூ' என்னும் மதியிலாக் கேடன்
பத்தரை மாற்றுப் பசும்பொன் மணியை
மங்கையர்க் கரசியாம் மறக்குல மாதை
எங்கள் தமிழின இழிவைப் போக்கப்
பொங்கி யெழுந்த பொற்றொடி மகளை
மங்கா வீரத்து மாமணித் தாயை
இளைக்கா நாவின் எம்முடன் பிறப்பைச்
சளைக்கா உரையைச் சாயாத் துணிவைக்
கற்பின் கொழுந்தைப் பொற்புறு செல்வியை
வெற்பின் உறுதியை வீரத் திருவைச்
செங்களம் ஆடிடும் செந்தமிழ் மறத்தியை
மங்கையர் ஏந்தும் மகளிர் தலைவியை
மயலுறப் பாடும் மறத்தமிழ் இசையை
வைரவெண் மணியை வரிப்புலிப் பேடைக்
கனலுறப் பிளிரும் களிற்றுப் பிடியை
அனலுறப் பேசும் ஆர்வ அன்னையை
அறம்பாடி வந்த அருந்தமிழ் அணங்கைப்
புறம்பாடி யெழுப்பும் பூவையர் கொழுந்தைக்
கணவர் மருங்கில் கையொடு கையாய்த்
துணைவி யாகித் தோளொடு தோளாய்
நிழல்போல் என்றும் நெஞ்சொடு நெஞ்சாய்
அழலென வெழுந்த அரிமாப் பிணவைப்
பழித்தும் இழித்தும் பதறா நாவொடு
அழித்துப் பேசினான் என்னும் அழலுரை
செவிமடுத் தின்னும் செந்தமிழ் மறவர்
அவிசோ றுண்டிங் கமைந்திருப் பாரோ?
கவிழ்ந்த தலையொடு காத்திருப் பாரோ?
அவிழ்ந்த நெஞ்சோ டழன்றிருப் பாரோ?
குலப்பிரிவு உதறிச் சமயக்காழ்ப் பறுத்து
மலைப்பெருந் தோள்கள் மலியச் சிலிர்த்தே
பொங்கி எழாரோ? பூவையர் குலத்தின்
குங்குமக் குருதி கொப்பளி யாரோ?
நற்றாய் மங்கையர்க் கரசியின் கழுத்துப்
பொற்றா லியின்மேல் புதுச்சூள் உரைத்துத்
தனித்தமிழ் ஈழம் தாங்க
முனித்தெழுந் தின்றே முனைக தமிழரே!

-1979

## 76 தென்னவர் இனமே ! தென்னவர் இனமே !

*தென்னவர் இனமே! தென்னவர் இனமே!*
*என்னதான் இயம்பினும் இம்மியும் நெகிழாத்*
*தன்னுணர் வழிந்த தென்னவர் இனமே!*

*முன்னவர் தாங்கிய மொய்ம்புகள் குறைந்து*
*சின்னவர் ஆகிச் சீரழிந் தனையே!*

*அறமுறை பிழையா அரசியல் திறம்பி*
*மறமுறை தழுவி மாண்பழிந் தனையே!*

*அருளியல் நெறியால் ஆக்கம் பகிர்ந்த*
*பொருளியல் தாழ்ந்து புன்மையுற் றனையே!*

*கலைமலி வாழ்க்கை கைநெகிழ்த் தின்று*
*புலைமலி காட்சிப் புரையோ டினையே!*

*பாலுறுந் தூய பசுந்தமிழ் மறந்து*
*மாலுறும் வேற்று மருள்மொழி பலவால்*
*கலப்பும் உலப்பும் கழிவறைக் கொச்சையும்*
*அலப்புரை வழங்கும் அரும்பொரு ளின்மையும்*
*மேலுற விழிந்து மெய்ப்பொருள் தாழ்ந்து*
*காலுறும் அடிமை கைப்பற் றினையே!*

*பழிமிகும் இந்நிலை படிப்படி வீழ்த்தி*
*இழிமிகும் உன்னிலை ஏற்றம் கொள்ள*
*விழித்தெழு வாயோ; வீறுகொள் வாயோ?*
*அழித்தெழு தாத,எம் ஆர்வ எழுத்தினால்*
*செழித்த பெரும்புகழ் சேரக்*
*கொழித்த நடையிடாய், குமரியர் இனமே!*

**-1980**

## 77 நாங்கள் புலிகள்!

(எடுப்பு)

நாங்கள் புலிகள்
நாட்டைக் காப்போம்! ஓங்கிய தமிழர்
உரிமைகள் மீட்போம்!

(தொடுப்பு)

தூங்குதல் இல்லோம்; துயர்களைப் பாரோம்!
ஏங்குதல் கொள்ளோம்; இன்பம் விரும்போம்! (நாங்கள்)

சூளுரை ஏற்றோம்; சோம்புதல் இல்லோம்!
தோளுரம் கொண்டோம்; துணிவொடு நிற்போம்! (நாங்கள்)

அச்சமும் கொள்ளோம், அயர்வுகள் இல்லோம்!
எச்சமும் இன்றி, எம்கடன் செய்வோம்! (நாங்கள்)

எழுச்சியும் செயலும் எங்கள் கொள்கை!
முழுச்சிதை வுறினும் முனைப்பில் தளரோம்! (நாங்கள்)

இளைஞர்கள் வருவீர்! எம்முடன் சேர்வீர்!
இளைஞர்கள் எழுவீர்; எம்மொடு நடப்பீர்! (நாங்கள்)

தமிழ்மொழி வளர்ப்போம்! தாழ்ச்சிகள் தகர்ப்போம்!
தமிழ்நிலம் அமைப்போம்! தளர்வுற மாட்டோம்! (நாங்கள்)

உலகத் தமிழர் ஒன்றாய் இணைவோம்!
விலகுதல் இன்றி, வெற்றிகள் கொள்வோம்! (நாங்கள்)

-1980

## 78 கன்னித் தமிழ்நிலம் உணருமா? – புதுக் கதை தரும் உரிமைகள் மலருமா ?

தமிழ்மொழி காக்கவும்
தமிழினம் மீட்கவும்
தமிழ்ப்படை அங்கே எழுந்தது! - நெடுந்
தமிழ்ப்பகை உடனே விழுந்தது!
குமிழ்த்தெழும் குருதி!
குன்றுதோள் உறுதி!
கொள்கைத் தமிழர்கள் கூடினர்! - ஒரு
குரலினால் விடுதலை பாடினர்!

தெற்குச் சிவந்தது!
தீந்தமிழ் நிவந்தது!
செந்தமிழ் ஈழம் மலர்ந்தது! - கொடுஞ்
சிங்களப் பெரும்பகை உலர்ந்தது!
கற்குன் றெென,ஒரு
காட்சியும் பிறந்தது!
கன்னித் தமிழ்நிலம் உணருமா? - புதுக்
கதைதரும் உரிமைகள் மலருமா?

-1980

# 79 தந்தை செல்வா பெயரால் தழைக்கும் தமிழீழம் !

### எடுப்பு

தந்தை செல்வா தம்பெயர் சொன்னால்
தவறாமல் தழைக்கும் தமிழீழம் தன்னால்! (தந்தை)

### தொடுப்பு

சிந்தையில் எரியும் உரிமைச் சுடர்விளக்கம்!
செழுந்தமிழ் மணக்கும் விடுதலை முழக்கம்! (தந்தை)

### முடிப்பு

முந்தையர் நாட்டின் முழுஉரி மைப்போர்
மூண்டிடக் கொளுத்திய வாய்மையின் திருப்பேர்!
தந்தையர் ஆண்ட தமிழீழத் தாயகம்
தமிழருக் காக்கிய வரலாற்று நாயகம்! (தந்தை)

குலைநடுங் காத கொள்கையின் குன்றம்!
கூர்மை நோக்கிலோ உயர்அற மன்றம்!
மலையகம் இணைந்த மணித்தமி ழீழம்
மாய்க்கும் பதவியை உதறிய வேழம்! (தந்தை)

செயல்திறம் மிகுந்த சிந்தனை வெள்ளம்!
செகுக்கும் மறம்விளையும் தூய்நெறி உள்ளம்!
அயலவன் சிங்களன் ஆளுமை ஒதுக்கியே
அன்னைத் தமிழீழ நாட்டினைப் புதுக்கிய (தந்தை)

-1981

## 80 இன்னும் பொறுத்திடலாமோ ?

*இன்னும் பொறுத்திட லாமோ? - தமிழ்*
*ஈழத்தில் நந்தமிழ்த் தாயினம் நாளும்*
*முன்னும் வெறியர்க ளாலே - அந்த*
*மூடராம் சிங்களக் காடைய ராலே,*
*மன்னும் கொடுமைகள் தாங்கி - நெஞ்சு*
*மாழ்கி மாழ்கி மடிந்திடும் செய்தி!*
*துன்னும் துடுக்கினைச் சாய்க்க - இளந்*
*தோன்றல்க ளே!உடன் மூண்டெழு வீரே!*

*மாண்டு மடிந்திட லானார் - இளம்*
*மங்கையர் கற்பை இழந்திட லானார்!*
*நீண்ட நெடுந்துயர்க் காதை - இன்னும்*
*நின்றிடும் என்ற நிலையில்லை அங்கே!*
*ஆண்ட தமிழினம் தம்பி! - இன்றைக்*
*காளப் படுவதில் மிகக் கொடும் போக்காம்!*
*ஈண்டுத் தயங்கிட லாமோ? - தமிழ்*
*இளைஞர் இளைஞைக ளேஎழுவீரே!*

*சிங்களர்க் கும்தமி ழர்க்கும் - ஒரு*
*சேர இணைந்திடும் போக்கினி இல்லை!*
*தங்கும் தமிழறம் எங்கே! - வெறி*
*தாக்கிடும் சிங்களர் போர்க்குணம் எங்கே!*
*எங்கும் பொருந்திடல் இல்லை - இனி*
*எந்தமி ழீழம் அமைதலே நன்றாம்!*
*பொங்கும் புரட்சியைக் காண்பீர்! - உயிர்*
*போவதும் வாழ்வதாம் விடுதலைப் போரில்!*

*தன்னந் தனித்தமி ழீழம் - பெறின்*
*தாங்குமோ என்பது வீணர்கள் பேச்சு!*
*சின்னஞ் சிறிதெனும் நாடு - பல*
*சீருடன் உரிமையில் வாழ்ந்திடும் போதில்*
*மின்னும் விளைவுக ளோடு - உயர்*
*மேன்மைத் திறமும் உழைப்பும் மிகுந்தால்*
*தின்னும் உரிமை வராதோ? - முதல்*
*தேவை, தமிழர்க்கு விடுதலை ஒன்றே!*

நெஞ்சை நிமிர்த்துக தம்பி! - உன்
நேரிய பார்வையைக் கூராக்குத் தம்பி!
பஞ்சைய ரல்லரே நாமும் - சேர
பாண்டிய சோழர்தம் வழியினர் அன்றோ!
மிஞ்சும் துயர்வெள்ளம் மேலே - இனி
மேலும் பொறுத்திடல் கோழையர் வேலை!
அஞ்சிடும் சாவுகள் கோடி - எனில்
அஞ்சாமை பெற்ற உரிமைகள் கோடி!

-1981

## 81 தமிழீழ மறவரைத் தமிழால் வணங்குவேன் !

மாந்த உரிமைகள் மறுக்கப் படுவதைக்
காந்தும் உளத்தொடு கருத்தினும் செயலினும்
இந்நில வுருண்டைமேல் எவரெழுந் தெதிர்த்துச்
செந்நிறக் குருதியைச் சிந்துகின் றாரோ,
விண்ணசை வுறஎவர் வெற்றி விடுதலைப்
பண்ணிசை முழக்கிப் பாடுகின் றாரோ,
அவரை வாழ்த்தும்இவ் வார்வ நெஞ்சம்,
தவறிலா விடுதலைப் புலிகளைத் - தமிழீழ
உரிமை வேள்விக்கு உயிர்தரும் இளைஞரை
வரிநிறம் மாறா வேங்கை வயவரை
குறிதிசை திறம்பாக் கொள்கை மறவரை,
உரம்நெகி ழாத உரிமை உளங்களை,
விலையில் லாதஅவ் வீர உயிர்களைத்
தலைதரை தாழ்த்துத் தமிழால் வணங்குமே!

-1982

## 82 தூக்கில் இடவேண்டா !

*தூக்கில் இடவேண்டா! - இளங்*
*குட்டி மணியையும்,செகனையும் - சிங்களர்*
*தூக்கில் இடவேண்டா!*

*தேக்கிய வீரத்தின் தொகுப்பன்றோ, அன்னவர்!*
*தமிழீழ நலத்துக்குத் தம்நலம் தின்னவர்!*
*பாக்கொள்ளும் துணிவொடு சாவையும் கொன்றவர்!*
*பாருக்குள் விடுதலை வரலாற்றின் குன்றவர்!*
*(தூக்கில்)*

*சிங்கள நாட்டுக்கும் பெருமை, அவர் பிறப்பு!*
*செந்தமிழ் இனத்துக்கே இழப்பு, அவர் இறப்பு!*
*எங்குமே உலகினில் வீரமிலா மற்போகும்;*
*இவர்களைத் தூக்கிலிட்டால், வீரத்தின் உயிர்சாகும்!*
*(தூக்கில்)*

*கொலைசெய்ய வில்லையா, மறவர்கள் போரினில்?*
*குடிநலம் காத்திடக் களைகொய்தார் வேரினில்!*
*விலையதற் கீவது தமிழீழம் ஒன்றுதான்!*
*வீணர்கள் இருந்தென்ன? மறம் வாழ்தல் நன்றுதான்!*
*(தூக்கில்)*

*வீரங்கள் கொழிக்கின்ற விளைநிலத் தோப்பு, அவர்*
*வேண்டுதல் வேண்டாத தன்மைக்குக் காப்பு, அவர்!*
*ஈரங்கொள் மனத்தினால் எண்ணியே பாருங்கள்!*
*இளைஞரை அழிக்காமல் வாழ்க்கையைத் தாருங்கள்!*
*(தூக்கில்)*

**-1982**

## 83 பேச்சுரையால் தமிழீழம் பிறப்பதில்லை ! பிறந்துவிட்ட உரிமையெண்ணம் சாவதில்லை !

பேச்சுரையால் தமிழீழம்
பிறப்ப தில்லை!
பிறந்துவிட்ட உரிமையெண்ணம்
சாவ தில்லை!
மூச்செல்லாம் விடுதலைக்கே!
முயற்சி யாவும்
முழுவுரிமை பெறுவதற்கே!
முனைந்தோர் கையின்
வீச்செல்லாம் பகைப்புலத்தை
வீழ்த்து தற்கே!
வினையெல்லாம் தமிழீழம்
சமைப்ப தற்கே!
ஏச்செல்லாம் இழிவெல்லாம்
உரமே ஆகும்!
இளைஞர்படை எழுந்துவிட்டால்
கொடுமை சாகும்!

பதவியெல்லாம், நாற்காலி
நலன்கள் எல்லாம்,
பாய்ந்துவரும் எழுச்சிக்குத்
துணையும் ஆமோ!
உதவியெல்லாம் உரிமையினை
மீட்டி டாது!
உயிர்மீட்டும் விடுதலைக்கே
உரஞ்சேர்க் காது!
பொதுவான நடைமுறைகள்
உணர்வை வீழ்த்தும்!
பொய்ச்சலுகை, தூதுரைகள்
காலந் தாழ்த்தும்!
மெதுவான போக்குகளைத்
தவிர்த்தல் வேண்டும்!
மெத்தனங்கள் சூழ்ச்சிக்குக்
கைத்தாளங்கள்!

உலகமென்னும் உருண்டைக்குள்
தமிழர்க் காக
உரிமையுள்ள ஒருநாடு
தோன்றல் வேண்டும்!
கலகத்தால் இனமழிந்து
சாகும் முன்னம்,
கயவரெல்லாம் தமிழ்க் குலத்தை
அழிக்கும் முன்னம்,
பலகற்ற சூழ்ச்சியினால்,
அதிகா ரத்தால்,
பைந்தமிழர் நைந்தழிந்தே
ஒழியு முன்னம்
விலகட்டும் பகை! உரிமைக்
கதிர்தோன் றட்டும்!
விடியட்டும் தமிழீழம்!
விளங்கட் டும்மே!

விடுதலைக்குத் தோள்கொடுக்கும்
இளைஞ ரெல்லாம்
வேற்றுமைகள் மறந்தொருங்கே
அணிசே ரட்டும்!
கெடுதலைக்குக் குழிவெட்டி
மண்மூ டட்டும்!
கீழறுப்பு வேலைகட்குத்
தீவைக் கட்டும்!
அடுதலையைத் தொடங்கட்டும்!
படைசூ ழட்டும்!
ஆர்ப்பரிப்பு வானத்தைக்
கிழித்தே கட்டும்!
படுதலையில் காலிடறப்
பகையோ டட்டும்!
பதவிநலம் நாடுபவர்
உளஞ்சா கட்டும்!

-1983

## 84

### ஆனால், தமிழ் நெஞ்சங்களே!
### வீரத் தமிழ் மறவர்களே ! உங்களைப் பதறப்பதற
### வாரிக் கொடுத்து விட்டோமே !

*"அண்டையிலே தமிழ்நாடு!*
*அதுதான் எம் தாய் வீடு!*
*பண்டையிலே பூத்த தமிழ்ப்*
*பாலந்தான் எம் பீடு!*
*கொண்டையிலே பூ கசங்கக்*
*கொடியிடையில் துணி கசங்கத்*
*தண்டையிலே ஒலிஅழுங்கத்,*
*தங்கை அக்கை தீதென்றால்,*
*வந்திடவா மாட்டார்கள்!*
*வாழவைத்த அண்ணன்மார்?*
*கொந்திடவா மாட்டார்கள்,*
*சிங்களவன் குலைஉயிரை?*
*தந்திடவா மாட்டார்கள்*
*தாலிகளின் தனிமதிப்பை"*

*இந்தப்படி எண்ணிரோ*
*எந்தமிழ்த் தாய்மாரே?*
*எங்களுடை தங்கையரே!*
*எங்களுடை அக்கையரே,*
*செங்கழுகு புறாக்குஞ்சின்*
*சிறகடித்து மேல்பறந்து*
*பொங்கு (அ)ரத்தம் பீறிடவும்*
*போகும் உயிர் வீறிடவும்*
*சிங்களவன் உம்மைச்*
*சிதைத்திடும் அப் போதினிலே!*

*"எட்டி முழக்க மிட்டால்*
*எட்டிலக்கம் பேர் வருவார்!*
*கொட்டி அழைத்திட்டால்*
*கோடிக்குக் குறையாது!*
*அட்டியில்லை, தமிழ்நாட்டின்*
*அண்ணன்மார் தம்பிகள்மார்!*
*கெட்டி வயிரங்கள்*
*கேட்பதற்கு வருவார்கள்!*

சிங்களவர்க் கெங்களுடை
செய்தி தெரியாது!
பொங்குணர்வுத் தமிழர் குலம்!
பூரித்த வீரர் குலம்!
திங்களொடும் பரிதியொடும்
தீரப் பிறந்தவர்கள்!
மங்காத வீரம்,
மலையுடைக்கும் வீறுநடை!

பக்கத்தில் வாழ்கின்றார்!
பதினெட்டுக் கற்கள்தாம்!
முக்கி எழுந்தால்
முழங்கால் கடல்நீர்தான்!
எக்கிக் குரல்கொடுத்தால்
இடுப்பொடிக்க வந்திடுவார்!
சிக்கி விட்டால் சிங்களவன்
சிறுகுடலும் மிஞ்சாது!

கொன்று குவித்திடுவார்,
சிங்களவக் காடையரை!
தொன்றுதொட்ட வீரம்
தொலைந்தழிந்தா போயிருக்கும்?
என்றேனும் ஓர்நாள்
ஈழம் கிடைக்காதா?"
என்றெண்ணி இருந்தீரோ?
நம்பிக்கை இழந்தீரோ?

சோழன்மார் பாண்டியன்மார்
சேரன்மார் முந்தையர்கள்
ஈழத் திருநாட்டின்
எம்மின் உடன்பிறந்தோர்
போழ உடல் பிளக்க,
புகைக்குழலின் இடிவெடிக்கு
வீழ, உயிர் கழல,
வீறிடும் அப் போதினிலே!

ஆனாலும் வீரர்களே!
ஆர்த்தெழுந்த நெஞ்சங்களே!
போனாலும் ஒருமுறைதான்
போனஉயிர் மீளாது,
மானத் தமிழீழம்!
மற்றெதற்கு வாழ்வுநலம்?
கூனாத் தமிழ்வீரம்!
கொப்பளிக்கும் செம்மாப்பு!

என்றபடி போரிட்டீர்!
எதிர்பார்த்துக் காத்திருந்தீர்!
தின்றுழலும் வாழ்க்கையிலே
தீனிப்பை நிறைந்துவிட்டால்
குன்றெதிரே பகையாகிக்
குலைநடுங்க வந்தாலும்
நின்றெதிர்க்க மாட்டாத
நெடுமரமாய் இருந்துவிட்டோம்!

சாதிக்குப் போரிடுவோம்!
சழக்குமதக் கூறிடுவோம்!
வீதிக்கு வீதி
விரிசலுற்றுப் போய்விட்டோம்!
பாதிக்குக் குறைந்துவிட்டோம்!
பண்பாடு கலையிழந்தோம்!
ஏதினிமேல் முன்னேற்றம்?
எதற்கினிமேல் வாழ்ந்திருப்போம்?

தமிழீழம் கேட்கின்ற
தங்க மறவரை நாம்
அமிழாத வீரப்போர்
ஆங்கதனில் பறிகொடுத்தோம்!
உமிழ்கின்ற புன்பகையின்
உயிர்குடிக்கத் தவறிவிட்டோம்!
தமிழீழ மறவர்களே!
தாழ்ச்சியில்லா வீரர்களே!

*மாயாத் தமிழினத்தின்*
*வாகைக் களிறுகளே!*
*சாயாத் தமிழ்மரபின்*
*சாகா உருவங்களே!*
*காயாத உங்கள்*
*குருதியின்மேல் ஆணையிட்டோம்!*
*தாயகத்தை மீட்போம்!*
*தமிழீழம் காண்போமே!*

**-1983**

## 85 தமிழீழம் வாழ்க !

*தங்கத் தாயகம் தமிழீழம் வாழ்க!*
*தமிழர்கள் உரிமையால் தழைத்தின்பம் சூழ்க!*
*பொங்கிய உணர்வினால் பூத்தது நாடு!*
*புதுமையும் நலன்களும் பொலிந்ததெம் வீடு!* (தங்கத்)

*ஊமைகள் பேசினர்; ஒழிந்ததிங் கடிமை!*
*உன்மத்தம் தொலைந்தது; ஒய்ந்தது மிடிமை!*
*ஆமைகள் எழுந்தன! ஆர்த்தன புலிகள்!*
*அயலவர் ஆட்சி அகன்றது நாட்டில்!* (தங்கத்)

*ஒற்றுமை மலர்ந்தது; உரிமைகள் கண்டோம்!*
*ஒழிந்தன பிளவுகள்! உறவுகள் கொண்டோம்!*
*வெற்றி முரசங்கள் விண்வெளி தோயும்!*
*வீரச் சுடரொளி நிலமெங்கும் பாயும்!* (தங்கத்)

**1985**

## 86 போக்கற்றோம் ! போக்கற்றோமே !

இலங்கையிலே குருதியாற்றில்
எந்தமிழர் பிணம்மிதக்கும்!
எரிதழுவும் வீடுகளை!
என்செய்வோம்! என்செய்வோமே!

விலங்கினங்கள் ஊர்புகுந்து,
வெவ்வாயில் உயிர்கவ்வி,
வெற்றுடலைக் குதறுகின்ற
வெறிகண்டோம்! வெறிகண்டோமே!

கலங்கையிலே நமதுவிழி
கண்ணீரைப் பொழியும்!உளம்
கனன்றுவிம்மும்! குலைவெடிக்கும்!
கையற்றோம்! கையற்றோமே!

புலங்கெட்டோம்! பொறிகெட்டோம்!
போயொளியும் வழியில்லை!
புன்மையிது! அடடா! ஓர்
போக்கற்றோம்! போக்கற்றோமே!

-1986

## 87 இந்தக் குழந்தைகள் தமிழக் குழந்தைகள்!

இந்தக் குழந்தைகள்
தமிழக் குழந்தைகள்;
இலங்கையில் செத்துக்
கொண்டிருக்கும்
இந்தக் குழந்தைகள்
மாந்தக் குழந்தைகள்;
ஏனோ, உலகம்
புறக்கணிக்கும்!

இந்தக் குழந்தைகள்
பிறக்கையில் பெற்றோர்
எதுநினைத் தாரோ தெரியவில்லை!
இந்தக் குழந்தைகள் துமுக்கிக்கே
இரையா கும்என அறியவில்லை!

பயிர்களை அழித்திடும்
பூச்சிகள் கொன்றிடப்
பற்பல மருந்துகள் கண்டறிவோம்!
உயிர்களை அழிக்கும்
சிங்களக் கொடியரை
ஒழித்திடும் மருந்தெது?
விண்டறிவோம்!

-1986

## 88 அழுகிறாய் கண்ணே ! அழாதே !

அமிழ்த வாய் திறந்தே
அம்மா அம் மாவென்(று)
அழுகிறாய், கண்ணே!-அழாதே!
தமிழீழம் பெற வுன்
தாயும் தந்தையும்
தம்முயிர் தந்தனர்-அழாதே!

சிங்களக் கொடியர்
சிதைத்த தமிழருள்
சிக்கினர் அவர்களும்!- அழாதே!
இங்குனக் காயிரம்
பெற்றோர் இருக்கையில்
ஏனழு கின்றாய்?-அழாதே!

நம்மவ ருக்கொரு
நாடு கிடைத்திடும்!
நலம் வரும் உனக்கும்!- அழாதே!
அம்மா, அப்பா,
அண்ணன், அக்கையாய்
அனைவரும் இருப்போம்!-அழாதே!

-1986

## 89 தமிழீழப் பெண்கள் எழுச்சிப் பண் !

நீண்ட காலம் பூண்ட அடிமையும்,
நெடிய காலம் இழந்த உரிமையும்,
மாண்டு மடிந்த இருளொடு மாய்ந்தன!
மங்கையரே! ஒன்று திரண்டெழு வீரே!
மலர்ந்தது மலர்ந்தது தமிழீழம் என்றே!

எதிரிகள் படைகளும் தூள்தூள் ஆயின;
எம்முடை அண்ணனும் தம்பியும் சாய்ந்தனர்!
கதிரவன் முளைத்தது சிவந்த வானிலே;
கன்னியரே! ஒன்று சேர்ந்தெழு வீரே!
காத்த வீரரைக் கைதொழு வீரே!

ஆண்டான் அடிமை வேற்றுமை ஒழிந்தது;
ஆண்பெண் சமமென முரசும் ஒலித்தது;
வேண்டிய விடுதலைப் பண்ணும் இசைத்தது;
வீரப் பெண்டிரே இணைந்தெழு வீரே!
விடிவை நோக்கிப் புறப்படு வீரே!

சிவப்பு நிலத்தினில் பசுமை செழித்தது!
சிந்திய குருதியால் உரிமை கொழித்தது!
தவப்பு தல்வரின் உயிர்களும் சிரித்தன!
தங்கை தமக்கையர்கள் கற்பும் எரிந்தது!
தாய்க்குலத் தீர்!வந்து கூடிடு வீரே!

இழந்த உரிமைகள் மீண்டன இங்கே!
எல்லா நலன்களும் பெற,ஊது சங்கே!
பழந்தமிழ் ஈழம் சமைத்திடு வோமே!
பாரினுள் நாமும் உயர்ந்திடு வோமே!
பாங்கிய ரே!அணி திரண்டெழு வீரே!

-1987

## 90 தமிழ் மானம் நிலைபெறும் !

*பாராண்ட தமிழ்வேந்தர் பைந்தமிழைத் தலைவைத்தே*
*நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைகேட்டோம்!*
*நீராண்ட இலங்கையினை நிழலாண்ட கதைமாறிப்*
*போராண்ட செந்நிலமாய்ப் புலமாறிக் கொண்டுளதே!*

*தென்புலத்தார் வடபுலத்தைத் திசைவென்று கொடிநாட்டி*
*வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த கதைகேட்டோம்!*
*வன்புலத்துச் செந்தமிழை வாழவைத்த கதைமாறிச்*
*சிங்களத்துப் புல்லியர்கைச் சிதைந்தழியக் கொண்டுளதே!*

*தென்னகத்துப் பெருஞ்சோழன் தேர்ந்தபடை முன்னனுப்பி*
*முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைகேட்டோம்!*
*முன்னகத்துச் சிங்களரை முறியடித்த கதைமாறி*
*என்னகத்துத் தமிழர்க்கே இடர்மிகுத்துக் கொண்டுளதே!*

*சிங்களரைச் சிதறடித்துச் சீர்த்திமிகு செந்தமிழர்*
*தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரோ?*
*தங்களது யாழகத்தில் தனித்தரசு நாட்டுவரேல்*
*மங்கிவரும் தமிழ்மானம் மண்ணுலகில் நிலைபெறுமே!*

**-1987**

## 91 தரை பிளந்து விழுங்குவாயே !

மழைவெள்ளம் மிகுந்(து)ஊரை அழிக்கையிலே
மகிழ்ச்சியுடன் பாட்டியற்றிப் பாடுவோமா?
கழைமிகுந்த காட்டுத்தீ நகர்பற்றிக்
கருக்கையிலே இலக்கியங்கள் கதைக்குவோமா?
குழைவுற்ற சேற்றுக்குள் புதைபடுங்கால்
கூட்டங்கள் விழாக்களென எண்ணுவோமா?
தழைவின்றித் தமிழினந்தான் இலங்கையிலே
தான்மடிய, இவையிங்கே தேவைதாமோ?

சூல்கொண்ட பெண்ணொருத்தி கருக்கலைந்து
துடிக்கையிலே கணவன்யாழ் மிழற்றுவானோ?
கால்கொண்ட சூறைவளி சுழற்றுகையில்
கவின்கூரை குடிலுக்கு வேய்குவோமா?
தோல்வழன்று கழலுகையில் பொன்னணிகள்
துவளும்வகை மனைவிக்குப் பூட்டுவோமா?
மால்கொண்ட தமிழினந்தான் இலங்கையிலே
மாள, இங்கே கலை, காட்சி தேவைதாமோ?

அமைச்சரெலாம் தமிழகத்தில் நாளெல்லாம்
பொழுதெல்லாம் அரசுவிழாக் குளிக்கின்றார்கள்!
நமைச்சலுறும் உள்ளத்தால் வேடிக்கை
விளம்பரங்கள் விளையாடிக் களிக்கின்றார்கள்!
குமைச்சலுறக் கத்துகின்றார் கமறுகின்றார்,
கணமெல்லாம் இலங்கையிலே தமிழமக்கள்!
எமைச்சுமக்கும் தமிழ்நிலமே! இவைபொறுக்க
இயல்கிலையே! தரைபிளந்து விழுங்குவாயே!

-1987

## 92 புலியோ புலி!

*புலியோ புலிபுலி புலிபுலி!*
*பொங்கிப் பாயும் மறப்புலி!*
*வலிவோ வலி! ஆனால் இந்திய*
*வஞ்சப் படைக்குப் பலி பலி பலி!*

*ஆண்ட தமிழர் மாண்ட உரிமை*
*அனைத்தும் மீட்கும் திறப்புலி!*
*நீண்ட முயற்சி செய்து கழுத்தை*
*நெரித்த படைக்குப் பலி பலி பலி!*

*செந்தமிழ் மறவன் பிரபா கரனின்*
*சீறும் மறவர் புலிப்படை*
*இந்தியப் படைக்குத் தவிப்புக் காட்டி*
*ஈகம் செய்தது வெளிப்படை!*

*ஈழத் தமிழர் உரிமை கோரும்*
*எழுச்சி கொண்ட வீரர்கள்!*
*பாழும் இனத்தை மீட்கத் துணிந்த*
*பாண்டிய சோழ சேரர்கள்!*

*அடிபட் டோய்ந்த புலிகள் மீண்டும்*
*அதர்ந்து வீறும் நாள்வரும்!*
*குடிகள் அழுத கண்ணீர் அவர்க்குக்*
*கொடுமை வீழ்த்தும் வாள்தரும்!*

**-1987**

## 93 பகை வென்றிட விலையெனில் முழு இனம் விழுமே !

கோரிடக் கோரிடக்
கொஞ்சமும் இரங்கிலாக் கொடியர்
நேரிடைப் பேச்சென
நீண்ட இடைவெளி செய்தார்!
ஆரிடர்ப் படுபவர்?
ஐயகோ, தமிழீழ மக்கள்!
போரிட்டு வெல்கவே
பொங்கி யெழுந்து, நம் புலிகள்!

சிற்சில பூசலில்
சிக்கிநாம் இணைந்திடாச் சிறுமை
கற்சுதை போலப்
பொடிந்துநம் கதையினை முடிக்கும்!
பற்சிதை வுற்றிட
முகவாய் பொடிந்திடப்-புலிகள்
முற்பகை வென்றிட
விலையெனில் முழுஇனம் விழுமே!

-1987

## 94 இனம், நிலம் மீட்க இணைந்து செய்க !

*அட! அட! தமிழனே! நீ*
*ஆர்க்கிறாய்; வேர்க்கி றாய்; பின்*
*ஆரேனும் சவுண்டன் வந்தே*
*அடக்கினும் அடங்கிக் கொள்வாய்!*
*கெடக்கெடச் சுவையும் கண்டாய்!*
*கீழ்மை,உள் ளரிப்பும் கொண்டாய்!*
*கேடுகள் உணர்வாய்; ஆனால்,.*
*கெடுகிறாய்; கெடுகின் றாயே!*
*சுடச்சுட ஒளிரும் என்று*
*சொல்வார்கள் பொன்னை! நீயோ*
*சுட்டதும் கரியாய்ப் போவாய்!*
*சுருண்டிடும் அட்டை யாவாய்!*
*'படப்பட அறிவு வீறும்'*
*பட்டறி வுரை, ஈ தென்பார்!*
*பயனிலை உன்னி டத்தில்!*
*படப்படப் பட்டே போனாய்!* 1

*இலங்கையில் எழுச்சி கண்டே*
*இங்குள்ள தமிழர் எல்லாம்*
*இதோ,நம் இனத்திற் கென்றே*
*எழுந்ததோர் ஆட்சி என்றார்!*
*துலங்கிடும் தமிழர் வாழ்க்கை*
*தோன்றிடும் உரிமை என்றார்!*
*தோன்றிய எழுச்சி நீண்டு*
*தொடர்ந்தது! தொடர்ந்த தந்தோ!*
*கலங்கினர், உடல், உள்ளங்கள்!*
*கதறினார்; கருகிச் செத்தார்!*
*கணக்கிலாத் தமிழர் கூட்டம்*
*கரைந்தது கரைந்த தந்தோ!*
*நலங்கிளர்ந் தெழும்என் றே,நாம்*
*நாட்குநாள் காத்தி ருந்தோம்!*
*நண்ணிய திறுதி நாளும்!*
*நரித்தனம் வென்ற தையா!* 2

ஓநாயும் நரியும் கூடி
ஒப்பந்தம் பேசித் தீர்க்க,
ஓங்கிய கோபு ரம்போல்
ஒடிந்தன கனவெல் லாமும்!
பீ நாசி மணந்த துண்டோ?
பேய்ச்செய வர்த்த னாவும்
பிழையான இராசீ வும்'- தாம்
பேசிய தாரே கண்டார்?
பூநாறும் கூடைக் குள்ளே
புலவுநா றியதைப் போலப்
புலிவீரம் மாறிப் போன
புதுக்கதை கேட்டோம், அம்மா!
பாநூறு பாடி வெற்றி
பராவிடக் காத்த உள்ளம்
பதைத்தது; கொதித்த தந்தோ!
பழுத்ததோ அடிமைக் காய்தான்!

நெடுமரம் ஒன்றில் ஏறி
நெட்டுக்கே வீழ்ந்த தைப்போல்
நெடுங்கடல் '*பயணம்*' செய்தே
நீருக்குள் மூழ்கி னாற்போல்
கொடுவாளின் பிடிசெய் யப்போய்க்
குத்திட்டு மாண்ட தைப்போல்
குரல்எழ மருந்து தின்று,
குடல்வெந்து செத்த தைப்போல்
விடுதலை வேண்டிச் செய்த
வீரப்போர் முடிவில் மக்கள்
விடிவில்லா அடிமைப் பட்டு
வீழ்ந்ததை என்ன சொல்வோம்!
கெடுதலை ஊழ்தான் செய்த
கெடும்பென்றே எண்ண லாமா?
கீழ்க்குணம் அழியா மக்கள்
என்றுமே அடிமை தானா?

எந்தமிழ் இனமே! இன்னும்
எத்தனை ஊழிக் காலம்,
எத்தனை ஆட்சி யோர்க்கே,
இருப்பாய்,நீ அடிமை யாக?
சொந்தத்தைப் பகைக்கின் றாய், நீ!
சொந்தத்தை வெறுக்கின் றாய்,நீ!
சொந்தத்தை இரண்ட கத்தால்,
சூழ்ச்சியால் அழிக்கின் றாய்,நீ!
எந்தச்சூழ் நிலையி லும்,நீ
எதிரியை நம்பு கின்றாய்!
எதிரிக்கே உழைக்கின் றாய்,நீ!
எதிரியை வாழச் செய்வாய்!
செந்தமிழ் மொழியை நம்பு!
செந்தமிழ் இனத்தை நம்பு!
செந்தமிழ் நாட்டை மீட்க
ஒன்றுசேர்! செயல்முழக்கு! 5

**-1987**

## 95 சீரழிவும் செஞ்சோற்றுக் கடனும் !

சிங்களவக் கொடியர்
செயுந்தீங்கு போதாவென்(று)
இங்கமைதிப் படையென்றே
இந்தியப் படைதானும்
சென்று தமிழர்களைச்
சீரழிப்ப தென்னவோ?
சென்று தமிழரைச்
சீரழிப்ப தென்னவென்றால்,
என்றுந் தமிழினத்தை
ஈடேற வொட்டாமல்
நின்றென்றும் அடிமையராய்
நிலைப்படுத்தும் நோக்கமன்றோ?

ஆடவரைக் கொன்றும்
அரிவையரைக் கற்பழித்தும்
காடையர் சிங்களவர்
செய்துவந்த கயமையையே
இந்தியப் படைஞரும்
செய்கின்றார் என்றறிந்தும்
நந்தமிழ ருள்,சிலரும்
நயப்படுத்தல் தாம்உண்ணும்
செஞ்சோற்றுக் கடனென்று
செப்பிடவும் வேண்டுதற்கே!

1987

## 96 யாருக்காக அழுகிறாய் ?

*யாருக்காக அழுகிறாய் மகளே!-நீ*
*யாருக்காக அழுகிறாய் மகளே!*
*ஊருக்கா அழுகிறாயா?-இல்லை,*
*உனக்காக அழுகிறாயா?* *(யாருக்காக)*

*நேருக்கு நேராகவே*
*நின்றுசுடும் கொலைஞர்களைப்*
*பேருக்கு அமைதிப்படை*
*எனும்பெயரால் அனுப்பினரோ?* *(யாருக்காக)*

*வேருக்குள் வெந்நீர்விட்டே*
*விளையும் என்றே கொன்னாரோ?*
*நீருக்குள் நஞ்சை ஊற்றி*
*நீயருந்தத் தந்தாரோ?* *(யாருக்காக)*

*பெற்றவரைக் கொன்றாரோ?*
*பிணங்களின்மேல் குவித்தாரோ?*
*கற்றநிலை குலைந்ததுவோ?*
*கஞ்சிக்கும் வழியிலையோ?* *(யாருக்காக)*

**-1988**

## 97 ஓ ! பிரபாகரனே ! கதிர்க் கையனே நீ எங்கே இருக்கிறாய் ?

ஓ! பிரபாகரனே! கதிர்க் கையனே!
தமிழீழத்தின் அடிமையிருள்
போக்க வந்த வீரத்திருச்சுடரே!
தமிழினத்தின் தன்மான ஒளிவிளக்கே!
இந்திய நாய்களின் வேட்டை மானே!
நீஎங்கே இருக்கிறாய்?

உன்னைச் சுட்டுக் கொல்லப் போவதாய்
உன்ஆர்த்த அரியணை மேனிக்குக்
குறிவைத் திருப்பதாய்ச்
சொல்லிச் சொல்லி
எள்ளி நகையாடுகிறார்களே,
இராசீவின் வஞ்சக வேடர்கள்!
தஞ்சம் கோராத தமிழனே!
அஞ்சாமையின் தொகுப்பே!
நீ,எங்கே இருக்கிறாய்?

கனிவுக்குக் கைகொடுத்து,
கல்போன்ற நின்தோளை நீவி, - உன்
கழுத்துக்குக் கத்திவைக்கும் எத்தர்கள்,
உன்னைச் சுட்டுப் பொசுக்கக்
குறிவைத்துத் திரிகிறார்களாமே!
மறம் மாண்ட தோற்றமே!
அறம் மாண்ட தமிழினத்தின் ஆற்றல் மறவனே!
விழுப்புண் வேங்கையே!
நீ எங்கே யிருக்கிறாய், சொல்!

பேராண்மையனே! வீரப் பெரியோனே!
ஊறஞ்சா வெல்படைத் தலைவனே!
இந்திய எலிப் பகையை
உயிர்த்தழிக்கும் நாகமே!
உன் உயிர்க்கு விலைபேசிய போதும்,

உள்ளம் நடுங்காத
தமிழினத் தானைத் தலைமகனே!
உன்னை ஓர் இலக்கம்
கொல் படையும் ஊர் ஊராய்,
காடு காடாய்த்
தேடி வருகிறார்களாமே!

அடல் தகையும் ஆற்றலும் சான்ற
படை வேந்தனே!
உன் விளையாட்டுக்கு
முற்றுப் புள்ளி வைக்க,
இந்தியச் சூழ்ச்சிப் படைகள்
கைகளில் கருவி யேந்திக்
கண்களில் சூழ்ச்சி யேந்தி
உலா வருகின்றனவாமே!
நீ,எங்கே இருக்கிறாய்!
சொல் மகனே! சொல்!

கூற்றுடன்று மேல்வரினும்
கூடி எதிர்க்கும் ஆற்றலே!
வேல் கொண்டு எறியினும்
அழித்திமைக்கா விழித்த கண்ணனே!
இராசீவுக்கு,

உன் செங்குருதி வேண்டுமாம்!
உன் புடைத்து விம்மிய தோள்களும்
உடல் தசைளும் வேண்டுமாம்!
உடல் புதைபோய், உனை வீழ்த்த
வெறி கொண்டலைகிறது அந்த
வீணப் பிறவி!

எதிரி விரகர்களுக்கு
எரிமலையே! ஏற்றமே!
உன் தோற்றமே
தொள்ளாயிரம் இந்திய வீரர்களை
மலைத்தோடச் செய்யுமென்றால்
உன் நெஞ்சாங்குலையைத் தின்ன

நீட்டிய வேட்டெஃகத் தோடு,
அலையோ அலையென்று
அலைகின்றார்களாமே, இந்திய
வேட்டை நாய்கள்!
நீ எங்கே உழல்கிறாய்? சொல்!
எந்தக் காடு மேடுகளில்
அல்லாடுகின்றாய்? சொல்!

வெட்சிக் கானத்து
வேட்டுவர் ஆட்டும்
கட்சி காணாத
கடமா நல்லேறே!
புறநானூற்றுச் செல்வமே!
தமிழர் வீரப் புதையலே!
கடந்த ஐந்தாண்டுக் காலமாய்
நூறாயிரம் இந்தியக் கழுதைகள்
மேய்ந்து தின்றும்
நுனிமழுங்கவில்லை, - எம்
தமிழரின் வீரம் - என்று,
பனி உலகுக்குப் பறைசாற்றும்
பழம் பாண்டியத் திருமறமே!

சுழலும் இசை வேண்டி
உயிர் வேண்டா வீரனே!
உயிர் அஞ்சா மறவனே!
உலகில் வேறெந்த வீரனுக்கும்
இல்லாத ஓங்கிய பெருமை
உனக்குண்டு; உன் வீரருக் குண்டு!
உலகின் மூன்றாம் வலிமை வாய்ந்த
இந்தியப் படைக்கே சூளுரைத்தாய், நீ!
முயல் வேட்டை யன்று,நீ
விளையாடுவது!
யானை வேட்டை! ஆம்!
காட்டு யானை வேட்டை!

வீட்டுக்காக வன்று நீ போரிடுவது!
நாட்டுக் காக! தமிழீழ நாட்டுக்காக!

நாற்பத்தைந்து இலக்கம்
தமிழர்க்காக, உன் தோள்கள்
புடைத்து வீறு கொண்டெழுந்தன!
உன்னைச் சுற்றி ஓர் இலக்கம்
எதிரிப் படைப் போர் மறவர்!

நாலு பக்கம் வேடர் சுற்றிட
நடுவில் சிக்கிய மான்போல்,
நீ வேட்டையாடப் படுகிறாய்!
கழகத் தமிழினத்தின்
கவின் தொகுப்பே!
நீ எங்கே இருக்கிறாய்?

இலங்கையில் இராவணன் இருந்தாலன்றோ
உனக்குத் துணைவருவான்!
நீ இருப்பதோ, பகைவரின் வீடு!
நீ உழல்வதோ வல்லிருள் காடு!
உனக்குத் துணை உன் பீடு!
உருப்படுமா இந்த நாடு?
பகைவர் கைகளில்
அகப்படாத அருந்தமிழ்ப் பேறே!
அன்னைத் தமிழீழத்தின்
ஒரு தனி மகனே!

ஒப்பற்ற தமிழின வீறே!
முன்னை, கடந்த
ஈராயிரம் ஆண்டு
முதுமை அடிமை விலங்கை
முறித்தகற்ற வந்த சீரே!
முடிந்ததடா உன்னோடு
தமிழினத்தின் விடுதலைப் போரே!
அகன்ற வானின்
அல்லல் நிலாவே!
புகன்று விடு! நீ எங்கே
புறப்பட்டுப் போனாய்?
எங்கே இருக்கிறாய்?

ஐந்து கோடித் தமிழர்கள் இங்கே
உனக்காக அன்றாடம்
தவமிருக்கிறோம்!
உயிர் நோன்பு நோற்கிறோம்!
உன்னை நோக்கி
உழலும் உயிரைத் தேக்கி,
உன் கொள்கை முயற்சியை ஊக்கி
உனக்குதவுவோம் பகையைப் போக்கி!
செங்களம் துழாவும்
செங்கதிர்க் கையனே!

எங்களை விடுவிக்க வந்த ஏந்தலே!
எங்கே நீ இருக்கிறாய்!
அங்கே நாங்களும்
உன் உடனே இருக்கிறோம்!

அஞ்சாதே! நீ!
அனைவரும் உன்
உயிரோடு உயிராய்ப்
பின்னிப் பிணைந்திருக்கிறோம்!

ஆற்றல் மறவனே!
அமைந்ததடா விடுதலை ஈழம்!
அழியாமல் விளங்கிற்றடா உன் புகழ்!
நீ வாழ்க!
உன் கொடிவழி வாழ்க!

-1988

## 98 இட்ட சாவம் முட்டுக !

முண்டையின் மகனே! முண்டையின் மகனே!
கொண்டையில் லாத ஒழுகிய முழக்குழல்
கூர்த்த கலுழன் வெவ்வாய் மூக்கின்
ஆர்த்த செருக்கோ டாண்மையின் தோற்றத்து
நாவலந் தீவின் நாயகி யென்ன
மேவலந் திரிந்த அரசியல் மேனகை

ஆரியக் கெளடிலி - இந்திரா என்னும்
பூரியை பிதுக்கிய முண்டையின் மகனே!

சிங்களக் கொலைஞன் செயவர்த் தனன்எனும்
வெங்கணன் விரித்த வலையினில் விழுந்து
செந்தமிழ் இனத்தைச் சீரழித் திடவே
முந்து'இரா சீவ், எனும் முண்டையின் மகனே!

உலகப் பந்தின் உயிர்ச்செறி எம்மினம்
விலகாக் குறியினன் ஆகி, விதிர்ப்புற
யாழ்த்தமிழ் மக்களின் யாக்கைகள் எல்லாம்
போழ்த்துயிர் குடிக்கும் அரக்கப் பூதனே!

நீயுநின் துணையும் நின்னிரு மக்களும்
ஏயுமிவ் வுலகத்து இருக்குநாள் தோறும்
எந்தமிழ் நல்லினத் தேற்றம் குலைதலால்
வெந்தழி யும்நாள் விரைந்துனக் கெய்துக!

இடும்பைப் பிறப்பே! ஏழிரு கோடிக்
குடும்பம் அழிக்கும் கொடியனே! நின்னைக்
கடும்புலி வரியெனச் சாவு கவ்வுக!
திடுமென நினையொரு தீச்சுழல் சூழ்க!
சூழ்ச்சியும் அரக்கமும் அதிகாரச் சூழலும்
வீழ்ச்சி யுறுக! நின்னுடல் வெடித்துச்
சுக்குநூ றாகச் சிதறுக! சூதனே!
திக்கிநா விழுக்க! நெஞ்சு தெறிக்க!

எந்தமிழ் இளையரும் ஏழைப் பெண்டிரும்
நொந்துயிர் துடிக்கையில் உளக்குலை நொய்ந்தே
இட்ட சாவங்கள் இணைந்து கூடி
முட்டுக நின்னுயிர்! மூளி, நீ யாகுக!

தமிழினம் தகைக்கும் தருக்கனே! நின்குடி
அமிழுக! ஆங்கோர் அணுவின்றி அழிக!
தணலும்எம் நெஞ்சின் தவிப்பை
மணல்,நீர், தீ, வளி, வானம், - ஆற் றுகவே!

-1988

## 99 பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து !

*‘பிரபா கரன்’எனும் பிள்ளை வேங்கை*
*உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து*
*திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!*
*பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன் - அவன்*
*உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!*
*ஓங்குகவன் புகழென்றே*
*ஒலிப்பாயே முரசம்!*

*இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!*
*கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து, அவன்*
*சிந்திய அரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!*
*பிந்திய தமிழ்மறம் பேணிப் புரந்தான்! - அவன்*
*வந்தலர்ந்த நாள்மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்!*
*வளர்கஅவன் புகழென்றே*
*மீட்டுகவே யாழும்!*

*மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!*
*இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!*
*திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த*
*சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்! - அவன்*
*பிறந்தொளிர்ந்த நாள்நினைந்து பேரிகையே முழங்கு!*
*பெற்றான்காண் பெரும்புகழும்!*
*பிளிறுகவே வேழம்!*

**-1989**

## 100 மாவீரர் நாளிலே, மலர்க தமிழீழமே !

மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

தமிழீழப் புலிகள் தாயகம் மீட்டிட
உமிழ்ந்த - உமிழ்கின்ற உயிர்களை வணங்கிடும்
மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

நாவீரம் பேசிடும் அரசியல் நடிகர்கள்,
மக்களை நசுக்கிடும் நயவஞ்சகக் கொலைஞர்கள்,
காவி உடையணி புத்த பிக்குகள்,
கயமை மலிந்திடும் சிங்களக் காடையர்

மேவுமிக் கொடியரை மிதித்துப் போர்செய்து,
மின்னுல[1] கெய்திய தமிழீழ இளைஞரின்
இன்னுயி ரெல்லாம் எழுச்சியாய் விளைகின்ற
மாவீரர் நாளிது! மாவீரர் நாளிது!
மக்கள் உரிமைகள் மலர்கின்ற நாளிது!

உடல்களை விதைகளாய், உணர்வை உரங்களாய்,
விடலையர் குருதியே வீழுசெம் புனலாய்
விதைத்தனர் வீரம், வேளாண்மை நடந்தது!
கதைத்த தமிழீழக் கருத்துகள் விளைந்தன!

மாவீரர் நாளிது; மாவீரர் நாளிது!
ஆவிகள்[2] மகிழ்கின்ற அருமை நாளிது!
மாவீரர் நாளிலே, மலர்க தமிழ் ஈழமே!

-1990

1. மின்னுலகு – புகழ் உலகு.
2. ஆவிகள் – மறைந்த மாவீரர் உயிர்கள்.

## 101 அனைத்துத் தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்!

அவன்தான் தமிழின வீரன்! - அற்றை
நிலந்தரு திருவில் மாறன்! - கரிகாற்
சோழன்! இமய நெடுஞ் சேரன்!

(அவன்தான்)

சிவன், திரு மால் - எனச் செப்பிடும் முதல்வன்!
சேண்நெடுந் தமிழினப் புதல்வன்! - கடும்பெருந்
தவம் செய்து தமிழ்த்தாய் பெற்றநல் மறவன்!
தரையெலாம் சென்றுவாழ் தமிழர்க்கு உறவன்!

(அவன்தான்)

கதிர்க்கையன் எனும்பிர பாகரன் அவன்தான்!
காளையர் வழிபடு தலைவனும் அவன்தான்!
புதிர்க்கொரு புதிர்-அவன்! புரட்சியின் வடிவம்!
பூக்கின்ற விடுதலை விடியலின் படிவம்!

(அவன்தான்)

நிலத்தினைக் குடைந்து - உள்ளே புகுந்து வாழ் வானோ?
நிலாவினில் சென்று - அவன் மறைந்து வாழ் வானோ?
புலத்தினை விடுவிக்கும் கோள், அவன் கோளே!
புறப்பகை வென்றிடும் தோள், அவன் தோளே!

(அவன்தான்)

கார்த்திகை எனும்நளி மாதத்தில் பிறந்தான்!
காத்திடும் இனநலப் போரினில் சிறந்தான்!
ஆர்த்திடும் புலியெனக் களத்தினுட் சென்றான்!
அனைத்துத் தமிழர்க்கும் தலைவனாய் நின்றான்!

(அவன்தான்)

-1991

## 102 மானங் கெட்டதுகளும்! மதி கெட்டதுகளும்!

மானங்கெட்ட நெடுஞ்செழியன்,
மதிகெட்ட வீரப்பன், இராசா ராமன்,
தானுங்கெட்ட தல்லாமல்
தமிழரையும் கெடுக்கின்ற சோம சுந்தரன்
ஏனிங்கே இறவாமல்
இன்னுமிருக் கின்றாரென் றெண்ணு மாறாய்
ஊனுடலில் உயிர்க்கின்ற
உருவங்க ளேயிவரென் றெண்ணு வீரே!

ஈழப்பு லிகளேசெய்
தாரென்னும் பேரெத்தன், பிறந்த ஊராம்
வாழப்பா டி, என்னும்
பெயர் கெடுக்க வந்துநிற்கும் இராம மூர்த்தி,
தாழப்போ கின்றசெய
லலிதாவெ னும்தளுக்குக் காரி யெல்லாம்
வீழப்போ கின்றசெய்தி
விரைவாகக் கேட்கும்தமிழ் நாடு மிங்கே!

-1991

## 103 எனைச் சிறை செய்யினும் செய்க !

இதோ, நான் ஒருவன்
இங்கிருக் கின்றேன்!
எனைச் சிறை செய்யினும் செய்க!
ஈழத் தமிழரை
ஆதரிக் கின்றேன்!
என் தலை கொய்யினும் கொய்க!

அதோ,என் தமிழரைச்
சிங்களர் கொல்வார்!
ஆடும் என் சதை, நரம்பு எல்லாம்!
அடடா! உலகம்
கேட்டிடும்; பார்த்திடும்!
ஆயினும் அதன் மனம் கல்லாம்!

'எழுதினால் பேசினால்
சிறையிடு வோம்' - என
எந்தமிழ் அரசுகூ றிடுமோ?
எவளோ ஒருத்தி
எமைஆள் வதனால்
எம்முடல் உணர்வுமா றிடுமா?
பழுதிலாக் கொள்கையால்
உரிமை கேட் கின்றார்!
பதடிகள் அதைத்தவ றென்பதா?
பற்பல இளைஞர்கள்
பெண்கள் சா கின்றார்;
பார்த்துக்கொண் டே,மலம் தின்பதா?

இந்தியர் என்றால்
இரும்புஅவர் உள்ளம்!
ஈழத் தமிழர்எம் இனமே!
எங்கவர் வாழினும்
எம்மவர் அன்றோ?
இவர்க்குயிர் துடிக்கும்,எம் மனமே!
வெந்துயிர் விடுபவர்

*மக்களே என்றால்*
*வெறும் அர சியல் நோக்கு எதற்கு?*
*வேற்று நாட் டினர்எனில்*
*பாலத் தீனர்,ஆப்*
*பிரிக்கருக் கிரங்குதல் எதற்கு?*

**-1991**

## 104 ஆகுமோ உலகு, அவள் அழிவிலாப் புகழ்க்கே?

*மானமும் உயிரும் வாழ்வும் கருதி*
*வானமும் நிலமும் நீரும் கடந்து*
*கானமும் புகுந்து களத்தினும் நெரிந்து*
*தானும் குடும்பும் இனமும் இடர்ப்பட*
*ஆயிரம் ஆயிரம் இளையரும் பெண்டிரும்*
*மாய்வதும் திரிவதும் ஆகிய நிலைகொள்*
*ஈழத் தமிழர் இடையினில் தோன்றிக்*
*காழ்த்த நெஞ்சின் கன்னி இளமுகை -*
*தன்னையும் இழந்து தமரையும் இழந்த*
*அன்னைக் குலத்தோர் அறங்கூர் மறத்தி -*
*தானுவென் பெயரினள் தன்னினம் அழித்த*
*வீணனுக் கெதிரா வெகுண்ட வெஞ்சினம்*
*நெஞ்சினும் உயிரினும் நிலைத்த நினைவொடு*
*ஒருதனி நின்றே ஊர்நடு சிதைத்த*
*ஈக மன்றோ ஈகம்!*
*ஆகுமோ உலகவள் அழிவிலாப் புகழ்க்கே?*

**-1992**

---

**(திணை : மூதின்முல்லை, துறை : அறங்கூர் மறம்)**

## 105

## வெட்கப் படுவதே நல்லது; அதனினும்
## துட்கென உயிரைத் துறப்பதும் நல்லதே !

*உலகெலாம் பரவிய உயிர்தமிழ் இனத்தின்*
*நலமெலாம் மீட்கவும் நல்லரசு ஒன்றைத்*
*தமிழீ ழத்தில் தழையச் செய்யவும்,*
*இமிழாத விழியனாய் - இளைக்காத நெஞ்சனாய்*
*ஆர்க்கும் புலியென அன்றன்றும் புதுப் புதுப்*
*போர்க்களம் காணும் புரட்சி வேந்தனாய்ப்*
*பீடுற நிற்கும் பிரபா கரனை,*
*ஈடிலா மறவனை - எம்மினத் தலைவனை,*
*இனத்தோன்றல் ஒருவனை - எச்சில் சோற்றுக்கு,*
*மனச் சான்றைத் தின்ற மாகொடி யன்கள்*
*காட்டி கொடுக்கும் கயமையை என்னென்போம்?*

*கூட்டிக் கொடுக்கும் குடல்நிரப் பிகளே!*
*நமரின் நலம்பெற நனிவிரும் பாத*
*குமரி அனந்தக் கோடரிக் காம்புகளே!*

*பதவியும் பணமும் பல்லிளிப் புக்கே*
*உதவியாய் வருமெனில் உருகி நின்றே*
*கயிறு திரிப்பதே வாழ்க்கையாய்க் கருதி*
*வயிறு பிழைக்கும் வாழப்பா டிகளே!*

*மண்டிய அடிமை மயக்க உணர்வின்*
*திண்டி வனத்தின் இராமமூர்த் திகளே!*
*'போபர் சு' புகழ் இராசீவ் புளுகனை*
*மாபெரும் தலைவனாய் மதித்து வணங்கும்*
*மூப்பனார் போலும் மூங்கை உடல்களே!*

*ஆப்பினை அசைத்த அழிகுரங் குகளாய்ப்*
*பார்ப்பனச் செல்வியின் பாதத்தில் வீழ்ந்தே*
*ஊர்ப்பணக் கொள்ளைக்கு அமைச்சராய் ஒழுகி*
*எட்டி உதைக்க எங்கேயோ கிடக்கும்*
*பட்டிவீ ரப்ப இராசாரா மன்களே!*

*நீங்கள் அனைவரும் நெடுந்தமிழ் மரபின்*
*ஓங்கிய பிறவியைத் தாங்கிய தற்கே*
*வெட்கப் படுவதே நல்லது; அதனினும்*
*துட்கென உயிரைத் துறப்பதும் நல்லதே!*

-1992



ஒற்றைத் தமிழ்மகன் உள்ளவரை, உள்ளத்தே
அற்றைத் தமிழ்த்தாயிங் காட்சி புரியும்வரை,
எற்றைக்கும், எந்நிலத்தும், எந்த நிலையினிலும்
மற்றை இனத்தார்க்கே மண்டியிடான்; மண்டியிட்டால்
பெற்றவர்மேல் ஐயம்; பிறப்பின்மேல் ஐயமெனச்
சற்றும் தயக்கமின்றிச் சாற்று!

